# அரங்கத்தில் அறிமுகம்



உவமைக்கவிஞர்

**சுரதா**

மணிவாசகர் பதிப்பகம்

# அரங்கத்தில் அறிமுகம்

உவமைக்கவிஞர்

**சுரதா**

**மணிவாசகர் பதிப்பகம்**
31, சிங்கர் தெரு, பாரிமுனை,
சென்னை-600108.

முதல் பதிப்பு : 23, நவம்பர், 2010


திருவள்ளுவர் ஆண்டு : 2041

விலை : ரூ. **80.00**

மொத்தப் பக்கங்கள் : 144

அளவு : (டெம்மி) 1 x 8

மணிவாசகர் வெளியீட்டு எண் : 1759



நினைவில் வாழும் நிறுவனர்
ச. மெய்யப்பனார்
அண்ணாமலைப் பல்கலைக் கழக
முன்னாள் தமிழ்ப் பேராசிரியர்.
பல்கலைக் கழகங்கள்
பலவற்றில்
அறக்கட்டளைகள் நிறுவியுள்ளார்.
**'வள்ளுவம்'** இதழின்
நிறுவன ஆசிரியர்.
குன்றக்குடி அடிகளார்
**'தமிழவேள்'** என்றும்,
தருமபுரம் ஆதீனத் தலைவர்
**'செந்தமிழ்க் காவலர்'** என்றும் விருதுகள்
வழங்கிச் சிறப்பித்துள்ளனர்.
**'பதிப்புச் செம்மல்'** என
அறிஞர்கள் இவரைப் பாராட்டுவர்.

நூல்கள் கிடைக்குமிடங்கள்:

**மணிவாசகர் நூலகம்**

12-B, மேல சன்னதி,
**சிதம்பரம்** - 608001.
**✆:04144-230069**

31, சிங்கர் தெரு,
பாரிமுனை,
**சென்னை** - 600108.
**✆:044-25361039**

6, சிவஞானம் தெரு,
தி. நகர்,
சென்னை - 600017.
**✆:044-24357832**

110, வடக்கு ஆவணி மூல வீதி,
**மதுரை** - 625001.
**✆:0452-2622853**

15, ராஜ வீதி,
**கோயமுத்தூர்** - 641001.
**✆:0422-2397155**

296/134, செரி சாலை,
**சேலம்** - 636007.
**✆:0427-3207722**

28, நந்தி கோயில் தெரு,
**திருச்சி** - 620002.
**✆:0431-2706450**

அச்சிட்டோர் : மணிவாசகர் ஆப்செட் பிரிண்டர்ஸ்,
சென்னை – 600 021, தொலைபேசி : 25954528

# கிடைத்தவற்றைத் தொகுத்துள்ளோம்!

மணிவாசகர் பதிப்பகம் கவிஞரின் அனைத்து எழுத்துக்களையும் வெளியிட விருப்பம் தெரிவித்த பின்னர் சுறுசுறுப்பாக என் இலக்கிய இதயம் பணியாற்றத் துவங்கியது.

வெளிவந்த நூற்களை செப்பனிட்டும், அதனுடன் சிறுசிறு வெளியீடுகளை இணைத்தும் ஒழுங்கு செய்தேன்.

வெளிவராத உவமைக்கவிஞர் சேகரித்து வைத்திருந்த பல கவியரங்கக் கவிதைகள் பழுதடைந்த நிலையில் இருந்தன. அவற்றில் தேவையான, சிறந்த, ஒழுங்குப்படுத்த முயன்ற எழுத்தோவியங்களைத் தொகுத்தேன்.

அவர் தனது இதழில் சில கவியரங்கக் கவிதைகளை **'அரங்கத்தில் அறிமுகம்'** என்று பெயரிட்டு வெளியிட்டிருந்தார். அப்பெயரையே இத்தொகுப்பிற்கும் வைக்க முடிவு செய்தேன்.

ஏறத்தாழ 2500 கவியரங்கங்களுக்குத் தலைமையேற்று, சுமார் 1500 கவிஞர்களுக்கு மேல் அறிமுகம் செய்து புதிய சாதனை புரிந்தவர் என் தந்தையார் உவமைக் கவிஞர் சுரதா அவர்கள்.

அவர் மற்றவர்கள் தலைமையில் பாடிய கவிதைகள் நான்கு மட்டுமே. ஆனால் எல்லாக் கவியரங்கக் கவிதைகளும் கிடைக்கப் பெறவில்லை. கிடைத்தவற்றை மட்டுமே இரு தொகுப்பாக்கியுள்ளோம். ஒன்று **'அரங்கத்தில் அறிமுகம்'**, மற்றொன்று **'தோரணவாயில்'**.

தமிழ்கூறும் நல்லுலகம் உவமைக் கவிஞரின் கவியரங்கக் கவிதைகளைப் படித்து பயன் பெறவேண்டும் என்ற அடிப்படையில் இந்நூலை வழங்கியுள்ளோம்.

என்றென்றும் அன்புடன்,

**சுரதா கல்லாடன்**

# வானொலிக் கவியரங்கம்

மலேசியா - 25.6.1979.

## வீடு

### தலைவர் - கவிஞர் சுரதா

**பாடுவோர்**

வரவேற்பறை - சா.ஆ. அன்பானந்தன்
குளியலறை - வீரமான்
சமையலறை - பாதாசன்
படுக்கையறை - காரைக்கிழார்

### தலைவரின் முன்னுரை

இந்த நாட்டுக் கென்முதல் வணக்கம்.
சந்தச் செந்தமிழ்த் தாய்க்கென் வணக்கம்
பாட்டெனும் அமுதம் படைக்க வந்துள
வெற்றிக் கவிஞர்க்கென் விரல்மொட்டு வணக்கம்
அறையில் அமர்ந்துளோர் அனைவர்க்கும் வணக்கம்
அப்பால் இருப்போர் அனைவர்க்கும் வணக்கம்.

# வீடு

காடென்றால் மரங்களங்கே நிறைந்தி ருக்கும்
காட்டினிலே விலங்கினங்கள் வாழ்ந்தி ருக்கும்
வீடென்றால் பெண்டுபிள்ளை இருப்பர். அந்த
வீட்டினிலே சமையலறை ஒன்றி ருக்கும்
பாடுபடும் ஏழைமக்கள் இல்லந் தன்னில்
படுக்கையறை இருந்தாலும் இருக்கு மன்றி
கூடுதற்கங் கோரறையும் உடம்பைத் தேய்த்துக்
குளிப்பதற்கங் கோரறையும் இருத்தற் கில்லை.

வசதியுள்ளோர் இல்லத்தின் முன்பக் கத்தில்
வரவேற்கும் அறையிருக்கும் வருவோர் ஆங்கே,
அசதியோடு வந்தாலும், வந்த பின்னர்
அழகான சோபாவில் அமரக் கூடும்;
பசிப்பிணியால் வாடுபவர் இல்லம் தன்னில்
படுக்கையறை குளியலறை இருப்ப துண்டோ?

சமையலறை இல்லையென்றால், உண்ணும் சோற்றைச்
சமைப்பதற்கு முடியாது. வைய கத்தில்
சமைந்தபெண்கள் இல்லையென்றால், ஆட வர்க்குச்
சம்போகம் எனுமின்பம் கிடைத்தி டாது.
நமக்கெல்லாம் படுக்கையறை மிகவும் தேவை
நாள்தோறும் குளிப்பதற்கோர் அறையும் தேவை.

நல்லதொரு வீட்டினிலே இருப்ப தான
நான்குவகை அளவுகளையும் பற்றி இங்கே,
வெல்லுகின்ற செந்தமிழில் கவிதைபாட,
விரிகதிரோன் தோன்றுகின்ற காலைப் போதில்
மல்லிகைப்பூக் கவிஞர்பலர் வந்துள் ளார்கள்.
வானொலியின் நல்லழைப்பை ஏற்றுக் கொண்டு
கல்லாரும் கற்றோரும் உற்றுக் கேளீர்
கவிஞர்களே வாருங்கள் பாடு தற்கு.

அறிமுகம்:

### சா. ஆ. அன்பானந்தன் - வரவேற்பறை

சிறுமீன் கதைகள்; திமிங்கில நாவல்கள்
அடிக்கடி எழுதும் அன்பா னந்தன்,
தமிழை உயிரென மதிக்கும் தமிழ்க்கவி
சான்றோர் போற்றும் சமூகக் கலைமணி

கூடுதுறை அறிந்து கூடத் தெரிந்தவன்
கோவலன்! இலக்கியக் குமரனாம் இவரோ,
பாடுதுறை அறிந்து பாடத் தெரிந்தவர்.

வணக்கம் வாழ்க! வருக வருக!
எனவர வேற்கும் இவரிப் போது
வரவேற் பறையை வர்ணித்துப் பாடுவார்.

இடையுரை:

சட்டியில் பாதி, சட்டுவத்தில் பாதி
இட்ட கலத்தில் இருப்பது மீதி
என்றுதம் கவிதை இலக்கிய விருந்தினை
வரவேற் பறையில் இதுவரை வழங்கிய
பலாச்சுளைக் கவிஞரைப் பாராட்டு கின்றேன்.

அறிமுகம்:

**வீரமான் - குளியலறை**

இரும்பைத் திருகி இட்டாற் போன்று
கொம்புள்ள விலங்கது குதித்தோடும் புள்ளிமான்
நாடிவந் தோர்க்குக் கோடி கோடியாய்
வள்வல் ஒருவன் வாரி வழங்கினான்
அந்த வள்ளல்யார்? அவன்தான் அதியமான்.

இங்கமர்ந் திருக்கும் இந்த வீரமான்
கவிதைகள் புனைந்து பாடும் கவரிமான்
இயற்கை வீரமும் இலக்கியச் சாரமும்
நன்கமையப் பெற்ற நமது வீரமான்
வெள்ளை நிலவில் வீடொன்று கட்டிட
விரும்பும் கவிஞர். வெற்றியைப் பெற்றே
திரும்பும் கவிஞர். செந்தமிழ்க் கலைஞர்
இந்தக் கவிஞர் இப்போ திங்கே
குளிய லறைதனைக் குறித்துப் பாடுவார்.

இடையுரை:

உள்ளத்தின் அழுக்ககற்றும் உந்தியிலா மாந்தன்
உடலழுக்கைக் கழுவுவதற்குக் குளியலறை வேண்டும்.

அறிமுகம்:

***பாதாசன்* - சமையலறை**

சிறுகதை; அதனினும் சின்னஞ் சிறுகதை
கடுகுபோல் சிறுத்த கதையாம்! அதன்பேர்

கடுகுக் கதையாம்! அத்தகு கதைகளை
ஏட்டினில் எழுதிக் காட்டிய கவிஞராம்
பாதாசன் என்பவர் - பற்பல துறைகளில்
வல்லவர். நட்புக்கு மிகவும் நல்லவர்.
பட்டிமன் றத்தில் பாங்குறப் பேசவும்,
பழுத்த செய்யுள் படைக்கவும் வல்லவர்.

கவிகாள மேகம் என்னும் கவிஞன்
சமையல் அறையில் சாதம் சமைத்தவன்.
ஆயினும் அன்னவன் அவன்தொழில் குறித்துப்
பாட மறந்தான். பாதாசன் அவர்களோ
அவன்பாட மறந்த அச்சமைய லறையின்
சிறப்பை விளக்கிச் சிறப்புடன் பாடுவார்.

*இடையுரை:*

பாட்டுக்கு யாப்புறவு நட்புச் சேர்க்கும்
படுக்கைக்குப் பெண்ணுறவு பெருமை ஊட்டும்
வீட்டுக்குச் சமையலறை உயிர்கொ டுக்கும்.

அக்காலச் சமையலறை ஆட்சி முற்றாய்
ஆண்களிடம் இருந்ததற்கு நளனே சாட்சி
இக்காலம் பெண்களிடம் பறிபோ யிற்றே
எழில்தமிழர் ஆட்சிபறி போன தைப்போல்

என்கிறார் கவிஞர். இந்தக் கவிஞரின்
உள்ளக் குமுறல் ஒலிகடல் கடந்து
தமிழ்நாட்டு மக்களைத் தட்டி எழுப்பும்.

*அறிமுகம்:*

***காரைக்கிழார் - படுக்கையறை***

வெண்பொன் என்னும் வெள்ளியைக் காட்டினும்
செந்தீயில் வெந்த செம்பொன் சிறந்தது.
எண்ணற்ற பூக்கள் குளத்தில் இருப்பினும்
தண்ணீர்ப் பூக்களுள் தாமரை சிறந்தது -

இங்கும் அங்கும் இதுவரை தோன்றிய
காவியக் கவிஞர் பலரைக் காட்டினும்
அம்புபட் டிறந்த கம்பனே சிறந்தவன்.

இலக்கிய வானில் இணையற்று விளங்கும்
கவிச்சுட ராகிய காரைக்கிழாரெனும்
இக்கவி எப்படிப் பட்டவர் என்றால்,
பூவினில் தாமரைப் பூவைப் போன்றவர்.
பொன்னில் ஆடகப் பொன்போற் சிறந்தவர்.
தலைப்பில் லாக்கதை என்னும் தலைப்பில்
கதையொன்று முதன்முதல் எழுதிய கவிஞர்.
மலேசிய நாட்டிற் பிறந்த மணிக்கவி
அலையோசை என்னும் அறியதோர் காவியம்
படைத்துக் காட்டிய பாவலர் திலகம்.
கடியலூர் உருத்திரங் கண்ணனார் அவர்தம்
பாட்டு நூலுக்குப் பரிசுபெற் றாற்போல்
பாவலர் இவரும் பரிசு பெற்றவர்.

படிக்கும் அறைதனில் பாப்புனைந் திடுமிவர்
படுக்கையறை பற்றி இப்போது பாடுவார்.

*இடையுரை:*

விலகத்தான் நினைப்பாரோ விடியு மட்டும்
விளைகின்ற படுக்கையறை இன்பம் கண்டார்?

என்றிவர் கேட்கும் இலக்கியக் கேள்வியும்-
படுத்துறங்கி எழுபவர்க்குப்
படுக்கத்தான் படுக்கையறை
படித்துணர்ந்து விழிப்பவர்க்குப்
படிக்கத்தான் படுக்கையறை
கண்ணகிக்குப் பாதிநாள்

கண்ணீரால் நனைந்த அறை
கலிங்கத்துப் பரணிவரக்
கதவடைப்புச் செய்தஅறை
என்னும் அடிகளும் என்னைக் கவர்ந்தன.

முடிவுரை:

மேல்வந்து சூரியன் மிதக்கும் வேளையில்
நால்வரும் மிகமிக நன்கு பாடினர்.
வரவேற் பறைதனை வர்ணித்தார் ஓர்கவி
படுக்கை யறைதனைப் பாடினார் ஓர்கவி
குளிய லறைக்குக் கூப்பிட்டார் வீரமான்
சமையல் அறையில் பாதாசன் சமைத்தார்.

தவித்த வாய்க்குத் தண்ணீர் கிடைத்தல்போல்
கவிச்சுவை கிடைத்தது. கருத்தும் கிடைத்தது.
இதுவரை -
நாம்பெற்ற இன்பம் நல்லின்பம் அன்றோ?

**வணக்கம்!**

# வானொலிக் கவியரங்கம்

மலேசியா - 25.6.1979.

## விளக்கு

*தலைவர் - கவிஞர் சுரதா*

*பாடுவோர்*

கதிர் விளக்கு - சங்கு சண்முகம்
நிலா விளக்கு - காசிதாசன்
மின் விளக்கு - டி.எஸ். பொன்னுசாமி
எண்ணெய் விளக்கு - ரெ. சண்முகம்

### தலைவரின் முன்னுரை:

கதிர்விளக்கு வானத்தில் தோன்றித் தோன்றிக்
கண்சிமிட்டா தெரிகின்ற விளக்கு. மற்றோர்
எதிர்விளக்கே அதற்கில்லை; அதனை வானில்
ஏற்றிவைப்ப தாரென்றும் தெரிய வில்லை.
மதுரைமண்ணில் வீழாத கதிரோன்; தண்ணீர்
மயானத்தில் அன்றாடம் சாகக் கண்டேன்
எதற்காக அன்றாடம் அந்திப் போதில்
இறந்திறந்து பிறக்கிறதோ தெரிய வில்லை?

காப்பியடிக் கும்விளக்கு நிலாவி ளக்கு
கதிரிடத்தில் கடன்வாங்கும் குளிர்வி ளக்கு
கூப்பிட்டால் பேசாத விளக்கு! சோழன்
குடையதனை நினைவூட்டும் விளக்கு. வீட்டில்
பூப்படைந்த பெண்டிர்தமைச் சுட்டெ ரிக்கும்
பொல்லாத வான்விளக்கு! மாதந் தோறும்
மூப்படைந்து செத்துவிடும் விளக்கு! கொம்பு
முறியாமல் வளர்கின்ற நிலாவி ளக்கு!

மின்விளக்கு விஞ்ஞான சக்தி யாலே
வீடுகளில் எரிந்துவரும் புதுவி ளக்கு
என்னுடைய வீட்டினிலே அவ்வி ளக்கு
எரிவதுண்டு! திடீரென்றும் அணைவ துண்டு.
அன்றன்று நானதனை அழுத்தும் போதில்
அஃதெரியும் இல்லையெனில் அவ்வி ளக்கோ
தன்னுடைய சோம்பேறித் தனத்தைக் காட்டும்
சம்சார மின்சாரம் என்னை வாட்டும்.

கண்ணும் கண்ணும் கலந்து நோக்கினால்
காதல் விளக்காகும்
எண்ணெயும் திரியும் தீயும் சேர்ந்தால்
எண்ணெய் விளக்காகும்.

பயன்படும் விளக்கினைப் பற்றிப் பாடிட
நல்ல கவிஞர் நால்வர்வந் துள்ளனர்
இவர்தரும் பாடலை இப்போது கேட்கலாம்.

*அறிமுகம்:*

***சங்கு சண்முகம் - கதிர் விளக்கு***

தற்பெருமை இலாத சங்கு சண்முகம்
நற்பெருமைக் குரிய நல்ல கவிஞர்

தங்குதடை யற்ற சந்தப் பாடல்கள்
எழுதிட வல்லவர் என்பதால் இவர்க்குநாம்
சந்தக் கவியெனும் பட்டம் தரலாம்
இந்தக் கவிஞர் இப்போ திங்கே
எதிர்விளக் கின்றி வானத்தில் இயங்கும்
கதிர்விளக்கின் சிறப்பினைக் கவிதையால் விளக்குவார்.

இடையுரை:

எழுதப்பெறவில்லை.

அறிமுகம்:

***காசிதாசன்* - நிலா விளக்கு**

கவிபாட வந்துள காசி தாசன்
ஐந்தில் வளைந்தவர்; ஆயினும் இதுவரை
வம்பர்சொற் கேட்டு வளைந்தி டாதவர்
பிறர்பாடல் திருடிப் பிழைத்தி டாதவர்
வளரும் பயிருக்கு நடுவில் வளரும்
இளம்பயிர் போன்றவர். இவரிப் போது
நீலவான் ஏற்றும் நிலாவிளக் கதனைக்
குறித்திங்கே பாடுவார் குறுந்தொகைத் தமிழிலே!

இடையுரை:

தேங்காயைச் சரிபாதி யுடைத்தெ டுத்துத்
தூரத்தில் வைத்தாற்போல் நிலவு தோன்றும்.
என்றிவர் கூறிய இப்புது உவமையை
இறக்கும் வரையில்நான் மறக்கவே மாட்டேன்.

அறிமுகம்:

***டி.எஸ். பொன்னுசாமி* - மின்விளக்கு**

நறம்பெழுந்த முதியோர்க்கும், இளைஞர் கட்கும்,
நல்லுரைகள் கூறிவரும் சாமி; பாட்டுப்
பரம்பரையைத் தோற்றுவித்த பொன்னு சாமி
பகுத்தறிவுக் கொள்கையினைப் பரப்பும் சாமி,

கரும்புநிகர் செந்தமிழை உயிர்க்கு மேலாய்க்
கருதுகின்ற பெருங்கவிஞர் பொன்னு சாமி
விரும்புகின்ற தம்கொள்கைக் கேற்ற வாறு
மின்விளக்கின் பயனதனைப் பாடக் கேளீர்.

இடையுரை:

மண்விளக்கு பழங்காலச் சின்னம்! வீட்டின்
மதிலுக்கே அவைசொந்தம், சடங்குக் காக!
மின்விளக்கு பகுத்தறிவின் வளர்ச்சி! மாந்தன்
வாழ்க்கையிலே துணைவியைப்போல் பாதிப் பாதி.

மின்விளக்கு வந்தபின்னும் புராணத் திற்கு
மிகவிளக்கம் தருவதன்றி, ஆராய்ச் சிக்குத்
தன்கழுத்தைத் திருப்பாத வரையில் இன்னும்
சமுதாயம் இருட்டுக்குள் இருக்கும் தானே!

என்றிவர் குறிப்பிடும் இக்கருத் தெனக்கும்
உடன்பா டென்பதை ஒப்புக் கொள்கிறேன்!
என்னோ டிவரையும் இணைத்துக் கொள்கிறேன்.

அறிமுகம்:

ரெ. சண்முகம் - எண்ணெய் விளக்கு

நாடக நடிகராய், நல்ல கவிஞராய்,
இவ்வா னொலியில் இசையமைப் பாளராய்
இருந்து வருபவர் இந்தச் சண்முகம்.

இசைச்சொத் தென்னும் இவரது பாடல்கள்
பாடுவோர்க் கெல்லாம் பயன்படும் பாடல்கள்
இந்தக் கவிஞர் எண்ணெய் விளக்கின்
வரலா றதனை வடிப்பாற் கவிதையில்!

இடையுரை:

எழுதப் பெறவில்லை. முடிவுரையும் எழுதப் பெறவில்லை.

# சென்னைத் தொலைக்காட்சிக் கவியரங்கம்

நாள்- 28.4.80

செய்கின்ற தொழிலதுவே தெய்வ மென்பர்.
திறமைதான் மிகச்சிறந்த செல்வ மென்பர்
செய்கின்ற தொழில்கள்பல வற்றை நன்கு
சீர்தூக்கி ஆராய்ந்து பார்க்கும் போது
நெய்கின்ற தொழிலொன்றே வைய கத்தில்
நிகரற்ற தொழிலாகும். மேலும் இந்த
வையகத்தில் வாழ்ந்துவரு கின்ற மக்கள்
மானத்தைக் காக்கின்ற தொழிலு மாகும்.

எருக்குழியில் ஏருழவன் காலி ருக்கும்
எழிலுடைகள் நெய்பவன்கால் எங்கி ருக்கும்?
தறிக்குழியில் அவன்கால்கள் இருக்கும். கண்ணோ
தான்நெய்யும் ஆடையின்மீ திருக்கும். நன்கு
முறுக்கேறி இருக்கின்ற நூலைக் கொண்டு
முறையாக நெய்பவனின் நெற்றி வேர்வை
குறிக்கின்ற துளிகளெலாம் வறுமை, வாழ்வின்
குறிப்புரைகள், துயரத்தின் தோர ணங்கள்.

நூலியற்றும் பாவலர்கள் வண்ணப் பாக்கள்
நூதனமாய் எழுதிக்காட் டிடுதல் போலே,
நூலிழையைப் படுக்கைக்கோ டாக்கி ஆக்கி
நூறுவகை வண்ணமதில் காட்ட வல்லோன்
காலத்தால் முந்தியவன் கவிஞன். அந்தக்
கவிஞனையும் முந்தியவன் ஆடை நெய்வோன்.
ஓலைதனில் எழுதாமல் அன்னோன் நெய்யும்
உடையதனில் வண்ணப்பாட் டெழுதும் சிங்கம்.

அறிவிலுரு வாவதெல்லாம் கலைதான்! பெண்கள்
அழகிலுரு வாவதெல்லாம் கலைதான்! காதற்
குறியிலுரு வாவதெல்லாம் சுவைதான்! கர்ப்பக்
குழியிலுரு வாவதெல்லாம் உயிர்தான்! வானப்
பிறையிலுரு வாவதெல்லாம் ஒளிதான்! சான்றோர்
பேச்சிலுரு வாவதெல்லாம் பொருள்தான்! நெய்யும்
தறியிலுரு வாவதெல்லாம் துணிதான்! வீட்டில்
தறிநெய்வோன் செய்தித்தாள் அதுதான் கண்டீர்.

உடைத்திடு நீ இதனையென்றால் மண்பாண் டத்தை
உடைத்திடலாம். நூலாடை ஒன்றைத் தந்து
உடைத்திடுநீ இதனையென்று சொன்னால் இந்த
உலகத்தில் யாரதனை உடைத்தல் கூடும்
உடைவெளுக்கும் தோழரிடம் தரினும் அந்த
உடையதனை கிழிப்பார்கள் உடைக்க மாட்டார்
உடையெதுவும் இதுவரையில் உடைந்த தில்லை.
ஒழுங்கான வானவில்லும் ஒடிந்த தில்லை.

கேளுங்கள் தோழர்களே துணியைப் போன்று
கிழிகின்ற வாழ்க்கையன்றோ எங்கள் வாழ்க்கை.
நாளொன்று போவதற்குள் இந்த நாட்டில்
நாங்கள்படும் பாடுபஞ்சு படுமோ, மேள
தாளங்கள் தாம்படுமோ, என்றே எண்ணித்
தறிநெய்வோர் பெருமூச்சு விடுகின் றார்கள்
ஆளுபவர் பேருதவி செய்வா ராயின்
அவர்கள்துயர் படிப்படியாய்க் குறைந்து போகும்.

# பாவேந்தர் பார்வையில்...

அரியாச னத்தமிழை வளர்ப்ப தற்கும்
அறிவுடையார் தம்கருத்தை அறிவ தற்கும்
மரியாதைக் குரியதமிழ்க் கவிஞர் தம்மை
மன்றத்தில் வீற்றிருக்கச் செய்துள் ளீர்கள்
சரியான நேரத்தில், இப்போ திங்கே
தலைசிறந்த தலைப்புகளில் பாடு வார்கள்
அரசியலின் ஓசையெலாம் அங்கே! செய்யுள்
அலையோசை இப்போது கேட்கும் இங்கே.

சோலையிலே பாட்டுவரும் சிலர்க்கு, மங்கை
தொட்டால்தான் பாட்டுவரும் சிலபே ருக்கு,
காலையிலே பாட்டுவரும் சிலர்க்குத் தென்னங்
கள்குடித்தால் பாட்டுவரும் சிலபே ருக்கு,
மாலைவந்த பின்இங்கே பாடு தற்கு
வந்திருக்கும் இவர்களைநாம் சகாரா என்னும்
பாலையிலே நிற்கவைத்துப் பாடென் றாலும்
பாட்டுவரும், ஒட்டகமும் பாட்டைக் கேட்கும்.

அரும்பெல்லாம் இவர்களது பாட்டைக் கேட்டால்
அழகாக வாய்திறந்து மலரும், நல்ல
கரும்புநிகர் காதலர்க்கே இவர்தம் பாக்கள்
கற்கண்டாய் தித்திக்கும், தேர்ந்தெ டுத்த
இரும்புதனை நன்றாகத் திருகி மேலே
இட்டாற்போல் கொம்பமைந்த புள்ளி மான்கள்
விரும்பியங்கே ஓடிவந்து பாட்டைக் கேட்கும்
விளையாடும்! காதுகளால் தாளம் போகும்.

மலராய்ந்து பூத்தொடுக்கும் மாலை நேரம்
வந்தவுடன் தென்றல்வரும், அசையும் தென்றல்
பலராலும் பாராட்டப் படுதல் போன்று
பாராட்டப் படுமிவர்கள் பாடும் பாடல்,
நிலத்தைப்போல் திண்மையுடன் இருக்கும், ஆற்றில்
நீரைப்போல் தண்ணென்றும் இருக்கும். வெள்ளைத்
தலைப்பாகைக் கவிஞர்களா இவர்கள்? நல்ல
தன்மானக் கவிஞரன்றோ என்னைப் போல.

பாடுதுறை நன்கறிந்து பாட வல்ல
பாவலர்கள் நால்வரிங்கே வந்துள் ளார்கள்
நீடுபுகழ்க் குரியவராம் இவர்தம் பாக்கள்
நிச்சயமாய் முக்கனிபோல் இனிக்கு மென்பேன்
ஏடுகளில் எழுதியுள்ள பாட்டால் மக்கள்
இதயத்தைத் தொடவிருக்கும் கவிகாள்! இங்கே
மூடுபனி வாடையில்லை! நீங்கள் கற்ற
முத்தமிழ்க்கு மேடையுண்டு பாட வாரீர்!

### *கவிஞர் பழனி*

***பாரதிதாசன் பார்வையில் - பெண்மை***

வெய்யில் இலக்கணம் குயிலறியும் - எட்டு
வேற்றுமை இலக்கணம் சிலறறிவார்
மெய்யின் இலக்கணம் சிலறறிவார் - பஞ்சு
மெத்தை இலக்கணம் சிலறறிவார்
செய்யுள் இலக்கணம் கற்றறிந்த - நம்
செந்தமிழ்க் கவிஞர் பழனியென்பார்
பொய்யின் இலக்கணம் அறியாத - தமிழ்ப்
பூவையர் பெண்மையைப் பாடிடுவார்.

## கவிஞர் கா. காளியப்பன்

*பாரதிதாசன் பார்வையில் - காதல்*

புல்லின் நுனியில் பனித்துளி தூங்கும்
புகழெலாம் திசைகளில் தூங்கும்
நெல்லின் உடலில் கோடுகள் தூங்கும்
நீரிலே சிறுநுரை தூங்கும்
சொல்லும் பொருளும் கவிகாளி யப்பன்
தொடுக்கின்ற பாடலில் தூங்கும்
கல்வியே துணையென எழுதும் கவிஞரே
காதலைப் பாடிட வாரீர்.

## ஓடைப்பட்டி சுப்பையா

*பாரதிதாசன் பார்வையில் - மறுமலர்ச்சி*

நீர்காத்தான் கரிகாலன் அணையைக் கட்டி
நிதிகாக்க நினைக்காமல் அள்ளித் தந்து
பேர்காத்தான் பாரிவள்ளல் தொண்டை நாட்டுப்
பெரும்புலவர் தீப்பாய்ந்து நட்பைக் காத்தான்
சீர்காத்தும் தளைகாத்தும் அடிகள் காத்தும்
செய்யுள்தர வல்லவராம் சுப்பை யாவின்
பார்திருத்தும் மறுமலர்ச்சிப் பாட்டைக் கேளீர்
பாவரே பாடுதற்கு விரைந்து வாரீர்.

## புலவர் கி. வாலாண்டி

*பாரதிதாசன் பார்வையில் - வீரம்*

கருங்கடல் மீது கலத்தைச் செலுத்துவோர்
கலவர், அதாவது கப்பல் ஓட்டிகள்
எண்ணத்தில் புதுமை புகுத்தி எழுதுவோர்
புலவர், அதாவது புகழுக் குரியவர்

புலப்படு மிடத்தில் புதுமை பிறக்கும்
புதுமையே சிறந்த புகழை வளர்க்கும்
புதுமை படைப்பவன் புகழொடு வாழ்வான்
பழமை படைப்பவன் பள்ளத்தில் வீழ்வான்
பள்ளத்தில் விழாது பாவலர் பலரின்
உள்ளத்தில் வீழும் ஒப்பற்ற புலவர்
வாலாண்டி அவர்கள் வரலாற்றை வளர்க்கும்
வீரத்தைப் பற்றி விளக்கமாய்ப் பாடுவார்.

என்னைப் பொறுத்தவரையில் - இங்(கு)
எல்லோரும் பாடினர் நன்றாய்
நின்று பயன்தரும் சொல்லால் - நிலை
நிறுத்தும் கற்பனை தந்தார்
முன்பின் அமர்ந்துநீர் கேட்டீர் - உங்கள்
முகமெலாம் மலர்ந்திடக் கண்டேன்
நன்கு சுவைத்து மகிழ்ந்தீர் - நிகழ்ச்சி
நடந்து முடிந்தது நன்றி.

# அகத்தே நகும்!

குமரிமுனையில் அய்யன் வள்ளுவர் சிலை திறப்பு விழாவில் முத்தமிழறிஞர் முதல்வர் கலைஞர் அவர்கள் தலைமையில் தமிழகத்தின் முன்னணிக் கவிஞர்கள் பங்கேற்ற கவியரங்கம் நடைபெற்றது.

இக்கவியரங்கில் '**அகத்தே நகும்!** எனும் தலைப்பில்

**கவிஞர் சுரதா** பாடிய கவிதை

கன்னியா குமரியிலே, இந்நூற் றாண்டின்
கடைசிநாள் வரும்வரைக்கும் காத்தி ருந்து,
இந்நாளைத் தேர்ந்தெடுத்து வள்ளு வர்க்கு
இவ்விடத்தில் சிலைவைத்து விழாவெ டுக்கும்
பண்பட்ட முதல்வர்க்கு முதல்வ ணக்கம்!
பாவலர்க்கும் மற்றவர்க்கும் என்வ ணக்கம்!
அன்றாடம் திருக்குறளைப் பரப்பு கின்ற
ஆரூரா ரே!இதனைக் கூர்ந்து கேளீர்!

கடலழித்த தமிழகத்தின் பரப்பு மேலும்
காலத்தால் அழிந்துவிடக் கூடா தென்றே
இடந்தேர்ந்து வள்ளுவனைத் தேர்ந்தெ டுத்து
ஈரடியின் பேருருவை நிறுத்தி விட்டாய்
கடல்கண்ட நாடுகளில இதற்கீ டாகக்
கண்கவரும் சிலையைத்தான் யார்கண் டார்கள்
அடடாநீ ஒருவன்தான் இனத்தை மீட்கும்
அருஞ்செயல்கள் செய்வதற்கும் முதல்வன் ஆனாய்!

அடக்கமாய் நாட்டை ஆண்ட
அண்ணாவின் நிழலே! வாங்கும்
வடக்கிலே தெற்கை வைத்து
வாதிடும் நிதியே! நம்மை
ஒடுக்கினார் தம்மைத் தேர்தல்
ஊஞ்சலில் இருந்து தள்ளிப்
படுக்கையில் படுக்க வைத்துப்
பார்த்திட்ட தலைவர் நீங்கள்!

தேரோடும் கோயில் சென்று
தேவாரம் பாடி டாத
ஆரூரர்! ஆளும் கட்சி
அரசியல் அப்பர்; தீமை
தாராத கூட்ட ணிக்குச்
சம்பந்தர்; எதிர்ப்பை எல்லாம்
கூரான மதிநுட் பத்தால்
குடைசாய்க்கும் முதல்வர் நீங்கள்!

இப்போது முதல்வ ராக
இருக்கின்றீர் எனினும்; நீங்கள்
எப்போதும் கலைஞர்! ஈட்டி
எழுத்தாளர்! பெரும்பேச் சாளர்!
பொய்ப்போர்வைக் கதைக்குள் தூங்கும்
புராணத்தின் பகைவர்! நீங்கள்
முப்பாலின் முதற்பால்! கொத்து
முத்தமிழ் உமக்குத் தாய்ப்பால்!

பொன்குற்றம் உடையதெனில் விலைபோ காது;
பொருட்குற்றம்உள்ள கவி அவையே றாது;
பெண்குற்றம் புரிந்ததனால் இந்த நாட்டின்
பழம்பெருமை கெட்டதுண்டு; அதனால் நல்லோர்
வெண்கொற்ற குடைநிழலில் முதல்வராக்க,
வெற்றிமகன் நீரானீர், உன்றன் நண்பன்
பண்குற்றம் செய்யாத சுரதா நானும்
பண்பட்ட பாட்டாலே வாழ்த்து கின்றேன்!

திங்களுக்கு வாயில்லை, புதனுக் கில்லை,
செவ்வாய்க்கு மட்டுந்தான் வாயுண் டென்றே
எங்களுக்குத் தெரிவித்தீர், உம்மை யன்றி
இவ்வாறு கூறியவர் எவரு மில்லை!
பொங்கலன்று முதல்செவ்வாய்க் கிழமை யன்று
புதுவையிலே பாவேந்தர் தமைச்சத் தித்தேன்,
உங்களையும் முதன்முதலில் செவ்வா யன்று
ஊரில்நான் சந்தித்தேன் நினைவி ருக்கா?

கண்ணாடி முரசொலியாம் வார ஏட்டில்
கருத்தமைந்த என்பாட்டைப் பதிய வைத்தீர்;
மண்ணில்வாழ் மக்களைநீர் படிக்க வைத்தீர்;
மனமுனது பெரியமனம்! ஒவ்வொர் நாளும்
விண்ணில்வரும் சூரியனே உன்றன் சின்னம்;
விஞ்ஞானக் கனவுகளே உன்றன் எண்ணம்!
புண்பட்ட நெஞ்சத்தார் தோற்றுப் போனார்,
புவியிலுனைத் தலைவரென ஏற்றுக் கொண்டார்!

சன்மார்க்க புரங்கண்டார் இராம லிங்கர்,
சமத்துவ புரம் நீங்கள் காணுகின்றீர்!
தன்மானப் பெரியார்க்குப் பெருமை சேர்த்தீர்;
தாயுள்ளம் கொண்டவராம் அண்ணாவுக்கு
மென்மேலும் உலகத்தில் புகழைச் சேர்த்தீர்
மேதினியில் புகழ்பெற்று விளங்கும் நீரோ,
என்போன்றோர் பலருக்கு விருது தந்தீர்!
என்றென்றும் நாங்களுமை மறக்க மாட்டோம்!

தொழுநோயால் வருந்துவோர்க்கு புதிய வாழ்வு!
சுமைரிக்ஷாத் தொழிலாளர்க் கினிய வாழ்வு!
விழியிழந்தோர்க் கெல்லாம் வெளிச்ச வாழ்வு!
விடியலுக்கு வழியமைத்த சூரியன் நீ!
பழிசுமந்தோர் பழிசுமத்திக் கொண்டி ருப்பார்;
பாரில்உன் சமத்துவபுர திட்டந் தன்னை,
மொழிசுமந்த நாவெடுத்துப் புகழு கின்றார்!
முதல்வருனைத் தினம் போற்றி மகிழு கின்றார்!

வஞ்ச மனத்தான் படிற்றொழுக்கம் பூதங்கள்
ஐந்தும் அகத்தே நகும்!

கூடாஒழுக்கம் கொண்டவர் தம்மை
அவருள் இருக்கும் ஐம்பூ தங்கள்
நகைக்கும் என்று நவின்றார் வள்ளுவர்,
அல்லவை தன்னை நல்லவை ஆக்கித்
திருந்திட நமக்குத் திருக்குறள் தந்தார்!
அவரது கருத்தை அடியொற்றிப் பாடிட
இங்கு வந்துள்ளேன் இதனைக் கேளீர்!

மெய்மைதனை ஒதுக்கிடுவார் வேடம் கண்டும்,
மெய்கண்டார் எனும்பெயரால் வாழ்ந்து கொண்டும்,
கையூட்டாம் இலஞ்சத்தை வாங்கிக் கொண்டும்
காரியத்தை முடிக்காதோர் தம்மைக் கண்டும்
பொய்பேசி ஏமாற்றிக் கொண்டி ருக்கும்
புன்சிரிப்புக் கூட்டத்தின் செயலைக் கண்டும்
ஐம்பூத மாம் நிலம் நீர் காற்று வானம்
அன்றாடம் அன்னாரை நகைக்கும் அன்றோ!

மேடுகட்டி இருக்கின்ற இடத்தில் உள்ள
மேலாடை தனைச்சிறிது நீக்கி விட்டால்,
கூடுவிட்டுப் போகும் உன் ஆவி'' என்று
கூறிவென்ற மேனகையை அறிவோம்; இந்த
நாடின்னும் தாடி, மீசை, சாமி யாரை
நம்புவதில் பொருளுண்டா! அதனால் நேரும்
கேடுகண்டும் திருந்தாரை, ஐம்பூ தங்கள்
கேடுகெட்டார் என்றவரைப் பழித்தி டாதா?

அவனின்றி ஓரணுவும் அசையா தென்றே
அளப்பார்கள்; காவியுடை உடுத்தி யுள்ள
தவவேடத் துறவிகளின்கோலம் கண்டும்
தெய்வத்தின் மாற்றுருவாய்ச் சொல்லிக் கொண்டும்
குவளைகண் நங்கையரை கற்ப ழிக்கும்
கொடியவரின் செயல்கண்டும் அவ்வப்போது
அவருக்குள் இருக்கின்ற ஐம்பூ தங்கள்
"அடப்பாவி'' என்றவரை நகைக்கு மன்றோ!

சாதுவேடம் போட்டுக் கொண்டி ருப்போர் எல்லாம்
சாதுவல்லர்; சண்டியர்கள் அங்கே உண்டு!
மாதுவேடம் போட்டிருப்பார்; அவருக் குள்ளும்
மனிதவெடி குண்டுகளும் மறைந் திருக்கும்
யாதுகேடு பயக்குமென்று அறிந்திடாமல்
ஆதரித்துக் கொண்டிருந்தால் அதுவே ஓர் நாள்
தீதுதரும்; உணராரை; ''ஐம்பூ தங்கள்''
தினந்தோறும் அவரகத்தே நகுமே நாளும்!

# சென்னைத் தொலைக்காட்சிநிலையம்

- 17.09.90.

### முத்தமிழ் மன்றம்

## பெரியார் பிறந்த நாள்

உரியவரென் றழைப்பதற்கோ உறவு போதும்,
உத்தமரென் றழைப்பதற்கோ ஒழுக்கம் வேண்டும்
பெரியவரென் றழைப்பதற்கோ வயது போதும்
பெரியாரென் றழைப்பதற்கோர் தகுதி வேண்டும்
சிறந்தவராம் சாக்கிரட்டீஸ் புத்தர் போன்று
செயற்கரிய செய்தவர் நம் பெரியார் ஆவார்.
பெரியார்தம் வாழ்நாளில் செய்த தொண்டு
பெருந்தொண்டு. பகுத்தறிவைப் பரப்பும் தொண்டு

தமிழெழுத்துச் சீர்திருத்தம் கொண்டு வந்த
தலைவர்யார்? பெரியாரா? திரு.வி.காவா?
தமிழகத்தில் கருத்தடையை ஆத ரித்த
தலைவர்யார்? பெரியாரா? வ.ஊ.சீயா?
தமிழகத்தில் முதன்முதலில் ரஷ்யா சென்ற
தலைவர்யார்? சிங்கார வேல னாரா?
தமிழகத்தில் பகுத்தறிவைப் பரப்பி வந்த
தலைவர்யார்? எல்லாமே பெரியார் தானே!

பெண்ணுரிமை பெறவேண்டும்; விதவை யான
பெண்ணுக்கு மறுமணம்நாம் செய்தல் வேண்டும்
எண்ணுரிமை, எழுத்துரிமை பெற்றுப் பெண்கள்
எல்லோரும் இந்நாட்டில் கற்க வேண்டும்.
குண்டர்களின் வஞ்சகமும், சாதி பேதக்
கொடுமைகளும் கொத்தடிமைத் தனமும், இந்த
மண்டலத்தில் ஒழிந்தாக வேண்டும் என்று
வாதித்தார் சாதித்தார் வெற்றி பெற்றார்.

தம்முடைய கருத்துக்கள் பலவற் றுக்கும்
தாமேவோர் களமமைத்துத் தலைமை தாங்கித்
தம்முடைய குறிக்கோளுக் காக வேண்டித்
தாமேபோர்க் களஞ்சென்றும் சிறைக்குச் சென்றும்
தம்முடைய தள்ளாத வயதில் கூடத்
தளராமல் போராடிச் சாகு மட்டும்
தம்வாழ்வைத் தமிழ்நாட்டுக் கர்ப்ப ணித்த
தன்மானப் பகுத்தறிவுச் சிங்க மன்றோ?

சாக்கிரட்டீஸ் இல்லையென்றால் பிளாட்டோ இல்லை.
ஐங்என்பான் இல்லையென்றால் ஃப்ராய்டு இல்லை.
சாக்கியராம் புத்தர்பிரான் இல்லை யென்றால்
சத்வகுண போதனெனும் அசோகன் இல்லை.
நாக்கரசன் நக்கீரன் இல்லை என்றால்
நம்நாட்டில் ஓர்ஒட்டக் கூத்த னில்லை.
பாக்கியவான் நம்பெரியார் இல்லை என்றால்
பாவேந்தர் பேரறிஞர் அண்ணா இல்லை.

வேள்விகளைக் குனியவைத்தார் புத்தர், உம்மை
விடமாட்டோம் என்றெதிர்த்து மாற்றார் கேட்ட
கேள்விகளைக் குனியவைத்தார் பெரியார். அன்று
கிளர்ந்தெழுந்த பகைவர்தமைக் கரிகாற் சோழன்
ஆள்வினையால் அடக்கி வந்தான். பெரியா ரோதம்
அறிவென்றும் ஆயுதத்தால் அடக்க வந்தார்
நாள்தோறும் பகுத்தறிவைப் பரப்பி வந்தார்
நமக்கெல்லாம் வழிகாட்டிக் கொண்டி ருந்தார்.

தந்தைபெரி யாரைப்போல் நீண்டநேரம்
தமிழ்நாட்டில் பேசியவர் யாரு மில்லை.
எந்தவிதக் கேள்விக்கும் பதில்சொல் லாமல்
இவரெழுந்து சென்றதில்லை. நம்மை யாரும்
நிந்திப்பார் என்பதற்கோ, இவற்றைச் சொன்னால்
நெருக்கடிகள் ஏற்படுமே என்ப தற்கோ
தந்தைபெரி யாரென்றும் அஞ்ச வில்லை
தம்கருத்தைக் கூறாமல் இருந்த தில்லை.

விழித்தால்தான் பொருள்தெரியும். வயலில் நெல்லை
விதைத்தால்தான் அதுவிளையும். பத்தில் ஐந்தைக்
கழித்தாலும் வகுத்தாலும் குறையும். மாந்தர்
கவலைக்கோர் கவலைமருந்த தாவ தில்லை.
இழைத்தால்தான் நூல்கிடைக்கும் எனவே பஞ்சை
இழைக்கின்றோம் நூலாக. எந்த நாடும்
உழைத்தால்தான் முன்னேற முடியு மன்றி
உபதேசத்தால் தேசம் உயரா தென்றார்.

அலுப்புமணம் இந்நாட்டில் குறைந்து, இங்கே
அர்த்தமுள்ள சீர்திருத்தத் திரும ணங்கள்
கலப்புமணம் இவையெல்லாம் நடப்ப தற்குக்
காரணம் யார்? நம்தந்தை பெரியா ரன்றோ
எலிப்புழுக்கை மனப்பான்மை கொண்டி ருக்கும்
இந்நாட்டு விதவைகளின் விவகா ரத்தைக்
கலப்புமணத் தால்தீர்த்து வைப்பீர் என்று
கருத்துரைகள் கூறியவர் பெரியா ரன்றோ?

மனத்தாலும் பணத்தாலும் பிரிக்கப் பட்டோம்
மதத்தாலும் இனத்தாலும் பிளவு பட்டோம்
சினத்தாலும் குணத்தாலும் வகுக்கப் பட்டோம்
திறத்தாலும் நிறத்தாலும் விலக்கப் பட்டோம்
கனைத்தாலும் நினைத்தாலும் நமது கண்ணீர்
கசிந்தாலும் அசைந்தாலும் அதட்டப் பட்டோம்
தனித்தாலும் சூழ்ச்சியினால் அழுத்தப் பட்டோம்
தமிழர்களே சிந்தியுங்கள் என்று சொன்னார்.

தாராள மனப்பான்மை என்று சொல்லித்
தண்ணீர்போல் பணத்தையெலாம் செலவு செய்தல்
தீராத வறுமைக்கு வித்தாம். வாழ்வில்
சிக்கனந்தான் ஒருவனுக்குச் சிறந்த சொத்தாம்
சீராகச் செட்டாக, ஒவ்வோர் நாளும்
சிக்கனமாய் நம்பெரியார் வாழ்ந்து வந்தார்
ஏராள மாய்ப்பொருளைச் சேர்த்து வைத்தார்
இவரிடம்நாம் சிக்கனத்தைக் கற்க வேண்டும்.

பொதுக்கூட்டம் தனிலிவர்க்குப் போடு கின்ற
பூமாலை தனிலுள்ள நாரைக் கூட
மெதுவாகப் பிரித்தெடுத்து விரலில் சுற்றி
மேலுமதைப் பந்தைப்போல் திரட்டி ருட்டி
அதனைமிகக் குறைவான விலைக்கு விற்று
அக்கறையாய்ப் பொருள்சேர்த்தார். பெரியார் சேர்த்த
நிதியதனைக் கட்சிக்கே எழுதி வைத்தார்
நேர்மையுள்ளோர் இப்படித்தான் நடந்து கொள்வர்.

தனிப்பெருமைக் குரியவர்கள் எந்த நாளும்
தற்பெருமை கொள்வதில்லை. இலையில் தூங்கும்
பனித்துளியா தன்முகத்தை நீரில் பார்க்கும்
பனைமரந்தான் தன்உருவை நீரில் பார்க்கும்
அணிப்பிள்ளை தன்வாலைத் தூக்கித் தூக்கி
ஆட்டுதல்போல் இவர்நடந்து கொண்ட தில்லை
மணிக்குமணி புகழ்பெற்று வந்த இந்த
மாமேதை மமதை கொண்டு திரிந்தா ரில்லை.

நினைவாற்றல் சர்ச்சிலுக்கும் சீச ருக்கும்
நிச்சயமாய் அதிகந்தான். பெரியா ருக்கும்
நினைவாற்றல் அதிகந்தான். தமிழர் நெஞ்சில்
நிலைபெற்ற ஈரோட்டுப் பெரியா ருக்குத்
தனியாற்றல் பலவுண்டு. இவரைப் போன்று
தங்குதடை இல்லாமல் பேசும் ஆற்றல்
இனியொருவர்க் கமைந்திடுமோ? பெரியார் போன்று
எதிர்வாதம் செய்வதற்கு நம்மால் ஆமா?

தொகுத்தறிந்தால் போதாது, தீயில் பொன்னைச்
சுட்டெடுத்துப் பார்த்தால்தான் ஐயம் தீரும்
வகுத்தறிந்தால் போதாது. செடியை நட்டு
வளர்த்தால்தான் அதன்வளர்ச்சி தெரியக் கூடும்
மிகத்தகுதி உடையவர்கள் சொல்லும் நீதி
மேலான தென்றாலும் அதையும் நன்கு
பகுத்தறிய வேண்டுமெனப் பெரியார் சொன்னார்
பண்டிதர்க ளாநமக்கு இதனைச் சொன்னார்.

தோள்வளர்ச்சி ஆடவர்க்கும் ஒவ்வோர் நாளும்
தொழில்வளர்ச்சி நாட்டுக்கும் தேவை யாரும்
ஆள்வளர்ச்சி அடைவதனால் ஆவ தென்ன
அவ்வளர்ச்சி வெறுஞ்சதையின் வளர்ச்சி தானே
வாள்வளர்ச்சி எதற்காக இனிமேல் விண்ணில்
வளர்மதியைத் தொடும்வளர்ச்சி யன்றோ வேண்டும்
தேள்வளர்ச்சி மனப்பான்மை வவரு மாயின்
தேசத்தில் மோசந்தான் மோட்ச மாகும்

மிகப்பெரிய தேசந்தான் நமது தேசம்
வீரத்தின் விளைநிலந்தான் எனினும், சாதித்
தொகைக்கணக்கால், சோம்பேறித் தனத்தால் நீண்ட
தூக்கத்தால் பொறாமையினால், தொன்று தொட்டுப்
பகைப்பெருமை பேசியதால் அண்ணன் தம்பி
படையெடுப்பால், சிற்றின்ப வெறியால் நன்கு
வகுத்தமுறை வழுவியதால் வீழ்ச்சி யுற்றோம்
வந்தாரின் சூழ்ச்சியினால் அடிமைப் பட்டோம்.

சாமியென்று நாமிவரை மதிக்க வில்லை
சாதனைகள் பலபுரிந்து வந்த ராம
சாமியிவர் என்பதனால் மதிக்கின் றோம்நாம்
சாமியெனும் பெயருடைய இந்த ராம
சாமி சீர்திருத்த சாமி! ஏற்றத்
தாழ்வுகளைக் கண்டித்த பெரியார் ராம
சாமிமட்டும் நம்நாட்டில் பிறக்க விட்டால்
தமிழ் நாட்டில் பகுத்தறிவா வளர்ந்தி ருக்கும்?

# இதயம் பேசுகிறது வழங்கும் இனிய கவியரங்கம்.

ஆகஸ்டுப் பதினைந்து நமக்குப் பொன்னாள்
ஆனந்தக் களிப்புற்று மகிழும் நன்னாள்.
ஆகஸ்டு பதினைந்தாம் நாளின் னாளில்
அரவிந்தர், புதுக்கவிதை பிச்ச மூர்த்தி
தாகத்திற் குதவுகின்ற தண்ணீர் போன்ற
தமிழறிஞர் சதாசிவ பண்டா ரத்தார்
நாகரிகப் பெருங்கவிஞர் சர்வால் டர்ஸ்காட்
நடுங்கவைத்த நெப்போலியன் பிறந்த நன்னாள்.

விண்முட்டும் புகழ்பெற்றோர் பிறந்த நாளில்,
விடுதலையைக் குறிக்குமிந்தச் சிறந்த நாளில்
பண்பட்ட எழுத்தாளர் மணியன், இந்தப்
பாட்டரங்க நிகழ்ச்சிக்கு வழிசெய் துள்ளார்
தண்ணீருக் கெப்போதும் பஞ்ச மில்லாத
தஞ்சாவூர்க் காரரிவர் எதுசெய் தாலும்
அண்டைமா நிலத்தாரும், மேனாட் டாரும்
அறிஞர்களும் பாராட்டும் படிதான் செய்வார்.

ஆயிரத்துத் தொளாயிரத்து ஐம்பத் தொன்றாம்
ஆண்டுமுதல் மணியனைநான் அறிவேன். அன்புத்
தாயுள்ளம் இவருள்ளம்! கல்கி யைப்போல்
சரியாகப் பிறரைப்பா ராட்டும் உள்ளம்
பாயுமொளி போற்சிறந்த எனது நண்பர்
பயணம்செய் யாநாடே உலகில் இல்லை.
ஆயிரத்தில் ஒருவரிவர். இவர்தான் என்னை
ஆனந்த விகடனிலே எழுத வைத்தார்.

ஓசையிலே உருப்பெற்ற தாகக் கூறும்
உலகத்தில் உறவாடும் மக்கள் வாழ்க்கை
ஆசையிலே ஆரம்பம்! இன்ப துன்பம்
அத்தனைக்கும் நாம்கட்டுப் பட்ட மக்கள்
பேசுவதோ மிகப்பெரிய மானம்; ஆனால்
பேணுவதோ பெருங்காமம்! எச்சில் இன்பம்!
மாசுபடா வெண்ணிலவு மில்லை இந்த
வையத்தில் குற்றமற்றார் யாரு மில்லை.

திருக்குறளில் காதலுக்கோ பகுதி உண்டு
சிலருடைய காதல்கவித் தொகுதி யுண்டு
வருத்தத்தில் வெற்றிபெற்ற வள்ள லாரும்
வளர்காதல் சுவைதன்னைச் சொன்ன துண்டு
கருத்துக்கள் பலருடைய எழுத்தில் மாறும்
காதல்பற்றி யார்சொலிலும் சுவைதான் கூடும்
பெருக்கலிலே வளர்கின்ற ஆண்பெண் காதல்
பெருமையினை கூறாத நூலே இல்லை.

எண்டிசையும் புகழ்பெற்ற சிவாஜி மன்னன்
இறக்கின்ற தருணத்தில் தம்தாய் நாட்டு
மண்ணைமுத்த மிட்டானாம்! முத்த மிட்ட
மறுகணமே அம்மன்னன் இறந்திட் டானாம்
மண்ணைமுத்த மிடுவதது நாட்டுப் பற்று
மையலுற்ற ஒரிளைஞன் தொட்ட ணைத்துப்
பெண்ணைமுத்த மிடுவதது வீட்டுப் பற்று!
பெரும்பகுதி இலக்கியமே காதல் பாட்டு.

கம்பனது பாடலெல்லாம் இளமைக் கோலம்
காதலில்லா இலக்கியங்கள் தப்புத் தாளம்
அம்புவிழி மங்கையரைப் பற்றி இங்கே
அமைக்கின்ற பாடலன்றோ புதிய வார்ப்பு
செம்பருத்தி கோடையிலே வெடிக்கும்! காதற்
செய்யுளொன்றை நினைத்தாலே இனிக்கும். பக்திப்
பம்பரத்தைச் சுற்றுகின்ற புராணங் கூட
பஞ்சணையைப் பாடலிலே விரித்து வைக்கும்.

பாரதியார் பாடலிலே காதல் காதல்
பட்டினத்தார் பாடல்களோ அதற்கு மோதல்
வீரத்தில் ஒருவனுக்கே வெற்றி! காதல்
வித்தையிலே இருவருக்கும் வெற்றி! இந்தச்
சாரத்தை இலக்கியத்தில் வைத்த தால்தான்
சாகாமல் இருக்கிறது? இல்லா விட்டால்
ஈரத்தில் தீயணைந்து விடுதல் போல
இலக்கியங்கள் எப்போதோ செத்தி ருக்கும்.

ஈசுரனைத் துதிக்கின்ற பக்திப் பாட்டில்
எச்சில்முத்தச் சிந்தனைக்கா பஞ்சம்? ஆண்டாள்
பாசுரத்தைப் படித்தாலே சிலபேர் வீட்டில்
பஞ்சணையே நனைத்துவிடும்! அன்றி ருந்த
ஆசுகவி அவன்தான்நம் காள மேகம்
அவனுடைய தனிப்பாடல் திரட்டை நீங்கள்
வாசித்தால் அப்போதே வடியும். பக்தி
வளர்வதற்கும் இலக்கியத்தில் காதல் தேவை!

தொன்றுதொட்டு நிகழ்ந்துவரும் காதல் என்னும்
சுகபோகம் எதற்கென்றே ஒதுக்கித் தள்ளி
இன்றுமுதல் ஆண்பெண்ணின் உறவே இன்றி
இருந்திடலாம் என்றால்நாம் தோற்றுப் போவோம்.
ஒன்றுமட்டும் சொல்லுகின்றேன் இலக்கி யங்கள்
உயிரோடு வாழ்ந்திருக்க வேண்டு மாயின்
என்றென்றும் இலக்கியத்தில் காதல் தேவை
எழுதுங்கள் கவிஞர்களே கட்டில் கோவை.

துன்பங்கள் இன்பத்தின் முற்றுப் புள்ளி
துடிக்கின்ற இளமையிலே நமக்குத் தோன்றும்
இன்பங்கள் அனைவருமே விரும்பும் பள்ளி
இலக்கியத்தில் இக்காதல் தேவை தானா?
என்பதற்கு நடக்குமிக் கவிய ரங்கில்
என்கருத்தை உங்களிடம் சொல்லி விட்டேன்.
அன்பர்களே விடைபெற்றுக் கொள்ளு கின்றேன்.
அனைவர்க்கும் என்வணக்கம். செல்லு கின்றேன்.

# நெய்வேலி கவியரங்கம்

நெய்வேலி பாடுபட்டுக் கரியைத் தோண்டும்
நிறுவனமும் குடும்பநலத் துறையும் எங்கள்
ஐயாவின் ஊரான புதுவை தன்னில்
அமைந்திருக்கும் வானொலியும் ஒன்றி ணைந்து
கையாண்டு வரும்எழு வண்ணம் பற்றிக்
கவியரங்கம் நிகழ்த்துதற்கு வழிவ குத்தார்

மலையரங்கில் கவியரங்கம் நடக்கு மாயின்
மாமயில்தான் அதற்கங்கே தலைமை தாங்கும்
அலையரங்கில் கவியரங்கம் நடக்கு மாயின்
ஆழ்கடல்தான் அவ்விடத்தில் தலைமை தாங்கும்
விலையரங்கில் கவியரங்கம் நடக்கு மாயின்
வேறொருவர் அமர்ந்திருப்பார். இப்போ திந்தக்
கலையரங்கில் கவியரங்கம் நடப்ப தாலே
கவிஞன்தான் தனித்தலைமை தாங்கு கின்றேன்.

எல்லார்க்கும் எல்லாமே கிடைக்க வேண்டும்
என்பதுதான் பொதுவுடைமை. இந்த நாட்டில்
கல்லார்க்கும் கல்விதர வேண்டுமென்று
கருதுவதே அறிவுடைமை. மாண்பு மிக்க
நல்வாழ்வுத் துறையமைச்சர் இவற்றை யெல்லாம்
நன்குணர்ந்து பணியாற்றி வருவ தாலே
சொல்லாலே அவரைப்பா ராட்டு கின்றேன்.
தொடங்குகிறேன் கரம்கூப்பி வணங்கு கின்றேன்.

பாராளு மன்றத்து உறுப்பி னர்க்கும்
பாவலர்க்கும் வானொலிவாழ் இயக்கு நர்க்கும்
தாராள மனப்பான்மை கொண்டோ ரான
சட்டமன்ற உறுப்பினர்க்கும் நாம தேவனுக்கும்
வீராதி வீரர்க்கும், சமுதா யத்தின்
விக்கலுக்கு நீர்போன்ற மெய்யப் பர்க்கும்
ஆராய்ச்சி செய்வோர்க்கும் மாவட் டத்திற்
கதிபதியாம் அன்னவர்க்கும் என்வ ணக்கம்.

ஈரேழு உலகமென்பர். மெய்யோ பொய்யோ
இப்போது நானிங்கே இவ்வி டத்தில்
ஓரேழு வண்ணங்கள் கூடி யுள்ள
உயரவையில் அமர்ந்துள்ளேன். என்னைப் பார்த்து
நீரோத்தும் செக்டமியும் தம்பி என்னை
நினைத்துக்கொள் என்கிறது. என்பக் கத்தில்
சாராயக் கவிஞர்களா அமர்ந்துள் ளார்கள்
சரக்குள்ள கவிஞர்களே அமர்ந்துள் ளார்கள்.

எண்ணங்கள் பலகோடி, நமது நாட்டில்
எழுத்தாளர் பற்பலபேர். உலகி லுள்ள
வண்ணங்கள் ஏழேதான். அழகு மங்கை
வதனமொரு தாமரைப்பூ வண்ண மாகும்.
புன்னகையோ மல்லிகைப்பூ வண்ண மாகும்
பொன்னிறத்து மஞ்சள்நிறம் எட்டிப் பார்க்கும் தீயோர்
எண்ணங்கள் கறுப்புநிறம்! பொருள்கள் யாவும்
ஏழுவடிவ நிறங்களுக்குள் அடங்கிப் போகும்.

ஏழுநிறம் ஏழுவகைக் குழந்தைப் பூக்கள்
இங்கிருக்கும் கவிஞர்களே செந்தேன் ஈக்கள்
தாழையது மின்னல்தனைக் கண்டு பூக்கும்
சபையிலுள்ள கவிஞர்களோ கல்வி என்னும்
ஆழத்தை அறிந்தவர்கள். நான்யார் என்றால் வீதி
அகலத்தை அறிந்தவன்நான். சமுதா யத்தை
வாழவைக்கும் பாட்டெழுதும் இவர்கள் இங்கோ
வண்ணத்தை பாடுதற்கு வந்துள் ளார்கள்.

ஆணென்றும் பெண்ணென்றும் அழைத்தால் போதும்
அவ்வாறிங் கழைக்காமல் நாமெல் லோரும்
ஆண்பிள்ளை பெண்பிள்ளை என்று தானே
அழைத்துக்கொண் டிருக்கின்றோம். இதனைக் கேட்டால்
வீண்வயிற்று மலடிகட்கும் பிள்ளைப் பேறு
வேண்டுமெனும் ஒருணர்ச்சி தோன்றி டாதோ?
ஏனிதனை நம்மவர்கள் உணர்வ தில்லை
எதைஉணர்ந்தோம் இதை உணர்ந்து பார்ப்ப தற்கு?

ஒருமுகமே உடையவனை இந்த நாட்டில்
உள்ளவர்கள் ஆறுமுகம் என்ற ழைத்து
வரும்வரையில் பகுத்தறிவுக் கொள்கை இங்கே
வளர்வதற்கு வழியில்லை. சிலபேர் இன்னும்
திருவருணைக் கலம்பகத்தான் படிக்கின் றார்கள்.
திருக்குறளைத் தொட்டேனும் பார்ப்ப தில்லை.
அரசியலைச் சிற்சிலபேர் விடுவ தில்லை
ஆதாயம் இருப்பதனால் வீடு தோறும்
பிரசவங்கள் குறைந்ததாக வேண்டும். இன்றேல்
பிறசவத்தின் எண்ணிக்கை அதிக மாகும்.

மாயவரம் மாதவரம் என்ப தெல்லாம்
மக்களுக்குத் தேவையுள்ள வரங்க ளாகும்
சூயென்லாய் நாட்டுக்கும், பிறநாட் டுக்கும்
சுயவரங்கள் தேவையுள்ள வரங்க ளாகும்.
தாயொருத்தி ஆவதற்கு வரங்கள் கேட்கும்
தகவலினி ஏடுகளில் வரக்கூ டாது.
ஈயத்தை உருக்குதற்குத் தீதான் வேண்டும்
ஈரமழை நீர்கொண்டா உருக்கக் கூடும்?

பாதயாத் திரைசெய்யச் சொல்லும் தேச
பக்தர்சிலர், ஆங்காங்கே சதைமுக் கோணச்
சீதயாத் திரைசெய்தால், இந்த நாட்டில்
சிசுப்பஞ்சம் எவ்வாறு தோன்றும்? பெண்கள்,
மாதயாத் திரைவந்த தெனத்தெ ரிந்தும்
மருவுதற்கு விரும்புகின்றார் என்றால், நாட்டில்
போதிபுத்தர் போன்றோரா தோன்றுவார்கள்?
புற்றீசல் மனிதரன்றோ தோன்று வார்கள்.

பச்சைநிறம் இச்சைநிறம்! கறந்து வைத்த
பால்போன்ற வெள்ளைநிறம் தூய்மை காட்டும்
எச்சரிக்கை செய்யும்நிறம் சிவப்பு! நீலம்
என்னும்நிறம் உள்ளத்தின் விரிவைக் காட்டும்
நிச்சயத்தைக் கூறும்நிறம் மஞ்சள்! வாழ்வில்
நிதானத்தைக் காட்டும்நிறம் ஊதா வாகும்.
மிச்சமொரு நிறந்தானே! அதனைப் பற்றி
மேடையிலே இருப்பவர்கள் பாடு வார்கள்!

### கவிஞர் ஞான வைத்தியநாதன் - பச்சை

ஞான சித்த நாதன் என்பவர்
பத்துக் கவிஞருள் முத்துக் கவிஞர்
காற்றில் தென்றல் காற்றைப் போன்றவர்
கனியில் தேமாங் கனியைப் போன்றவர்.

அலெக்சாண்டர் ஜூலை ஆறாந் தேதி
அன்று பிறந்தவன். அன்பர் இவரும்
ஆங்கில ஜூலை ஆறில் பிறந்தவர்.
காலத்தை வென்ற கவிஞர் தமிழொளி
குறிஞ்சிப் பாடியில் பிறந்தவர். இவரும்
அவ்வூரில் பிறந்தவர் ஆதலின், இவரை
குறிஞ்சிக் கபிலன் என்று நாம் கூறலாம்.

இவர்,
நல்லாசி பெற்ற நாடகா சிரியர்
பயன்தரத் தக்க பதிப்பா சிரியர்
சிறுமீன் கதைகளும் திமிங்கல நாவலும்
இயக்கிய நயத்தோ டெழுதி வருபவர்
அருட்பா மலர்கள், அருட்பா அமுதம்

பன்னிரு ஆழ்வார், பானுமதி முதலிய
நூற்கள் எழுதிய நூதனக் கவிஞர்

காரண மின்றிக் கதைகளும், கதைகளின்
தோரண மின்றித் தொடர்ச்சியும் இல்லை.

கதையெலாம் வார்த்தை வெடிப்புகள்; கட்டுக்
கதையெலாம் கற்பனை கலந்த துடிப்புகள்
துடிப்பும் வார்த்தை வெடிப்பும் கலந்த
சிறந்த கதைகளும், சிறந்த நாவலும்
எஸ். மெய் யப்பன் எழுதிட வல்லவர்
இந்தக் கவிஞரும் எழுதிட வல்லவர்.
குடும்ப நலத்தைக் குடைசாய்க் காத
கவிஞர்யார் நமது கண்ண தாசனா?
இல்லை! இல்லை! இவர்தான் ஏனெனில்
இந்தக் கவிஞர்க்கு இரண்டே குழந்தைகள்
அண்ணாவின் பேச்சில் அரசியல் இருக்கும்
இவரது பேச்சில் இலக்கியம் சிரிக்கும்.
வளவயல்கள் மரஞ்செடிகள் கொடிகள் எல்லாம்
வண்ணமதில் பச்சையதே! குளத்தின் ஆடை
நலங்கொழிக்கும் பச்சையன்றோ, சிவப்போ மற்ற
நிறமேயோ வேறல்ல! கொடிகள் கூட
உலகுணர பச்சைநிறம் தாங்கி நாட்டின்
உயர்வளத்தைக் காட்டுவதைக் காண்கின் றோம்நாம்!
பலவிதமாய் வாகனங்கள் ஓடு தற்கும்
பச்சைநிறத் துணைவேண்டும்; சட்டம் காட்டும்

என்று தொடங்கும் இந்தக் கவிஞர்
பசலைக் குழந்தையை பச்சை நிறத்தோ
டிணைத்துப் பாட இப்போது வருகிறார்.

***கவிஞர் திருமதி பாலா. கந்தசாமி - மஞ்சள்***

பெண்பாற் புலவர்கள் பெருகிய நாடிது
தென்றல் உலாவரும் செந்தமிழ் நாட்டில்

முன்னாளில் அவ்வையார் மூவர் இருந்தனர்
மூவரும் அன்று முத்தமிழ் வளர்த்தனர்.

இடைக்காலம் என்ன இருண்டா போனது
இல்லை இல்லவே இல்லை அந்த
இடைக்கா லத்திலும் இடையிலாப் பெண்டிர்
பலரால் செந்தமிழ்ப் பாடல் வளர்ந்தது.
அதனால்,
கவிதை வெளிச்சம் கண்மூட வில்லை.
வரதுங்க ராமனின் மங்கல மனைவியும்
அதிவீர ராமனின் அன்புமனை யாட்டியும்
எல்லப்ப நாவலன் இல்லக் கிழத்தியும்
தனிப்பாடல் பாடித் தமிழை வளர்த்தனர்.

முப்பதாண்டு கட்கு முன்னர் இங்கே
பாலாம் பாலெனும் பாவையும் பண்டித
அசலாம் பிகையெனும் அம்மை யாரும்
இனிய தமிழில் இலக்கியம் படைத்தனர்.
பெண்பாற் புலவருள் பெரும்புலவ ராக
விளங்குதல் கண்டு மிகவும் மகிழ்கிறோம்.

கவிக்குயில் சரோஜினி தேவியின் புதல்வியாம்
பத்மஜா நவம்பர் பதினேழில் பிறந்தவர்
பாலாவும் நவம்பர் பதினேழில் பிறந்தவர்

பாப்பாத்தி பத்மஜா வங்கத்தில் பிறந்தவர்
கோதை பாலாவோ கொடிகாத்த குமரன்
பிறந்த ஊராகிய திருப்பூரில் பிறந்தவர்.

பட்டி மண்டபத்தில் பாங்குறப் பேசவும்
கரும்புபோல் சுவைதரும் கவிதை எழுதவும்
வல்லவர்! சிறுகதை எழுதவும் வல்லவர்.

நாற்றங்கால் மஞ்சளினை நான்பாடப் போவதில்லை
தோற்றம் வளர்ச்சியிலே தொடர்புடைய அம்மஞ்சள்
போற்றும் புனிதப் பொருளாகி வஞ்சியர்கள்
நோற்றுத் தவமிருக்கும் நுண்மையது என்பதனால்
நாற்றங்கால் மஞ்சளினை நான்பாடப் போவதில்லை
என்று கூறும் இந்தக் கவிஞர்
மக்கள் பேற்றை மஞ்சள் நிறத்தோடு
இணைத்துப் பாட இப்போது வருகிறார்.

**கவிஞர் இரா. தனசேகரன் - கறுப்பு**

இராதன சேகரன் செல்வத்தால் பெரும்புகழ்
வராதெனத் தெரிந்தவர். மநுநீதி நன்மை
தராதெனத் தெரிந்த தன்மானக் கவிஞர்.

மருதநிலம் சார்ந்த மஞ்சக் குழியெனும்
ஊரில் பிறந்தவர். ஒழுக்க முடையவர்.

கறுத்த இருட்டில் கவிஞர்கள் சிலபேர்
மேனி நாடகம் எழுதுவர். இவரோ
மேடை நாடகம் வெளிச்சத்தில் எழுதுவார்.
கெட்டுப் போகாத கட்டுரை எழுதுவார்
பட்டுப் போகாத பாடல்கள் எழுதுவார்.
இன்றைய அரசியல் இவருக்குப் புரியும்.
சிறுகதை எழுதவும் இவருக்குத் தெரியும்

கால மறிந்து கருவாசல் அடைத்தால்
நிலஉல கத்தின் நெருக்கடி தீரும்
என்பதை இவர்நன் கறிந்தவர் ஆதலால்

மாசறு பொன்னே வலம்புரி முத்தே
காசறு விரையே கரும்பே தேனே

மாலை இட்ட மங்கையே கேளாய்.
முத்துமுத் தான மூன்று குழந்தைகள்
பெற்றது போதும் பெண்ணே இனிநீ
கருத்தடை செய்துகொள் கண்ணே என்றுதன்
இல்லத் தரசியை ஏற்கச் செய்தவர்.
கறுப்பென்றால் உயர்அழகு; கிளியோ பாட்ரா
கட்டழகி, நிறம் கறுப்பு; பெரியார் கூட
கறுப்பைத்தான் மிகவிரும்பி அணிந்தி ருந்தார்;
கறுப்புநிறம் பகுத்தறிவின் சின்ன மென்றார்.
கறுப்புஇனச் சூரியன்கள் விழித்துக் காயும்
காலத்தில் நாமுள்ளோம்; வெளிச்சம் காட்டும்
நெருப்புக்காய் கரித்துண்டு எரிதல் போல
நின்றிருக்கும் உழைப்பாளர் கறப்புத் தானே.
என்று கேட்கும் இந்தக் கவிஞரின்
கறுப்புநிறக் கவிதைநம் காதில் விழட்டும்.

## கவிஞர் ஆராவமுதன் - வெண்மை

தேரிழுக்கும் தமிழ்நாட்டில் கவிதை என்னும்
தேரிழுக்கும் கவிஆரா அமுத னென்பார்
நாரிருக்கம் தோலிருக்கும் பழமா? தோட்டம்
நமக்களிக்கும் நல்வாழைப் பழமா? என்றால்
நாரிருக்கும் பழமன்று, இவரோ வாழ்வில்
நமக்குதவும் நல்வாழைப் பழந்தான் என்பேன்
ஓரிரவில் ஒருநூறு பாடல் பாடும்
ஒப்பற்ற ஆசுகவி பாட்டு மேகம்.

பழுப்பதென்றால் மாம்பழம்போல் பழுக்க வேண்டும்
பார்ப்பதென்றால் கழுகைப் போல் பார்க்க வேண்டும்
விழிப்பதென்றால் சூரியன்போல் விழிக்க வேண்டும்.
விரிவதென்றால் கருங்கடல்போல் விரிதல் வேண்டும்

அழிப்பதென்றால் நோயைப்போல் அழித்தல் வேண்டும்
அசைவதென்றால் தென்றலைப்போல் அசைதல் வேண்டும்
செழித்ததமிழ் கவி-ஆரா அமுத மென்னும்
தென்றல்வந்து வீசட்டும் இப்போ திங்கே!

**கவிஞர் ஆதி கணேசன்** - நீலம்

விண்ணடி பட்டுப் பட்டு
வெண்ணிலா தேய்தல் போன்று
கண்ணடி பட்டுப் பட்டு
கம்பரின் மைந்தன் நைந்தான்.
புண்ணடி நோயின் தொல்லை
பொய்யடி வலிப்ப தில்லை
பண்ணடி பட்டால் ஆங்கே
பாட்டுக்கும் அடிதான் வீழும்.

அடிபடாப் பாடல் பாடும்
ஆற்றலும், எந்த நாளும்
ஒடிபடா தெழுந்து நிற்கும்
ஊக்கமும், பழுத்த பண்பும்
இடைவிடா தெழுதி வீரம்
எழச்செயும் திறனும் கொண்ட
கடிகாரக் கவிஞர் ஆதி
கணேசனின் பாடல் கேளீர்.

**கவிஞர் பண்ணரசன்** - ஊதா

விண்ணரசன் இந்திரனாம் அவனோ காதல்
விளையாட்டில் வல்லவனாம். சோழ நாட்டு
மண்ணரசன் பதினாறு லட்சம் பொன்னை
மாகவிஞன் ஒருவனுக்கு வழங்கி னானாம்.
(முகத்தில் ஒற்றைக்)

கண்ணரசன் ரஞ்சித்சிங் ஏழை மக்கள்
கண்ணீரை வயலுக்குப் பாய்ச்சி னானாம்
பண்ணரசன் அப்படியா? இங்கு வாழும்
பாவலர்க்கே வழிகாட்டும் பாட்டுச் சிங்கம்.
முன்னோர்போல் செந்தமிழைக் கற்றுத் தேர்ந்து
முறையாகப் பாட்டெழுதும் சிலருள், இந்தப்
பண்ணரசன், எனும்கவியும் ஒருவ ராவார்.
பாமுகிலாய் விளங்குமிந்தக் காள மேகம்
விண்மீதில் உலவாமல் குறிஞ்சிப் பாடி
வீதியிலே உலவுகின்ற காள மேகம்
எண்ணத்தைக் கவிதைகளாய் மாற்றிக் காட்டும்
இம்மேகம் பொழியட்டும் இப்போ திங்கே.

### கவிஞர் சக்தி -சிவப்பு

பண்பட்ட கவிஞர் சக்தி
பச்சோந்திக் கவிஞர் தம்மைக்
கண்டிக்கும் கவிஞர் நன்கு
கற்றவர். புலவர் போற்றும்
வண்ணமும் சிந்தும் பாட
வல்லவர். ஏழை மக்கள்
கண்ணீரைக் கவிதை யாக்கும்
கவிமணி. செய்யுட் சிங்கம்

புண்ணியம் பாவம் என்று
புலம்பாத கவிஞர். அந்தக்
கிண்ணத்தில் குடியி ருக்கும்
கிறுக்கன்போல் பெரியார் சொன்ன
எண்ணத்தை எதிர்க்க மாட்டார்
எதிர்ப்பாரை விடவும் மாட்டார்.
அன்னவர் இப்போ திங்கே
அரங்கத்தில் பாடக் கேட்போம்.

## தமிழழகன் - எல்லார்க்கும் எல்லாம்

வண்ணங்கள் பாடுதற்கு மீண்டு மிங்கே
வந்தவரே! ஏடுகளில் வாரா வாரம்
எண்ணங்கள் தருவதற்கும் சளைத்தி டாத
இளையவனோ! எனவியந்து போற்றத் தக்க
தண்ணமுதத் தமிழ்க்கவிஞர்! நல்ல நண்பர்
தமிழகன் எல்லார்க்கும் எல்லாம் என்னும்
பண்ணமுதத் தலைப்பினிலே களைப்பு நீங்கப்
பாடுதற்கு வந்துள்ளார்கள் பாடச் செய்வோம்

## வித்துவான் வே. இலட்சுமணன்
### எல்லோரும் ஓர்குலம்

எல்லோரும் ஓர்குலம் என்னும் தலைப்பில்
பழுத்த கவிதையைப் படைத்திட இருப்பவர்
என்னரும் நண்பர்! இலட்சுமணன் ஆவர்!

இவர்யார் என்றால் இங்கமர்ந் திருக்கும்
கவிஞர்கள் போற்றும் கவிஞர் திலகம்!
மக்கள் திலகத்தின் மனத்தைக் கவர்ந்தவர்!

திருவை யாறெனும் திருவிழா ஊரிலே
பிறந்து வளர்ந்து பெருந்தமிழ் கற்றுப்
பண்டித வித்துவான் பட்டம் பெற்று
விளங்கும் வித்தகர்! விடுதலைப் பறவை!

உரையெழுதும் ஆற்றல் உடையவர் புதினமாம்
நாவல் எழுதிட நன்கு தெரிந்தவர்!
திரைப்பாடல் வேண்டுமா? தீட்டித் தருவார்!
சிறுகதை வேண்டுமா? தேன்போல் தருவார்!
இலக்கிய உலகம் இவரைநன் கறியும்!
இந்த வித்துவான் எழுத்தைப் படித்தால்,
குறுகிய நெஞ்சமும் குருத்தென விரியும்!

தசரத ராமனின் தம்பி லட்சுமணன்
காட்டும் வீரத்தைக் காட்டினான் அன்றி
பாட்டா பாடினான்? பாடினான் இல்லை!

ஆனால் இங்கே அமர்ந்துள லட்சுமணன்
கனியக் கனியக் கவிதை பாடுவார்!

வே.லட் சுமணா! விருந்து தந்திட
வா. லட்சுமணா வாவா என்றே
மக்கள் அழைப்பதால் மாம்பிள்ளை வித்துவான்
சொந்தக் குரலில் சந்தக் கவிதையைச்
சந்தனத் தமிழர் சபையிலே பாடுவாம்!

*செல்வபாரதி - உலகமொழி ஒன்றே*

ஆத்தி சூடி வெண்பாவை நமக்கு
யாத்துக் கொடுத்தவர் இராம பாரதி

யானைமே லழகர் நொண்டிச் சிந்தெனும்
புதுநூல் பாடிய புலவர் - ஆட்டுக்
கறிசமைத் துண்பதைக் கண்டித் தொதுக்கும்
அரிசமய பக்தராம் அநந்த பாரதி

பலபொருட் சூடா மணிநிகண் டென்னும்
தொல்பொருட் பயன்தரும் சுவடி தந்தவர்
மீசை இல்லா ஈசுர பாரதி
பசைப்பாக்க ளாகிய இசைப்பாக்கள் தந்தவர்
குடுமிப் புலவராம் குஞ்சர பாரதி!

தெருவிளை யாடல் தெரிந்து, செந்தமிழ்த்
திருவிளை யாடல் நாடகம் செய்து
கீர்த்தி கண்டவர் கிருட்டிண பாரதி

திருத்தொண்டர் மாலை செய்து சிறந்தவர்
குடுகுடு கிழவராம் குமார பாரதி
ஊடற் பதிகமே உதட்டுப் பதிகம்
உதட்டுப் பதிகமே உறவுப் பதிகம்
உறவுப் பதிகத்தில் உப்புதான் அதிகம்
என்பதால் இறைவன் பதிகமாம்
கூடற் பதிகத்தைப் பாடிக் கொடுத்தவர்
குணங்குடி கொண்ட கோவிந்த பாரதி.

அருமைத் தமிழின் அருகிலே நெருங்கும்
எருமை இந்தியை, இருமல் ஓசையைக்
கங்கை நதியினர் காட்டுக் கூச்சலை
இலக்கண விளக்கமோ இலக்கிய நுணுக்கமோ
சரக்கோ சாரமோ சரித்திரப் புகழோ
சிறிதுமில் லாத சீச்சீ இந்தியைத்

திக்குத் திசையேறிச் செல்லாத மொழியை
தீந்தமிழ் நாட்டில் செல்லாத மொழியை
கசக்கும் எட்டிபோல் கசக்கும் மொழியை
சிக்கல் மொழியைத் திருவாரூர் அமைச்சரின்
பேச்சடி வாங்கும் பெருந்தொந்தி இந்தியை

முத்தமிழ்ச் சித்தாரம் மூதறிஞர் அண்ணா
ஆட்சியைக் கண்டே அலறும் இந்தியை

ஆடை சுற்றித்தம் பட்டம் அடித்துப்
பாடைமேல் ஏற்றப் படவேண்டிய பீடையைப்

பட்டாவக் கலைஞராம் பாவின் வேந்தராய்
ரத்தினம் சுப்பு ரத்தினம் எதிர்த்தார்.
இத்தினம் பாரத ரத்தினம் எதிர்க்கிறார்!

இங்கேன் வருகிறாய் இந்தி மந்தியே!
என்றுமுன் எதிர்த்தார் எழுச்சி ஊட்டினார்
பசுமலை சோம சுந்தர பாரதி

வற்றிய ஓலைபோல் வறுமையால் வற்றிய
மற்றொரு பாரதி மாணிக்கப் பருதி
மாற்றார் ஆட்சியை மறுத்துப் பாடினான்.

அவன்யார்? அவன்யார்? அவன்யார் என்றால்
அவன்தான் தமிழ்மேல் ஆசை வைத்தவன்.

தப்புக் கணக்கிட்டுத் தனித்தோல்வி கண்டு
குப்புற விழாத சுப்பிர மணியன்

நித்திரைக் கவிஞர்க்கு மத்தியில் தோன்றிய
முத்திரைக் கவிஞன்! முண்டாசு பாரதி!

நீட்டாறு வெட்டி நிமிர்ந்த மன்னர்போல்
பாட்டாறு வெட்டிப் படைத்தவன் பாரதி!

ஊரும் பேரும் உடைய பாரதி
பாரதம் ஓட்டிய பாரதி தீமையைப்
பார் - அதம் செய்கிறேன் என்ற பாரதி!

பாரதி எனக்குப் பாட்டன்! நானவன்
பெற்ற வெற்றியைப் பெற்றிட வந்தவன்!
அவன்புகழ் பாடி அவனைப்பின் பற்றும்
செல்வ பாரதியாம் செந்தில் வேலவன்
கனிந்த செந்திறக் கவிஞர் பாலொடு
கலந்த தேனெனக் கவிதை தருபவர்.

"ஓஎன் தோழரே! உலகமொழி ஒன்றே'
எனும்பொருள் பற்றி இப்போது பாடிட
அவரை இங்குநான் அழைக்கிறேன். இந்த
முன்னுரை யோடறி முகத்தை முடிக்கிறேன்.

**பூங்குன்றன் -**
*பாலைவனமெல்லாம் பட்டணமாகவேண்டும்*

தண்ணீர்த் துறையிலே சனிநீ ராடியும்
தண்டமிழ்த் துறையிலே தனிச்சுவை தேடியும்
வருபவர்! புதுமைகள் தருபவர்! புவிக்கே
முன்மொழி யாகிய தென்மொழித் தமிழே
என்மூச் சென்பவர். இயற்கையும் செயற்கையும்
கலந்த உலகின் கற்பனை அறிந்தவர்!

ஊன்றுகோல் போலே உதவிடும் நண்பர்
மூன்று மொழிகளின் மூலத்தை அறிந்தவர்!

நண்பர் மிகவும் நல்லவர்! குங்குமக்
குமரவேல் எனும்பூங் குன்றன் என்பவர்!

கிளைகொண்ட சிந்தனைச் செய்யுள் செய்திடும்
ஆற்றல் மிக்கவர்! அதனால் சிறந்தவர்!

ஆராய்ச்சி யாளர்! ஔவை துரைசாமி
அவர்கட்கு வாய்ந்தநல் அருமைமாப் பிள்ளை!

பாலைவன மெல்லாம் பட்டண மாக
வேண்டும் என்னும் விரிபொருள் பற்றி
இளைத்த கவிஞர் இப்போது பாடுவார்!

### ஈரோடு தமிழன்பன் - ஒரே உலகம்

ஒரேவொரு நிலவு! விண்ணில்
ஒரேவொரு வெய்யில் வட்டம்
ஒரேவொரு உலகம்! இந்த
ஒரேவொரு உலகைப் பற்றி
ஒரேவொரு கவிஞர் பாட
இங்குவந் துள்ளார்! இங்கு
ஒரேவொரு வார்த்தை! அந்த
ஒருவார்த்தை இவரைப் பற்றி!

தரையன்பர் கேட்டே செல்வம்
தராவிடில் நம்மை எல்லாம்
நுரையன்பர் என்று ரைப்பர்!
நுனிமூக்கில் கோபம் வைப்பர்!
அரையன்பர் அரைக்கால் தன்பர்
அதில்பாதி அன்ப ரெல்லாம்
குறையன்பர் என்றே எண்ணி
இவர்தமிழ் அன்ப னானார்!

ஈரோடு பெரியார் வாழ்வின்
இருப்பிடம் ஆகும்! அந்த
ஈரோடு சமுதா யத்தை
எடைபோடும் கருத்துக் கூடம்!
ஈரோட்டுப் பெரியார் பற்றி
இனியநல் உலகம் பற்றி
ஈரோடு கவிஞர் இங்கே
இனிமை யாய்ப் பாடக் கேட்போம்!

## கோவேந்தன்

கோவேந்தன் தனித்தமிழ்க் கொள்கைக் கவிஞர்
பாவேந்தர் பாட்டையும் பாவாணர் எழுத்தையும்
புறப்பொருள் அகப்பொருள் போன்று மதிப்பவர்

வகுத்த இலக்கண வரம்பு கெடாமல்
செய்யுள் எழுதும் திறமை படைத்தவர்
எதிரியை நேரிலே எதிர்த்துப் பேசும்
நக்கீரக் கவிஞர் நயந்தோ பயந்தோ
வாழ்ந்திட வில்போல் வளையாத கவிஞர்

நாடு நலம்பெற ஏடு நடத்தினார்
நடத்திய ஏடெனும் நங்கை உடுத்திட
பட்டினால் ஆன பட்டாடை வழங்கினார்

தடாகத்தில் வளரும் தாமரைப் பூக்களோ
வாணன் கருத்தை வாதிட்டு வளைத்து
கோள வாககிடக் கோவேந்தன் வருகிறார்.

# பேரறிஞர் அண்ணா கவியரங்கம்

## - தலைமைக்கவிதை

படம்பார்க்கச் செல்லாமல் பாட்டரங்கின் பக்கத்தில்
இடம்பார்த் தமர்ந்தபடி எங்கள் முகம்நோக்கும்

அத்தனை பேருக்கும் அன்பு வணக்கங்கள்!
சத்தம் இடாதீர்! சபைநடுவே நிற்காதீர்!

நானிங்கும், என்னோடு நண்பர்களும் மற்றவரும்
ஏனிங்கே கூடியுள்ளோம் என்பதனை நன்கறிவீர்!

விண்ணுக்குச் செங்கதிர்போல், வெற்றிக்குச் சேரனைப் போல்
கண்ணுக்கு நல்லபல காட்சிதரும் சோலையைப் போல்

பேரறிஞர் அண்ணா பெரிதும் விளங்குவதை
ஊரும் அறியும் உலகமும் நன்கறியும்.
அந்த நெருப்புருண்டை ஆழ்கடலில் மூழ்கியபின்
வந்து விளையாடும் வட்டநிலா ஈரத்தால்

மேனி குளிர்ந்திருக்கும் வேளையிலே, இவ்வரங்கில்
சேனைக் கவிஞர் சிலர்பாட வந்துள்ளார்.

கண்ணனைப் பாட கவிஞர் வரவில்லை.
அண்ணனைப் பாடவே ஆறுபேர் வந்துள்ளார்.

## புலவர் கோதை - நாடு

இத்தமிழ் நாட்டின் இறைவ னாகவும்,
தூங்காப் பெரும்புகழ்த் துறைவ னாகவும்
தகுதியால் உயர்ந்த தலைவ னாகவும்
வேரசை யாத விருபக மாகவும்
நேரசை யாகவும் நின்று விளங்கிய
அண்ணாவால் நம்நா டடைந்த சிறப்பினைக்
குறித்து மிகவும் பொருத்த மாகப்
புலவர் கோதை புகல்வார் இங்கே.

## தமிழ்ப்பித்தன் - சங்கே முழங்கு

கொடுத்துச் சிவந்து குமண வள்ளல்
ஒருதிசையில் இருந்தான் எனினும், அவன்புகழ்
பலதிசை களிலும் பரவிச் சென்றதாம்

பெரும்புலவர் மீனாட்சி சுந்தரம் பிள்ளை
திருச்சியில் வாழ்ந்தவர் எனினும், அவர்புகழ்
இங்கிருந்து புறப்பட்டு இங்கிலாந்து சென்று, பின்
அங்கிருந்து படியே அமெரிக்கா சென்றதாம்.

செல்வாக்கு நாலைந்து சிற்றூரைத் தாண்டும்
நல்ல புகழே நாட்டினைத் தாண்டும்.
நாட்டினைத் தாண்டும் நற்புகழ் பெற்றுள
தாமரைக் கவிஞர் தமிழ்ப்பித்தன் அவர்களோ
பத்துக் கவிஞர்க்கு மத்தியில் விளங்கும்
முத்துக் கவிஞர் முத்தமிழ் வித்தகர்
கவிதை இலக்கணம் நன்கு கற்றவர்
பாவேந்தர் அவர்களின் பாராட்டைப் பெற்றவர்
சங்கே முழங்கெனும் தலைப்பில்
இங்கே வந்திவர் இப்போது பாடுவார்.

### திருமதி தங்க அன்புவல்லி - பாண்டியன் பரிசு

புல்லின் நுனியில் பனித்துளி தூங்கும்
புகழெலாம் திசைகளில் தூங்கும்
நெல்லின் உடம்பில் கோடுகள் தூங்கும்
நீரினில் சிறுநுரை தூங்கும்
சொல்லும் பொருளும் தங்கஅன்பு வல்லி
தொடுக்கின்ற பாடலில் தூங்கும்
நல்லபெண் கவியே பாடிட வருக!
நறுந்தேன் கவிதைநீ தருக.

### அரு.கோபாலன் - மகன்

தேரோடும் கோயில் சென்று
தேவாரம் பாடி டாத
ஆரூர் ஆளும் கட்சி
அரசியல் அப்பர் தீமை
தாராத கூட்ட ணிக்குச்
சம்பந்த ராய்வி ளங்கும்
ஆரூரார் பெருமை பற்றி
அரு. கோபால் பாடக் கேட்போம்.

### கவிஞர் பொன்மணி வைரமுத்து

புதுக்கவிதை உரைநடையின் மறுபக் கந்தான்
புகழ்பெற்ற ஹைக்கூவோ இதன்பக் கந்தான்
மதுக்கவிதை உமர்கையா மின்பக் கந்தான்
மகிழ்மணி மாலைமுகைய தீன்பக் கந்தான்
சதிர்கவிதை குஞ்சரபா ரதிபக் கந்தான்
சன்மார்க்கப் பாடல்வள்ள லார்பக் கந்தான்
நதிக்கவிதை ஆடகப்பொன் மணிபக் கந்தான்
நாடறிந்த கவியரசி பாடக் கேளீர்!

**கவிஞர். நா. காமராசன் - எரிச்சல்**

குவலயத் தலைவர்நம் கு.காம ராசர்.
நல்ல கவிஞர் நா. காம ராசன்.
அறுபத்தி ரண்டாம் ஆண்டி லிருந்தே
இந்த கவிஞரை எனக்குத் தெரியும்
ஆனந்த விகடனில் அப்போ தொருநாள்
முத்து முத்தாக வியர்க்கும் வியர்வையைப்
பற்றியிக் கவிஞர் பாடிய கவிதையைப்
பத்து முறைநான் படித்து வியந்தேன்
மற்றவர் திறமையை மதிக்கும் இக்கவி
எரிச்சலைப் பற்றி இப்போது பாடுவார்.

**செல்வி குருவம்மாள் - தந்தை பெரியார்**

அன்று,
ஆதி மந்தியும், அவ்வைமூ தாட்டியும்
பாரி மகளிரும் பாக்கள் பாடினர்

கம்பன் பாடிய காப்பியத் திற்குச்
சாற்றுக்கவி யளித்த தையலாம் தஞ்சை
அஞ்ச னாட்சியும் அஞ்சா நெஞ்சனாம்
வரதுங்க ராம பாண்டியன் மனைவியும்
எல்லப்ப நாவலர் இல்லக் கிழத்தியும்
தமிழ்வண்ணச் சரபமாம் தண்ட பாணி
சுவாமியின் மனைவி சுந்த ரம்மையும்
பழுது படாத பாக்கள் பாடினர்.
அவர்களைப் போலவே அன்புச் செல்வியாம்
குருவம் மாளும் கொத்துமுத் தமிழில்
புதுமைக் கவிதைகள் அடிக்கடி புனைந்து
பாவரங் கத்தில் பாடி வருகிறார்
அன்னவர் இப்போ தரங்கின்முன் வந்து
பெரியார் அவர்களின் அருமை பெருமையை
நயம்படப் பாடுவார். நாமதைக் கேட்போம்.

## கவிஞர் இளந்தேவன்

**- வகைவகையான நூலகம் பாரீர்**

கொடுத்துக்கை சிவந்த குமண வள்ளல்
ஒருதிசையில் இருந்தான் எனினும் அவன்புகழ்,
பலதிசை களிலும் பரவிச் சென்றதாம்

பெரும்புலவர் மீனாட்சி சுந்தரம் பிள்ளை
திருச்சியில் வாழ்ந்தவர் எனினும் அவர்புகழ்
இங்கிருந்த புறப்பட்டு இங்கிலாந்து சென்று பின்
அங்கிருந்து படியே அமெரிக்கா சென்றதாம்.
செல்வாக்கு நாலைந்து சிற்றூரைத் தாண்டும்
நல்ல புகழே நாட்டினைத் தாண்டும்
நாட்டினைத் தாண்டும் நற்புகழ் பெற்றுள
கவியரசர் இளந்தேவன் கவிதை வழங்குவார்!

பிச்சைக்கோர் பாஸ்கரதாஸ்; இலக்கியத்தின்
பெருமைக்கோர் சங்கரதாஸ்; இளமை தூண்டும்
இச்சைக்கோர் உடுமலைவாழ் முத்து சாமி;
என்றுசொல்ல நான்கேள்விப் பட்ட துண்டு.
கச்சிதமாய்க் காவியங்கள் படைப்ப தற்கோர்
கவியரசர் இளந்தேவன் என்று சொல்வேன்.
எச்சிலையும் தேனாக மாற்றும் சக்தி
இவர்கவிதைக் குண்டிவரின் பாட்டைக் கேளீர்.

**கவிஞர் குடியரசு- அந்தப் பன்னிரெண்டு ஆண்டுகள்**

மாரியம்மன் தாலாட்டைப் படித்து விட்டு
மண்டபத்தில் கவிபாடிக் காலம் தள்ளும்
சேரியம்மன் தாலாட்டுப் புலவர்க் கெல்லாம்
தீப்பந்தம் போன்றதிவர் கவிதை! செம்பொன்

ஏரியம்மன் சாமிக்கும், சமுதா யத்தை
ஏமாற்றும் ஆட்களுக்கும் பகைவர்; வள்ளல்
பாரியிடம் இருந்தாரே கபிலர் அந்தப்
பாவலர்போல் பாடுமிவர் பாட்டைக் கேளீர்.

### கவிஞர் வெங்கடாசலம் - கலைஞர்

காவிரியின் கரையோரத் திருச்சி நாட்டின்
கண்கவரும் ஊரான துறையூர்க் காரர்!
தீவிற்குள் எரிகின்ற விளக்கைப் போன்ற
தி.மு.க திருவிளக்கு நெடுநாள் தொண்டர்
நாவாற்றல் படைத்தவெங்க டாச லத்தை
நானிங்கே அழைக்கின்கலைஞர் தன்னை
ஆவலுடன் ஆங்கிலத்தில் வாழ்ந்த வந்தார்
அனைவருமே இவர்கவிதை விரும்பிக் கேட்போம்.

### கவிஞர் மேத்தா - கருப்பை

பெண்ணெனப் படுபவள் பேதை பெதும்பை
அவளுடற் குள்ளே அமைந்த கருப்பை
தையற் காரன் தைக்காத சிறுபை

விவாகம் ஆகும் வரையிலது வெறும்பை
வெள்ளை வியர்வையை விழுங்கினால் கருப்பை

அமெரிக்க நாட்டின் அழகு நடிகையாம்
இளமை ததும்பும் எலிசபெத் டெயிலர்
பழகவும், உதட்டைப் பழுக்க வைக்கவும்
விலகவும், சிலரை விலக்கவும் தெரிந்தவள்

அச்சார நடிகையாம் அவளது கருப்பை
கெட்ட நடத்தையால் கெட்டுப் போனதால்
அவளது கருப்பை அகற்றப் பட்டதாம்.
ஆகவே இனிமேல் அந்த நடிகை
கொஞ்சலாம் கொஞ்சிக் குலாவலாம் அன்றிப்
பிஞ்சுக் குழந்தை பெறமுடி யாது.
பிஞ்சுக் குழந்தை பெறவேண்டு மாயின்
கற்பா வேண்டும்? கருப்பைதான் வேண்டும்.
வெள்ளம் தங்கிடப் பள்ளம் வேண்டும்
காமநீர் தங்கிடக் கருப்பை வேண்டும்

எருப்பை தள்ளும்! கருப்பை கொள்ளும்!
கருப்பைக்குள் இருந்த காரணத் தால்நாம்
கருப்பர்கள். நம்மூர் கருவூ ராகும்.

கருப்பைக்குள் குழந்தை கற்கும் இலக்கணம்
உறுப்பிலக் கணமாம்! ஒப்பிலக் கணமாம்
தாயின் கருப்பை தன்னில் வளர்ந்த
விந்து மனிதர்நாம். வெண்பாப் புலிகள்நாம்!

வெள்ளைப் பிரதமர் வின்ஸ்டன் சர்ச்சில்
தாயின் கருப்பை தன்னில், ஒன்பது
திங்கள் மட்டுமே தங்கி யிருந்தவர்
அந்தநெப் போலியன் அன்னையின் வயிற்றில்
பதினோரு மாதம் படுந்திருந் தானாம்!

கருப்பை குறித்துக் கவிபாட வந்துள
நண்பர் மேத்தா நல்ல கவிஞர்
இவர்க்குச் சீட்டாடத் தெரியுமோ என்னவோ
அதனைநான் அறியேன். ஆயினும் இவரிடம்
ஓங்கிய திறமை உண்டென் றறிவேன்.

சிறப்பு மிக்கதோர் சிறுகதை எழுதி
ஆனந்த விகடனின் ஆயிர ரூபாய்ப்
பரிசினைப் பெற்றவர் பாட வருகிறார்.
கருப்பைக் கவிதையைக் கவனமாய்க் கேட்பீர்.

## நாமக்கல் கோபாலன் - தொட்டில்

ராயர்கல் என்பது ராமக்கல் ஆகி
ராமக் கல் பின்னர் நாமக்கல் ஆனதாம்.

நாமக்கல் என்னும் நகரந்த தன்னில்
பிறந்த ராமலிங்கம் பிள்ளை அவர்களோ
காங்கிரஸ் காரர். கவிஞர்கோ பாலனோ
கழகக் கவிஞர் கறுப்புச் சட்டைப்
பெரியார் தம்மையும் பேரறிஞர் தம்மையும்
கனவிலும் மதிக்கும் கவிஞர் ஆவார்.

திரைகடல் ஓடியும் திரவியம் தேடென
ஔவையார் சொன்னார் அல்லவா? அவரது
வாக்குப் படியிவர் தூக்கமே இன்றிக்
கத்திக்கொண் டிருக்கும் கருங்கடல் கடந்து
செல்வம் திரட்டச் சிங்கப்பூர் சென்றவர்.
கல்லைத்தான் மண்ணைத்தான்
காய்ச்சித்தான் குடிக்கத்தான்
கற்பித்தானா?
இல்லைத்தான் எனக்குத் தான்
பொன்னைத்தான் கொடுத்துத் தான்
இரட்சித் தானா?
என்று கலங்கிய இராமச் சந்திர
கவிராயர் போன்று வறுமையில் கலங்கி
வாடா கவிஞர்! ஒருபோதும் தண்ணீர்

போடாத கவிஞர்! மூக்குப் பொடியும்
போடாத கவிஞர்! புகழுக் குரிய
கவிஞர் வரிசையில் இவருமோர் கவிஞர்
உணவைக் காட்டினும் உணர்வை மதிப்பவர்
காதலைக் காட்டினும் கவிதையை மதிப்பவர்.

கட்டிய மனைவியின் கர்ப்பூர மேனியைத்
தொட்டுச் சுகித்த தோழர் கோபாலன்
தொட்டில் கவிதையைத் தொடங்குவார் இங்கே!

### கவிஞர் நிர்மலா சுரேஷ்

*சட்ட மன்ற மரபு காத்த மாண்பாளர்*

எண்ணெய் ஊற்றாமலே எரியும் சூரியன்
தனித்துநின் றியங்கும் தகுதி உடையது
இந்த உலகில் இத்தமிழ் நாடும்
தனித்துநின் றியங்கும் தகுதி யுடையது
ஆதலால்,
செந்தமிழ் நாடு சிறந்த நாடு
நெருஞ்சிப்பூப் போன்ற நிர்மலா சுரேஷ்
படைத்துக் காட்டும் பாடல்தேன் கூடு!
தேன்கூடு கட்டும் திருமதி நிர்மலா
இந்த மேடையில் இப்போது பாடுவார்.
நீல வானுத் கொருநிலா! அதுபோல்
நிர்மலா சுரேசும் கவிவானுக் கொருநிலா
இன்றைய பெண்பாற் கவிஞருள் இவரொரு
பூமாலைக் கவிஞர். புகழ்மாலைக் குரியவர்
சூடிக் கொடுத்த சுடர்க்கொடி யாகிய
ஆண்டாள் பாடிய அந்தப் பாடல்கள்
இந்தப் பெண்மணி இயற்றும் பாடல்கள்
தொங்கும் நிலவைச் சுற்றிச் சுற்றி
வருகின்ற பாடல்கள் விஞ்ஞான வண்டுகள்

## புலவர் பெரி. சிவனடியான்

**- நகரத்தாரும் வாணிபமும்**

எண்ணற்ற நெல்வகை இருந்த போதிலும்
சிறந்த நெல்லையே செந்நெல் என்கிறோம்
இரும்பாம் அதனைக் கரும்பொன் என்கிறோம்
வெள்ளியாம் அதனை வெண்பொன் என்கிறோம்
சிறந்த பொன்னையே செம்பொன் என்கிறோம்

சிறந்த புலவர் பெரி. சிவ னடியான்
எப்படிப் பட்டவர் என்று கேட்டால்
சிறந்து விளங்கும் செம்பொன் போன்றவர்
தண்ணீர்ப் பூக்களுள் தாமரை போன்றவர்.
இவர், புதுவயல் தந்த புலவர்
இலக்கியப் புலவர்கள் வரிசையில் இடம்பெறத் தக்க
புலவர். ஓங்கும் புகழும் குரியவர்

வகுத்த இலக்கண வரம்பு கெடாமல்
பாக்கள் இயற்றி வருமிப் பாவலர்
இந்த மேடையில் இப்போது பாடுவார்.

## கவிஞர் மலையமான்

குமணன் கொடுத்தான் கொடுத்தகை சிவந்தது
வெட்டினான் குட்டுவன். வெற்றி கிடைத்தது
வீரத்தில் கிடைக்கும் வெற்றியைக் காட்டிலும்
செய்யுளில் கிடைக்கும் வெற்றியே சிறந்தது.

கபிலரும் பரணரும் கம்ப னாடரும்
பெற்ற வெற்றியே பெரிதாய் விரிந்து

வளர்ந்து வருவதை வையத்தில் பார்க்கிறோம்
ஆகவே, கவிஞன் அடையும் வெற்றியே
கால வெள்ளத்தில் கரையாத வெற்றியாம்
அத்தகு வெற்றிக் குரியவராகிய
மாண்புமிகு கவிஞர் மலையமான் அவர்கள்
இந்த மேடையில் இப்போது பாடுவார்.

**கவிஞர் ஏ. நாகப்பன் - கூட்டல்**

புல்லின் நுனியில் பனித்துளி தூங்கும்
புகழெலாம் திசைகளில் தூங்கும்
நெல்லின் உடலில் கோடுகள் தூங்கும்
நீரினில் சிறுநுரை தூங்கும்
சொல்லும் பொருளும் நாகப்பன் அவர்கள்
தொடுக்கின்ற கவிதையில் தூங்கும்
வல்லமை மிக்க நாகப்பன் அவர்கள்
வழங்கிடும் கவிதையைக் கேளீர்.

**கவிஞர் வாசு. எம்.ஏ - மூட நம்பிக்கை**

கட்டடம் கட்டுபவன் ஒரு
கல்லொடு மற்றொரு கல்லினைக் சேர்த்ததை
ஒட்டிடும் தன்மையைப் போல் - பதம்
ஒட்டுவ தாலுரு வாகும் தமிழினில்
பட்டமும் பெற்றவராம், வாசு (இவர்)
பாட்டுப் படையில்நம் நாட்டுத் துறைமுகப்
பட்டினம் பெற்றகலம் - இவர்
பாட வருகிறார்! கேளுங்கள் தோழரே!

## கவிஞர் டி. இரவிகுமார்

இயற்கைத் திறமையும் செயற்கை முயற்சியும்
இருப்பின் சிறப்பொடு கவிதை இயற்றலாம்
புரட்சிக் கவிஞர்போல் புதுமை படைக்கலாம்
வாணி தாசர்போல் சிறந்து விளங்கலாம்.
இன்றுநம் நாட்டின் இளைய தலைமுறை
பாவேந்தர் வழியைப்பின் பற்றி வருவதால்
பழமையைப் புகழ்ந்து பாடுவது மில்லை
நலிந்த கருத்தை நாடுவது மில்லை
இரவி குமாரெனும் இனிய கவிஞரும்
அப்படிப் பட்டவர். ஆதலின் அன்னவர்
இயற்றும் கவிதையில் இருள்படிவ தில்லை.
விளக்கில் ஏற்றிய மற்றொரு விளக்குபோல்
விளங்கும் கவிஞர்இம் மேடையில் பாடுவார்.

## கவிஞர் ஆர் என். தயானந்தன்

சந்தங்கள் யாவும பாட்டுத்
தமிழுக்குத் தோழி யாகும். - செந்தீப்
பந்தங்கள் யாவும் எண்ணெய்ப்
பசிகொண்ட வெளிச்ச மாகும்!
சொந்தங்கள் உறவில் தோன்றும்
தொடர்கதை யாகும். யானைத்
தந்தம்போல் சிறப்பு மிக்க
தயானந்தன் பாட்டைக் கேளீர்.

### கவிஞர் பால இரமணி - அறுபது சாதித்தது

புல்லின் நுனியில் பனித்துளி தூங்கும்
புகழெலாம் திசைகளில் தூங்கும்
நெல்லின் உடலில் கோடுகள் தூங்கும்
நீரினில் நுரைமுட்டை தூங்கும்
சொல்லும் பொருளும் கவிபால ரமணி
தொடுக்கின்ற பாடலில் தூங்கும்
நல்ல கவிஞரே! பாடிட வாரீர்
நறுந்தேன் கவிதைகள் தாரீர்!

### பேராசிரியர் சொ.சொ. மீ. சுந்தரம் எம்.காம் - அரசியல் சந்தை

குமணன் கொடுத்தான் கொடுத்தகை சிவந்தது
வெட்டினான் குட்டுவன் வெற்றி விளைந்தது
வீரத்தில் கிடைக்கும் வெற்றியைக் காட்டிலும்
செய்யுளில் கிடைக்கும் வெற்றியே சிறந்தது.

கபிலரும் பரணரும் கம்ப நாடரும்
பெற்ற புகழெலாம் பெரிதாய் நீண்டு
வரைந்து வருவதை வையத்தில் பார்க்கிறோம்
ஆகவே, கவிஞன் அடையும் வெற்றியே
கால வெள்ளத்தில் கரையாத வெற்றியாம்.

சிறந்த கவிஞர் சொ. சொ. மீ. சுந்தரம்
அத்தகு வெற்றியை அடைந்து வருபவர்
கரையாத வெற்றிக் கவிதைகள் தருபவர்
அரசியல் சந்தையின் ஆர்ப்பாட்டம் குறித்து
அவரிப் போது அரங்கில் பாடுவார்.

## கவிஞர் எழில் முதல்வன்

சறுக்கி விழாமல் வெற்றிபெறும்
தகட்டூர்க் கவிஞர் எழில்முதல்வன்
பறக்கும் பறவைகள் பலவற்றுள்
பாடத் தெரிந்த தமிழ்ப்பறவை
நொறுக்கி எறியும் வீரத்தில்
நுழைந்து வாழும் புகழைப் போல்
சிறப்புக் குரிய எழில்முதல்வன்
தேன்மழை பொழிவார் இப்போது.

## கவிஞர் கா. வேழவேந்தன் - குமைச்சல்

வாக்கிற் சிறந்த வழக்கறிஞ ராகிய
வேழ வேந்தன் ஆழமாய்ப் படித்தவர்
நமைச்சல் எடுக்காத அமைச்சராய் இருந்தவர்

நாட்டுக்கும் பற்பல நன்மைகள் புரிந்தவர்
பாட்டுக் காகப் பரிசுகள் பெற்றவர்

குமைச்சலைப் பற்றி முன்னாள் அமைச்சர்
இந்த மேடையில் இப்போது பாடுவார்.

## கவிஞர் தணிகைச் செல்வன்

சந்தங்கள் யாவும், பாட்டுத்
தமிழுக்குத் தோழி யாகும்
பந்தங்கள் யாவும் எண்ணெய்ப்
பசிகொண்ட வெளிச்ச மாகும்
சொந்தங்கள் உறவில் தோன்றும்
தொடர்கதை யாகும். யானைத்
தந்தங்கள் பெருமை தேடித்
தருகின்ற பற்க ளாகும்.

சொற்களில் ஓரெ ழுத்துச்
சொற்களே தலைமை தாங்கும்
கற்களில் வைரத் திற்குக்
காவியம் உண்டு. அந்தக்
கற்களைப் போற்சி றந்த
கவிஞராம் தணிகைச் செல்வன்
சொற்களால் தொகுத்த மைந்த
சுவையான கவியைக் கேட்போம்.

*கவிஞர் கடலூர் பாலன்*

பக்குவத்தை பழுத்தபழம் காட்டும் நல்ல
பாடல்களை அப்பாடல் கருத்தே காட்டும்
தக்கவர்தம் கவிதைகளே தமிழைக் காக்கும்
தமிழ்நுட்பம் அறியாதவர் சருகுச் செய்யுள்
மக்களிடம் போய்ப்பரவும் இந்த நாளில்
மணிக்கவியாம் கூடலூர் பாலன் பாடல்
விக்கலுக்கு நீர்போன்ற பாடலாகும்
வேண்டுமெனில் கேளுங்கள் இப்போ திங்கே.

## சென்னை மருத்துவக் கல்லூரி - தமிழ் மன்றம்

23.10.75

அத்தனைப் பேருக்கும் மொத்தமாய் வணக்கம்

அழைப்பதில் சுகமா? அணைப்பதில் சுகமா?
        ஆராய்ந்து பார்ப்பதில் சுகமா?
உழைப்பதில் சுகமா? உண்பதில் சுகமா?
        ஊர் சுற்றி திரிவதில் சுகமா?

தருவதில் சுகமா? பெருவதில் சுகமா?
தமிழ்நாட்டை நினைப்பதை சுகமா?
வருவதில் சுகமா? போவதில் சுகமா?
வாலிபக் காதலில் சுகமா?

பிடிப்பதில் சுகமா? பிசைவதில் சுகமா?
பேசிக் கொண்டி ருப்பதில் சுகமா?
முடிப்பதன் முன்னே முகத்திலும் உதட்டிலும்
முத்தம் தருவது சுகமா?

உறவிலே சுகமா? உழைப்பிலே சுகமா?
ஓய்வுப் பெறுவதில் சுகமா?
அறிவிலே சுகமா? அழகிலே சுகமா?
அவசரப்படுவதில் சுகமா?

அக்கட்சி இக்கட்சி ஆயிரம் புதுக்கட்சி
அடிக்கடி தாவல் சுகமா?
எக்கட்சி யாயினும் அக்கட்சி தன்னில்
இருந்துகொ ண்டிருப்பது சுகமா?

கண்ணுக்கினிய காட்சிபல வற்றைக்
கண்டு களிப்பதில் சுகமா?
விண்ணுக்குரிய செவ்வாய் கிரகத்தில்
விளையாடச் செல்வதில் சுகமா?

இதில் சுகம் அதில் சுகம் எனப் பலர் கூறினும்
இப்புவியில் எதிலே சுகம்?
அதுகுறித்திங்கு பலர் பாடிட வந்துளார்
அவற்றை நாம் கேட்டு மகிழ்வோம்.

### கவிஞர் இளந்தேவன் - ஆய்வு

உறக்கம் வந்தால் மனம்ஓயும்
உணவு கிடைத்தால் பசிஓயும்
இறப்பு வந்தால் உயிர்ஓயும்
இருட்டு வந்தால் ஒளி ஓயும்
குறிப்பு நலமும் குணநலமும்
கொண்ட கவிஞர் இளந்தேவன்
உறுப்பு நலம்போல் தேவையுள்ள
ஒய்வு குறித்துப் பாடிடுவார்.

### கவிஞர் வலம்புரி ஜான் - உழைப்பு

முயற்சியே வாழ்வின் மூலதன மாகும்
உழைப்பே ஒருவனை மேன்மேல் உயர்த்தும்
உழைப்பே இன்றி உலகில் வாழ்பவன்
கரும்பில் தோன்றும் வெறும்பூப் போன்றவன்

ஊக்கம் கொடுக்கும் உழைப்பினைக் குறித்துத்
திரைப்படங் களுக்குத் தித்திக்கும் பாடல்கள்
எழுதிக்கொண் டிருக்கும் எனது நண்பர்
வலம்புரி ஜானிங்கு வந்து பாடுவார்.

### கவிஞர் வைரமுத்து - நினைவு

நினைப்பது மனம் நினைப்பவன் மனிதன்
நல்ல தலைவன் நாட்டை நினைக்கிறான்
அம்பி காபதி அழகியை நினைத்தான்
அமரா வதியும் அவனையே நினைத்தாள்
வாலிபக் கவிஞர் வைர முத்து
நமது நாட்டின் நலத்தை நினைப்பவர்
பாராட்டத் தக்க பாடல்கள் தொடுப்பவர்
அவரிப்போது அரங்கில் பாடுவார்.

### டாக்டர் பாஸ்கரன் - காட்சி

கண்ணும் பொருளும் கலப்பதே சாட்சி
காட்சிதான் உலகில் சொல்சொல்லாச் சாட்சி

காட்சியைப் பார்த்தால் கற்பனை தோன்றும்
கற்பனை தோன்றினால் கவிதைகள் பிறக்கும்
காட்சி காணாமலும் கவிதை பிறக்கும்
மகாகவி மில்டனும் மாம்பழக் கவியும்
கண்ணற்றோ ராயினும் கவிதைகள் பாடினர்

கண்கள் இருக்கையில் பெண்கள் இருக்கையில்
கற்பனை வராதா? கவிதை வராதா?
ஒருதமிழ்க் கவிஞர் டாக்டர் பாஸ்கரன்
அங்கும் இங்கும் அழகைக் காண்பவர்
தொங்கும் நிலவைத் தொடர்ந்து பார்ப்பவர்

கருத்து வளந்தரும் காட்சியைப் பற்றிநம்
மருத்துவக் கவிஞர் மன்றத்தில் பாடுவார்.

## கவிஞர் அழகரசன் - கனவு

கண்ணுடை யோரும் கனவுகள் காணலாம்
கண்ணிலா தோரும் கனவுகள் காணலாம்

அனைவரும் நனவில் பணக்காரர் ஆகலாம்
அண்ணாவைப் போல் நாம் அறிஞ ராகலாம்
கருணா நதிபோல் கனவில் நாமெலாம்
முதல்வ ராகலாம் முடிமன்ன ராகலாம்!
விழித்தபின் நாமெலாம் வெறும் ஆட்கள்தானே!

சிற்சில கனவுகள் சிதைந்து போலாம்
பற்பல கனவுகள் வாழ்வில் பலிக்கலாம்
தாழ்ந்த தமிழகம் தலைதூக்கு மென்று
பாவேந்தர் கண்ட கனவு பலித்தது
ஈரோட்டார் கனவும் இங்கே பலித்தது.

அருமைக் கவிஞர் அழகரசன் என்பவர்
நாட்டுநலன் கருதும் நண்பர் ஆதலின்
பட்டப் பகலில் பயன்படும் கனவுகள்
காண வருகிறார் கவிஇதோ தருகிறார்.

## கவிஞர் பொன்னிவளவன் - உறவு

வற்றிய பொருளை வற்றல் என்கிறோம்
சுற்றிப் படர்வதால் சுற்றம் என்கிறோம்

சொந்தமும் பந்தமும் சுற்றமும் உறவும்
இல்லாத வாழ்வெலாம் இருண்ட வாழ்வாம்

உள்ளம் கலந்தால் உறவுண் டாகும்
உறவுண் டானால் உணர்ச்சியுண் டாகும்
அவனும் கொடுப்பான் அவளும் கொடுப்பாள்
பள்ளமும் மேடும் பயன்படும் போது
காதல் அசையாது! கட்டில்தான் அசையும்.

பொன்னி என்றும் போலிப் பரத்தையும்
நெம்புகோல் கம்பனும் நித்த நித்தம்
கட்டி அணைக்கையில் கட்டில் அசைந்ததாம்

கலைஞர் அவர்களால் கவியரசு என்னும்
புதுப்பட்டம் பெற்ற புலவர் பொன்னி
இப்பொருள் குறித்து இப்போது பாடுவார்.

### டாக்டர் இளங்கம்பன் டி.லிட் - திரையுலகம்

இளங்கம்பன் என்பவர் எங்களூர்க் காரர்
செய்யுள் விவாதம் செய்யும்நக் கீரர்
அம்பிகா பதியின் அப்ப னாகிய
கம்பனோ வைணவக் கவிஞன். இப்போ
திங்கமர்ந் திருக்கும் இவ்விளங் கம்பனோ
சத்துசித் தானந்த சைவக் கவிஞன்

தொடையேறு செந்தமிழ் பாடியே
தொழுதுங் கெடாதவர் வாழ்தலைக்
கடையேறி யிங்கிர வாமலே
கழலார்ந்த சிற்றடி நல்குவாய்
மடையேறி நந்தின மூர்ந்திடும்
வயல்சூழ் திருத்தணி காசலா
விடையேறி யின்புறு பாலனே
வேலா யுதா!வே லாயுதா!

எனப்பாடித் துதிக்கும் இளங்கம்பன் அவர்களின்
சொந்தப் பெயரோ சொக்க லிங்கம்

இந்நாட்டுக் கவிஞருள் இவரொரு டாக்டர்
இலக்கிய வயலுக் கேற்றதோர் ட்ராக்டர்
தேன்கவி பாடும் திருநீற்றுச் சோழன்
புலவர்கள் போற்றும் புகழ்த்துணை நாயனார்

யாமறிந்த மந்திரங்கள் தந்திரங்கள் மிகவுமுண்
டியாவரோடும் பொழிவதல்ல யானைநாக மாகிடும்
பூமணத்த குழல்பினார்கள் புருடராக மேவுவார்
பொன்னதாம் இரும்பனெப்பல் புலவர்முன் னுரைக்கலாம்
காமனுக்கொ ராயிரங்கண் என்றுவாது வெல்லலாம்
கந்தனாணை இந்தவேளை கையிலுள்ள பொருளெல்லாம்
தாமதப்ப டாதுகொண்டு வந்தென்முன்பு குவியடா
தமிழ்முழங்கு சென்னையூர் தழைக்க வந்த சித்தனே!

என்று பாடி நின்று துதித்த
தமிழ்வண்ணச் சரபமாம் தண்ட பாணி
அடிகளைப் போன்றிவர் அற்புத மாக
வண்ணப் பாக்கள் பாடிட வல்லவர்

விருத்தப் பாக்களை விரைந்துநான் பாடுவேன்
வெண்பா கலிப்பா விரைந்திவர் பாடுவார்
உதட்டுக் கவிதையால் அதட்டும் கவிஞன்நான்
தமிழ்மொழிப் பகைவரைச் சாடும் கவியிவர்

தண்ணீரில் குளித்துநான் தைலம் பூசுவேன்
வெந்நீரில் குளித்துவர் விபூதி பூசுவார்
நகைச்சுவை யோடு நன்கிவர் பேசுவார்

மக்களை மயக்கும் மாரீச மானெனும்
திரைப்பட உலகின் சீர்கேட்டை விளக்கிப்
பாடுதற் கிங்கே பழையசொக் கலிங்கம்
எனுமிளங் கம்பன் இப்போது வருகிறார்

வண்ணச் சரபமே வாரும்! பழனியில்
வாழும் கவிஞரே அரங்கத்தில் ஏறும்!

கூவாத குயில்களாய்க் கூண்டுக் கிளிகளாய்
விடிந்த கோடையில் வெடித்த வயல்களாய்
இந்நாட்டுப் பெண்கள் இருந்திட லாகுமா?
ஆண்கள் விடுதலை அடைந்தால் போறுமா?
பெண்கள் புலம்புதல் ஞாயமா?
பாதி விடுதலை பயன்தரக் கூடுமா?
வான்தடுக் கின்றதா மழையையும் காற்றையும்
ஏன்தடுக் கின்றீர் இவர்கள் உரிமையை
என்று பாடினான் எட்டய புரத்தில்
பிறந்து வளர்ந்த பெருங்கவி பாரதி!

வேண்டும் பெண்ணுரிமை விடுதலை என்று
தகுதி மிக்க தொரு தலைப்பில் பாடிட
இதோ வருகிறார் இளங்கவி வருக!

***கவிஞர் அப்துல் ரகுமான்! - குளம்***

இந்நாட்டில் உள்ள எருமை மாட்டின்
குளம்பின் அமைப்பைக் குறிக்கும்நீர் நிலையைக்
குளமென்று மொழிநூற் புலவர் குறித்தனர்

களத்திலே, செந்நெற் கட்டுகள் காணலாம்
குளத்திலே தாமரைக் கொப்புளம் காணலாம்

வற்றாத நீரைப் பெற்ற குளத்தில்
குதிக்கும் மீன்கள் குடும்பம் நடத்தும்
கொக்கும் நாரையும் கூடிக் குலவும்
தூங்காவாய்த் தவளைகள் சத்தம் போடும்
வெட்டிய குளத்தில் அட்டைகள் மேயும்.

கிள்ளிக் கொடுக்காத கீர்த்திமான், அள்ளி
அள்ளிக் கொடுத்த அதியமான்! முஜிபிர்
ரகுமான் வங்கத்து ராஜமான்! கவிஞர்
அப்துல் ரகுமான்! அவர்களோ கல்விமான்
பாடலில் இருபொருள் படுக்க வைப்பவர்
வற்றாத குளத்தைப் பற்றி இப்போது
பலரும் மெச்சிடப் பாடுவார் இங்கே!

### முரசொலி முத்துலிங்கம் - கடல்

உயிரோடு உடன்று வருவதால் உடலாம்!
கரிக்கும் தன்மை கொண்டதால் கடலாம்

கரையொடு பிறவாக் கருங்கடல், மூத்த
நரையொடு பிறந்த நதிபதி யாகும்!
குன்றுநீர் சேர்வதால் முந்நீர் என்றும்
ஆழம் உடையதால் ஆழி என்றும்
பரந்து கிடப்பதால் பரவை என்றும்
பெயர்பெற்று விளங்கும் பெரிய கடலும்
அந்தக் காலத்து அரசனும் ஒன்றுதான்.

அந்தக் காலத்து அரசன் பற்பல
மாதரைத்தழுவி மகிழ்ந்தாற் போல
வளைந்தும் நெளிந்தும் வருகின்ற பற்பல
நதிகளைப் புணரும் தண்ணீர் நாயகன்
சல்லாப முத்தம் சத்தம் கொடுக்கும்
முதிர்கடல் வலம்புரி முத்தம் கொடுக்கும்

சுற்றிக் கொண்டே கனைத்துக் கொண்டே
ஆடிக் கொண்டே அசைந்து கொண்டே
துடித்துக் கொண்டே தும்மிக் கொண்டே
இருக்கும் கடலின் இயல்பினைக் குறித்து
முரசொலிக் கவிஞராம் முத்து லிங்கம்
அரசியல் கிளர்ச்சி அடங்காத சென்னைப்
பட்டினத்தி லிருந்து பாடவந் திருக்கிறார்
கிழக்கே படுத்துக் கிடக்கும் கிழக்கடல்
குறித்தும் மற்ற குளிர்ந்தகடல் குறித்தும்
இக்கவி இப்போது பாடுவார் இங்கே!

### இஃபால் எம்.ஏ., - மழை

அண்டத்தில் பறவையும் பிண்டத்தில் மனிதனும்
வித்தில் மரங்களும் வியர்வையில் புழுக்களும்
பிறக்கும் மேகமோ கடலில் பிறக்கும்

உப்புநீர்க் கடலில் உருவாகும் மேகம்
துப்பும் எச்சிலே தூயவெண் மழையாம்!
வீணையின் நரம்புபோல் வீழும் மழைநீர்
தாவரங் கட்கெலாம் தாய்ப்பா லாகும்
வான்மழை உலகினை வாழ வைப்பதால்
அம்மழை உயிர்க்கெல்லாம் அமுதம் போன்றதாகும்.

மாந்தர் பருகுமுன் வானம் பாடி
என்னும் பறவைதான் இதனைப் பருகும்
பருகிய பின்னர்ப் பாட்டும் பாடும்

வானம் பாடிபோல் வான்மழை குறித்து,
எம்.ஏ படித்த இக்பால் என்பவர்
பாடப் போகிறார். பருவமழையில்
நனைந்தால் சுரம்வரும் நற்றமிழ்ப் பாட்டு

மழையில் நனைந்தால் மகிழ்ச்சிதான் ஏற்படும்
என்பதால், தமிழ்நாட்டு இக்பால் அவர்களைச்
சந்தம் கொடுக்கும் தமிழில் பாடிட
அந்தி நேரத்தில் அழைக்கிறேன் இங்கே!

*புலமைபித்தன் - ஆறு*

எண்ணிக் கணக்கிடக் கூடிய எண்களில்
நான்கும் ஐந்தும் நடந்த பின்னர்
ஆறு வருவதை அறிவோம். அந்த
ஆறுநீர் தருமா? அதுநீர் தராது!
பள்ளத்தில் தண்ணீர்ப் பாயை விரிக்கும்
ஆறுதான் நீர்தரும் அதுதான் உதவும்

ஊரும், அந்த ஊரிலோர் ஆறும்
இருந்தால் நெற்பயிர் ஏங்கா திருக்கும்
உழவர் கலப்பையும் உறங்கா திருக்கும்

ஒன்றிருந் தாலும் அந்த ஆற்றிலே
பழுத்த பயன்தரும் நீர்வர வேண்டும்
நீரில்லா ஆறு நிச்சயம் மலடிதான்!

ஆயிரம் நிலவே அருகில்வா என்னும்
தீந்தமிழ்ப் பாடலைத் தீட்டிக் காட்டிய
புதுமைக் கவிஞராம் புலமைப் பித்தன்
ஓடும் ஆற்றினைப் பாட வந்துள்ளார்
பாட வந்தவற் பாடட்டும் இங்கே!

*கவிஞர் குணசேகரனார் -எம்.ஏ.,- தாலி*

நின்று தளராமல் நிமிர்ந்து வளரும்
பனைமரத் திற்குப் பலபெயர் உண்டு

மரங்கொல் தச்சரும் மருத்துவ நிபுணரும்
தடித்த பனையைத் தாலமென் றழைத்தனர்

புலவர்கள் அதனைப் புற்பதி என்றனர்
பெண்கனவு காணும் பெருங்கவி வாணரோ
பெண்ணை என்றே பெயரிட லாயினர்

வடபெண்ணை என்றும் தென்பெண்ணை என்றும்
பேராறு கட்குப் பெயர்வரக் காரணம்
ஆற்றங் கரையின் அருகிலப் பெண்ணை
என்னும் பனைகள் இருப்பதால் என்க!
ஆயினும் விதிவிலக் களித்தோம்! அதனால்
அருணகிரி நாதர்கள் ஆங்காங்கே தோன்றிக்
கருவாசல் நாடகக் கணவர்க ளாயினர்

பற்றிப் படரும் பைந்தமிழ்க் கவிஞரைச்
சுற்றி அமைந்துள தோழர்கள் கேளீர்

பணைஞ்சே கரிப்பவன் கள்ளப் பணத்தைப்
பதுக்குவான் எச்சில் இரவுக்கு ஒதுக்குவான்
குணஞ்சே கரிப்பவன் குற்றங் குறைகளே
வாரா வண்ணம் வாழ்ந்து காட்டுவான்
அன்பர்குண சேகரன் அப்படிப் பட்டவர்.
சந்தத் திருப்புகழ் தந்தோன் பிறந்த
திருவண்ணா மலையில் சிறப்புற்ற விளங்கிடும்
கருணார அரசியல் கலைக்கல் லூரியில்
நேராய் நிரையாய் நின்று தமிழ்த்துணை
பேரா சிரியராய் பெருங்கவி வாணராய்த்
திகழும் மு. குணசேகரன் அவர்கள்

பழகுசெந் தமிழிலே பாடப் போவது
வீங்குபுகழ் பெற்ற வெளிநா டாகிய

இத்தாலி பற்றியா? இல்லை. இங்கவர்
இத்தாலி பற்றிய எடுப்பான குரலில்
பாடப் போகிறார் செய்யுள்
மேடையில் இருப்பவர் விளக்கம் தரட்டுமே!

*புலவர் பி. கோ. கோவிந்தராசன் - மஞ்சள்*

அவள்: மாறா மதுரை போகையிலே மச்சான்
மாவுல பழுத்தபழம் வாங்கி வாங்க - நீங்க
வாங்கி வாங்க.
அவன்: மாவுல பழுத்தபழம் என்னடி குட்டி - அது
என்னடி குட்டி - அதைச்
சொல்லடி குட்டி
அவள்: மாவுல பழுத்தபழம் பணியாரம் - மச்சான்
பணியாரம் அது பணியாரம்
அவள்: ஊத்துக் கேணிக்குப் போகையிலே மச்சான்
உள்ளே சொருகறது வாங்கி வாங்க நீங்க
வாங்கி வாங்க
அவன்: உள்ளே சொருகறது என்னடி குட்டி
அது என்னடி குட்டி - அதைச்
சொல்லடி குட்டி
அவள்: உள்ளே சொருவுற கொண்டஊசி மச்சான்
கொண்ட ஊசி அது
கொண்ட ஊசி

முல்லை இல்லாத கொல்லையைப் போலே
பிள்ளையில் லாத பிள்ளைப் பாண்டியன்
குழிக்கிழங் கல்லவா குழந்தை என்கிறான்
மஞ்சளும் பூமி மகளின் குழந்தைதான்!

மங்கலப் பொருள்களுள் மஞ்சளும் ஓர்பொருள்
கருணைக் கிழங்கைக் கடைதேடி வாங்கி

பூனைக்கண் போன்று பொரியல் செய்யலாம்
சதைபோட்ட மஞ்சளைச் சமைத்துண்ண முடியுமா?

மாடு நிறங்கொண்ட மங்கல மஞ்சள்
ஆறாத காயத்தை ஆற்றுவ தோடு
தொத்து நோயையும் துரத்தி அடிக்கும்!

அவள்: உரிச்சிகிட்டு தேய்க்கிறது
வாங்கி வாங்க மச்சான் நீங்க
வாங்கி வாங்க

அவன்: உரிக்குக் கிட்டு தேய்க்கிறது என்ன குட்டி அது
என்னடி குட்டி அதைச்
சொல்லடி குட்டி

அவள்:உரிச்சி கிட்டுத் தேய்க்கிறது
மஞ்சள் அத்தான்
மஞ்சள் அத்தான்

என்கிறான் குப்பன் என்பான் மனைவி
அதற்கவன் கணவனோடு அரசியல் தலைவர்போல்
ஆகட்டும் பார்க்கலாம் அஞ்சுகம் என்கிறான்

பூசுதற் கஞ்சலை கேட்ட பொருளோ
மண்ணுக்குள் தூங்கும் மங்கல மஞ்சள்.

### கவிஞர் கு.வே. பாலசுப்பிரமணியம் - திருவிளக்கு

படுத்தெழுந் திருக்கும் பழைய சூரியன்
எண்ணெய் ஊற்றாமலே எரிவதைப் பார்க்கிறோம்

வீட்டிலன் றாடம் ஏற்றும் விளக்கோ
எண்ணெயும் திரியும் இல்லா விடிலோ
அற்ற குளத்தின் அறநீர்ப் பறவைபோல்
விளக்கின் விளம்பர வெளிச்சம் அணைந்திடும்

விளக்கத்திற்கு இருட்டை ஒழிப்பதே வேலை
அதனடி நிழலே அதுகட்டும் சேலை
பருவத்தை எட்டிப் பார்க்கின்ற இளமையும்
பழங்களை எட்டிப் பார்க்கிற விழிகளும்
பொன்னிற மேனியும் பூநிறச் சிரிப்பும்
மின்னும் முகத்தில் மீன்முக வரியும்
அமையப் பெற்ற அழகிதன் இடுப்பில்
கட்டும் சேலையைத் தளர்த்திக் கட்டினால்
அச்சேலை அவிழ்ந்தவள் அடிகளின் கீழே
நிச்சயம் கிடக்கின்ற நிலைதான் ஏற்படும்
என்பதற்கு விளக்குநிழல் எடுத்துக் காட்டு!

எல்லா விளக்கும் விளக்கல்ல என்கிறார்
வான்புகழ் பெற்ற வள்ளுவர். அதுபோல்
தெருவிளக்கதனைத் திருமண மேடையின்
திருவிளக் கெனநாம் சிறப்பிப்ப தில்லை!
ஆதியில் தோன்றிய அகல்விளக் கெல்லாம்
ஒழுங்கான தரையில் உட்காரும் விளக்குகள்
குமரிகள் ஏந்தும் குத்து விளக்குகள்
நிலத்தின் மீது நிற்கும் விளக்குகள்
பல்வு விளக்கெலாம் படுக்கும் விளக்குகள்

கம்பரா மாயணக் கவிதையில் களித்தும்
ஆங்கில மொழியின் ஆழத்தை அறிந்தும்
காந்திய வாதக் கருத்தில் ஊறியும்
பட்டிமண் டபத்தின் பகுதிகளாய் விளங்கும்
தோழர் பால சுப்பி மணியன்
இப்போது பாடுவார்! இதுபற்றி இங்கே!

### செய வேங்கடன் - வளையல்

நினைத்துப் பார்க்கிறேன் நினைத்துப் பார்க்கிறேன்
வளைவாய் இருப்பதால் வளையல் என்றும்
அடிக்கடி கரங்களில் சரிவதால் அதற்குச்
சரிஎன்னும் புதுப்பெயர் தந்திட்ட புலவனை
நினைத்துப் பார்க்கிறேன் நினைத்துப் பார்க்கிறேன்

வஞ்சியர் அணியும் வளையல் பற்றிச்
சித்திர வளையற் சிந்துநூல் பாடிய
பெரும்புலவர் சோம சுந்தரம் பிள்ளையை
நினைத்துப் பார்க்கிறேன் நினைத்துப் பார்க்கிறேன்.

மாதே என்றான் மங்கை அது கேட்டு
வான்மலை இமயத்து வடநாட்டு மக்கள்
வாசனைக் காகவும் யோசனைக் காகவும்
இன்னும் நம்மையே எரிர்பார்க்கின்றனர்
என்று கூறினான்! ஆம் ஆம் என்றான்.

மங்கையும் அவளும் மணப்பொரு ளாகிய
சந்தனம் பற்றிச் சற்றுமுன் பாடினர்
வஞ்சியர் அணியும் வளையல்பற்றி
இப்போது பாடுவார் இதுகுறித் திங்கே!

### கவிஞர் டாக்டர் கே.எம்.ஏ. வகாப் - தூய்மை

பாரிஸ்டர் அட்லா படித்த தோடே
எட்டு மொழிகளில் கெட்டிக் காரராய்
நாடகா சிரியராய் நாவலா சிரியராய்ச்
சென்றநூற் றாண்டிற் சிறந்து விளங்கிய
இராம சாமி ராஜெனும் மேதையும்
இல்லறங் கண்டபின் துறவறங் கொண்ட

நல்லரா மாநுஜ நாவல ரவர்களும்
பிறந்து வளர்ந்த பேரூ ராகிய
திண்டி வனத்திலே தினந்தோறும் கவிதைக்
கண்டுமுதல் செய்யும் கவிஞர் வகாப்பொரு
டாக்டர் எனினும் டாம்பீக மான
ஆக்டர் ஆகலாம் அழகாய் இருப்பதால்
மாடி வீட்டினில் வாழும் வகாப்போ
உள்ளத்தில் பட்டதை ஊருக்குச் சொல்லும்
நல்ல கவிஞர்! நட்புக் கினியவர்.

திறந்த மலரில் செந்தேன் இருத்தல்போல்
இவரது கவிதையில் புதுமைகள் இருக்கும்
பழமையை இவரது பாடல்கள் நொறுக்கும்

*புலவர் பனப்பாக்கம் கு. சீத்தா* - சேய்மை

மகேசனைத் துதித்த மாணிக்க வாசகர்
பழமொழிகள் வைத்துப் பாடுவதில் வல்லவர்
என்று சொல்லுவர், இங்கமர்ந் திருக்கும்
புலவர் சீத்தா புதுப்புதுச் சொற்களை
எழுதும் கவிதையில் இணைப்பதில் வல்லவர்.

எப்பொருள் பற்றியும் எழுதும் திறமை
இன்றுள்ள கவிஞர் எவருக்கு மில்லை
ஆயினும், இவரிடம் அத்திறமை உள்ளது

இவரும் நானும் எதுகை மோனைபோல்
இதுநாள் வரையிலும் இருந்து வருகிறோம்
இனியும் இருப்போம் என்று கூறி
அன்பே டிவைவரைநான் அழைக்கிறேன் பாடவே.

### *பாவலர் பழமலை க.மு. - வாய்மை*

நூற்கள் திறந்து நுணுக்கமாய்க் கற்றுப்
பாடல்கள் இயற்றும் பழந்தலை முறையின்
கல்வியை மதிக்கும் கவிஞன்யான் என்றன்
பக்கத்தில் அமர்ந்துள பழமலை அவர்களும்
அப்படிப் பட்டவர் என்பதை அறிக

பாவாணர் போக்கையும் பாவேந்தர் நோக்கையும்
ஏற்றுக் கொண்டோர் படைக்கும் இலக்கியம்
தன்மானத் தோடு தலைதூக்கி நிற்கும்!

சல்லிவேர்க் கவிதைகள் சாயுமென் றறிந்தே
ஆணிவேர்க் கவிதைகள் அமைக்கும் எழில்மணி
அவர்களை அழைக்கிறேன் அரங்கில் பாடவே!

### செல்வி ப. மீனலோசனி எம்.ஏ. - தாய்மை

தனிமை என்பது பிரிவின் சரித்திரம்
தாய்மை என்பது கருவின் சரித்திரம்
தாய்மையைப் பற்றி தையல் பாடுவதே
முற்றிலும் பொருத்த முடைய தாகும்

கடலூரில் உள்ள மகளிர்கல் லூரியில்
பணிபுரியும் செல்வி ப. மீன லோசனி
எம்.ஏ படித்தவர். இலக்கணம் கற்றவர்
பாடல் எழுதும் பயிற்சியும் உடையவர்
அவரைநான் அழைக்கிறேன் பாடல் பாடவே!

## சுப்பிரமணியம் எம்.ஏ. பி.டி - சந்தனம்

அன்பே வாவென் றழைத்தான் மனைவியை
அன்னம்போல் நடந்தே அருகினில் வந்தாள்

கொட்டையைத் தராமல் கோதை யிடத்திலோர்
கட்டையைக் கொடுத்தான் கைநீட்டி வாங்கினாள்
தேயென்று சொன்னான். தேய்த்தாள் தேய்த்தபின்
வையென்று சொன்னான். வஞ்சியதை வைத்தாள்

முன்னடி இட்டும் பின்னடி வைத்தும்
கண்ணம்பு பாய்ச்சும் காதலி இதைக்கேள்

தேய்க்கச் சொன்னேன் நீயதைத் தேய்த்தாய்
வைக்கச் சொன்னேன் நீயதை வைத்தாய்
அல்லவா என்றான் ஆமாம் என்றாள்.

தேய்க்கப் படுவதால் தேய்வை என்று
சந்தனக் கட்டையைச் சான்றோர் கூறினர்
பூவையே இதனைப் புரிந்துகொள் என்றான்
மணாளன் மீண்டும் மங்கையை நோக்கி
நீமட்டும் தேய்த்தது ஞாயமா? நிலவில்
நீயும் நானும் நின்றுதேய்ப் போமா?
என்று கேட்டான் எச்சில் கணவன்!

நேருக்கு நேரே நீங்கள் நின்று
பாருங்கள் போதும் பரீட்சை வேண்டாம்
என்று நகர்ந்தாள் ஏந்திழை! நகராக்
குன்றுநிகர் தோழனும் கூடவே நகர்ந்தான்.

தென்னாட்டில் பிறக்கும் சிறந்த சந்தனக்
கட்டையைத் தேய்ப்பதற் குரிய கற்கள்

வடநாட்டி லிருந்து வந்த தாகச்
சங்க இலக்கியம் சாற்றுவ துனைக்குத்
தெரியுமா என்றான்? தெரிய தெனக்குச்
சிரிக்கத் தெரியும் என்றவள் சிரித்தாள்

நறுமணம் தெற்கே! நாற்றம் வடக்கே
இன்றும் அன்றும் இடம்பெயர வில்லை
மாதே என்று மங்கையைத் தழுவினான்

சந்தனம் என்னும் தலைப்பில் பாடிட
இங்குவந் திருக்கும் தோழரோர் எம்.ஏ
தோழரின் பெயரோ சுப்பிர மணியம்!

அரசியல் உலாவரும் அச்சுப்பி ரமணியம்
குப்புற வீழ்ந்த சுப்பிர மணியம்
இச்சுப்பி மண்யமோ இந்நாள் வரையிலும்
குப்புற விழாத சுப்பிர மணியம்!

மெல்லிய அரும்பொன்று மெதுவாய் மலர்ந்து
பூத்தநிலை காட்டும் பூவைப் போன்று
முயன்று முயன்று முத்தமிழ் கற்று
முதுகலைஞர் என்னும் முடிசூட்டப் பெற்றவர்
நல்ல நடிகர். நாடக சிரியர்
இயக்குநர்; செந்தமிழ் இலக்கியக் கவிஞர்!
புகழ்பெற்ற நபிகள் நாயகம் போன்று
கூச்சமும் அடக்கமும் கொண்ட தோழர்

இரண்டுக்கு மேலே எப்போதும் வேண்டாம்
என்னும் கருத்தை ஏற்றுக் கொண்டவர்
அளவான குடும்பம் அமைத்து வாழ்பவர்.
இந்தக் கவிஞர்தம் இனிய கவிதையாம்
சந்தனக் குழம்பு தருவார் இங்கே!

*அன்பரசு. பி.எஸ்சி - கற்கண்டு*

கற்கண்டு பற்றிக் கவிபாட விருக்கும்
அன்பர சென்பவர் ஆங்கிலம் கற்றுப்
பட்டம் பெற்றவர் பழகுதற் கினியவர்

முத்தமிழ்க் கவிஞரோ முத்துகா பட்டியில்
பிறந்தவர் மேடையில் பேச வல்லவர்
நாடகம் எழுதவும் நடிக்கவும் தெரிந்தவர்

இங்கமர்ந் திருக்கும் இந்தக் கவிஞர்
எண்ணற்ற கவிதைகள் எழுதியுள் வாராம்

வார இதழிலோ மாத இதழிலோ
இதுவரை என்கவி இடம்பெற வில்லையே
எழுதி எழுதி என்செய்வ தென்று
வருத்தப் படுகிறார் வாலிபக் கவிஞர்

இருநா டகங்கள் இவரது பெட்டியில்
தூங்குவ தாகவும் தோழர் சொல்கிறார்
கல்லால் அடிப்பினும் காகம் பறந்திடும்
கற்கண்டால் அடிப்பினும் காகம் பறந்திடும்

சொற்கொண் டடிக்கும் தோழரை அழைக்கிறேன்
கற்கண்டு பற்றிய கவிபாட இங்கே!

*மணமேடு குருநாதன் - குங்குமம்*

மண்ணல் லாததே மணலாம்; அம்மணற்
பரப்பே நெய்தல் நிலத்திற்குப் பாயாம்!

வண்டு படுக்காத வரிமணல் மெத்தையில்
நண்டு படுக்கும் நாமும் படுக்கலாம்
மணல்மேடு தன்னில் அமர்ந்தும் மகிழலாம்

மண்மீ தமைக்கும் மணல்மேடும் சரியும்
பருவ மங்கையர் பால்மேடும் சரியும்
விசிறி மட்டையில் விளங்கும் மேடுபோல்
முசிறி வட்டத்தில் மொய்த்தமணல் மேடெனும்
சிற்றூரில் உள்ள சிவானந்த நடுநிலைப்
பள்ளி தன்னில் பணியாற்றும் கவிஞராம்
குருநாதன் என்பவர் குறள்நாதக் கவிஞர்

வளமைநிறை இளமைநல
மளவுமிக விளைவுதர
உளமுழுது மிளகஉயிர்
குளிரஅறி வொளிதடவு தமிழே!

புதியகனி முதியசுவை
மதுவினிய புதுமலரின்
அதிகமனம் வதியுமுயிர்
விதிபெருகு முதலுடைய மொழியே!

என்று மிகமிக இனிமையாய்ப் புதுமையாய்
வண்ணச் சிந்துகள் பாட வல்லவர்

பட்டிமன் றத்தில் பசையொடு பேசவும்
கொட்டிடும் செந்தேன் கொடுக்குக் கேள்விகள்
கேட்கவும் வல்ல கீர்த்திக் கவிஞர்
மங்கல மான மங்கையர் நெற்றியில்
சங்கம மாகும் குங்குமம் குறித்து
மூவர் பாடிய முத்தமிழ் முறையில்
பாவலர் குருநாதன் பாடுவார் இங்கே!

*ப.வெங்கடகிருட்டிணன் எம்.ஏ. பி.டி - விளக்கு*

விளக்கிற்கு இருளை விரட்டுவதே வேலை
அதனடி நிழலே அதுகட்டும் சேலை
கன்னி ஒருத்தி கட்டும் சேலை
நழுவினால் அப்போது நாணுவாள்! கோணுவாள்!
நெருப்பு விளக்கின் நிழற்சேலை அவிழ்ந்தால்
நாணுவது மில்லை! கோணுவது மில்லை!

எண்ணெயைக் குடிக்கும் வண்ண விளக்கின்
வரலாற்றைக் கவிதையால் வடிக்க வந்துள
வெண்ணிலாக் கவிஞர் வேங்க கிருட்டிணன்
தாயுமானாரின் தந்தையைப் போலவும்
பூண்டி அரங்க நாதரைப் போலவும்
கணக்கில் வல்லவர்! காலத்துக் கேற்ற
கவிதை எழுதவும் கட்டுரை தீட்டவும்
சோரமில் லாமல் சொற்பொழி வாற்றவும்
வல்லவர் கீழப் பாவூரில் வளர்ந்தவர்

பழத்தைக் கீறி எடுத்த பலாச்சுளை
எப்படி இனிக்குமோ அப்படி இனித்திடும்
கவிதைகள் வடிக்கும் கணக்கியல் நிபுணர்
பளிச்சென்று விளங்கக் கூடிய பாடலால்
விளக்கேற்ற வருகிறார் வெள்ளைப் பகலிலே!

*புலவர் மோகனூர் பெரியசாமி - கனி*

பாடுதற் கரிய யமகப் பாடலை
வியப்புறப் பாடிய வித்தகர் ஒருவர்
செந்தமிழ் வளர்த்த சேதுபதி மன்னரின்
அவையில் இருந்தார் அந்த நாளில்
அன்னவர் பெயரோ பொன்னுச் சாமியாம்!

பழகுதமிழ் மதுரையில் பாஸ்கர தாசெனும்
ஓங்குபுகழ்க் கவிஞர் ஒருவர் இருந்தார்
அன்னவர் இயற்பெயர் என்ன தெரியுமா?
வெள்ளைச் சாமியாம்! வின்ஸ்டன் சர்ச்சிலும்
மேனாட்டில் வாழ்ந்த வெள்ளைச் சாமிதான்.
நெற்றிக்கண் சிவனோ நெருப்பு சாமியாம்
கண்ண பிரானோ கறுப்பு சாமியாம்
துரோகி ஒருவனால் சுடப்பட் டிறந்த
காங்கோ அதிபரும் கறுப்பு சாமிதான்
காம ராசரும் கறுப்பு சாமிதான்!

உழுது பயிரிடும் உழவர்கள் எல்லாம்
வகுத்த வயலின் வரப்பு சாமிகள்
தொழுதுண்டு வாழும் தொழும்பர்கள் எல்லாம்
கூம்பும் தாமரைச் சோம்பல் சுவாமிகள்

பெயர்பெற்ற மோகனூர் பெரிய சாமியோ
தமிழை வளர்க்கும் தங்க சாமியாம்
வள்ளுவர் குறளையும் வள்ளலார் நூலையும்
உச்சிமேல் வைத்து மெச்சும் சாமியாம்!
பிறரை மதிக்கும் பெரியசாமியோ
சிறுமீன் கதைகளும் திமிங்கில நாவலும்
நாட்டைத் திருத்தும் நாட கங்களும்
வரவேற்கத் தக்க வரலாற்று நூற்களும்
ஏராள மாக எழுதி இருப்பவர்

கல்வெட் டெழுத்தைக் கண்டு பிடிக்கவும்
தொல்பொருள் பற்றிச் சோதனை செய்யவும்
இவருக்குத் தெரியும்! இந்நாட்டி லுள்ள
அரசியல் வாதிகள் அத்தனை பேருமே
எண்ணெய்க் குடத்தைச் சுற்றும் எறும்புகள்
என்ற உண்மையும் இவருக்குப் புரியும்!

பெரிய ஆசாமியாம் பெரிய சாமி
இங்கமர்ந் திருக்கும் எலலோ ருக்கும்
காய்தரக் கூடா தென்று கருதிக்
கற்கண்டுப் பாட்டுக் கனிதர வருகிறார்
இருட்டுப் புராணத்தை எதிர்ப்பவர் இங்கு
வரட்டுமே! செய்யுள் மாங்கனி தரட்டுமே!

## *புலவர் அரங்க வீரன் - கட்டில்*

முத்தம் கொடுப்பதே முதலுதவி என்று
கூச்சப் படாமல் கூறிய மன்னனாம்
அதிவீர ராமன் அதிகம் படித்தவன்
நைடத நூலை நாட்டுக்குத் தந்தவன்
மன்மத லீலையில் மயங்கிக் கிடந்த
அன்னவன் சிறந்த அரங்க வீரன்!

இங்கமர்ந் திருக்கும் ஏழைப் புலவராம்
அரங்கவீரனோ அதிவீர ராமன்
வழங்கிய நூற்களை மட்டுமே மதிப்பவர்
அன்னவன் செயலை அடியோடு வெறுப்பவர்
மலருதவி பெற்று மாலைஉரு வாதல்போல்
பலருதவி பெற்றும் பயின்ற புலவர்.
தொகைதொகையாக நூற்களைத் தொகுத்தும்
தொகுத்த நூற்களைச் சோன்வின்றி படித்தும்
வந்த மீனாட்சி சுந்தரம் பிள்ளைபோல்
அரங்க வீரன் அவர்களும் அடிக்கடி
சிறந்த நூற்களைத் தேடித் தொகுப்பவர்
தொகுத்த நூற்களைத் தொடர்ந்து படிப்பவர்
தட்டுப்பா டுடைய தமிழ்ப்புலவ ராயினும்
கட்டுப்பா டுடைய கவிஞர் இவரைநான்
சுட்டி அழைக்கிறேன் நான்குகால்
கட்டிலைப் பற்றிய கவிதை பாடவே!

## நாமக்கல் வெ. கோபாலன் - தொட்டில்

காதலன் என்பவன் காவற் கைதி
கணவன் என்பவன் ஆயுட் கைதி
கவிஞன் என்பவன் கற்பனைக் கைதி
புலவன் என்பவன் புத்தகக் கைதி

கல்வியிற் சிறந்த கம்பனும் அவனை
ஓயாமல் எதிர்த்த ஒட்டக் கூத்தனும்
புகழேந்திப் புலவனும் புத்தகக் கைதிகள்
கழகத் தோழராம் கவிஞர்கோ பாலனோ
அற்புத மான கற்பனைக் கைதி!
ராயர்கல் என்பது ராமக்கல் ஆகி
ராமக்கல் பின்னர் நாமக்கல் ஆனதாம்
நாமக்கல் என்னுமிந் நகரை அடுத்துள
சிற்றூரில் பிறந்தயிச் செந்தமிழ்க் கவிஞரோ
கண்ணை இழந்தவோர் பெண்ணை மணந்தவர்
தாய்மொழி காத்திடத் தனல்மீதும் நிற்கத்
தயங்காத கவிஞர். தன்மானக் கவிஞர்

கல்லைத்தான் மண்ணைத்தான்
காய்ச்சித்தான் குடிக்கத்தான் கற்பித்தானோ?
இல்லைத்தான் எனக்குத்தான்
பொன்னைத்தான் கொடுத்துத்தான் இரட்சித் தானோ.
என்று பாடிய இராமச் சந்திர
கவிராயர் போன்று வறுமையிற் கலங்கி
வாடாத கவிஞர் மதுவெனும் தண்ணீர்
போடாத கவிஞர் போலி விளம்பரம்
தேடாத கவிஞர் சிறந்தபண் பாளர்

திரைகடல் ஓடியும் திரவியம் தேடென
ஔவையார் சொன்னார் அல்லவா? அதுபோல்
செல்வம் திரட்டச் சிங்கப்பூர் சென்றவர்
வாட்டி வதைக்கும் வறுமையை வென்றவர்

பெரியார் தம்மையும் பேரறிஞர் தம்மையும்
கனவிலும் மதிக்கும் கவிஞர்கோ பாலன்
பட்டினப் பாலைபோல் பயன்தரும்
தொட்டில் கவிதையைத் தொடங்குவோம் இங்கே!

## பெ.ந. பழனிச்சாமி – தாம்பூலம்

பட்ட தாரியாம் பழனிச் சாமி
பெரிய பட்டியில் பிறந்த கவிஞர்
செந்தமிழ்ச் சிலம்பொலி செல்லப்ப னாரின்
மாணவர் தங்க மானவர் திருமண
மானவர் விதைபோல் அடக்க மானவர்
சிறந்த கவிஞர் சிறந்தபேச் சாளர்
பேச்சுப் போட்டியில் பரிசும் பெற்றவர்

விதைத்துப் பயிரிட்டு வேளாண்மை செய்யும்
இவரது தந்தை! இந்தக் கவிஞரோ
எழுத்துப் பயிரிட்டுக் கொண்டே இருப்பவர்
தேரோட்டம் நடத்துவோர் சிறைசெல்வ தில்லை
நாட்டுக் காகவும் நல்வாழ்வுக் காகவும்
போராட்டம் நடத்துவோர் சிறைக்குப் போவார்

பாரதி யாரோ பாரதி தாசனோ
நானோ எனது நண்பர்களோ யரசனோ
சிறைச்சா லைக்குச் சென்றதே இல்லை
ஒப்பற்ற துறவியாம் அப்ப ரடிகளும்
பாடி அலுத்த படிக்காசுப் புலவரும்
சிறைச்சா லைக்குச் சென்ற துண்டு

பாவல ராகிய பழனிச் சாமியும்
ஆசிரியர் நல்வாழ்வு அடைதல் வேண்டிப்
போராட்டம் நடத்திச் சிறைக்குப் போனவர்.

சிறைசென்று வந்த சிங்கம் இப்போது
பாட்டுத் தாம்பூலம் வழங்கவரு கின்றது
செவிகளை
நீட்டினால் பெறலாம் நிச்சயம் இங்கே!

கவிஞர் முருகுசுந்தரம் – நெருஞ்சி

சேலத்துக் கவிஞர் முருகு சுந்தரம்
பாலத்துச் சோதிடம் பார்க்க மறுப்பவர்

ஈரோட்டை முதலிலும் காஞ்சியைப் பிறகும்
மூன்றவ தாக மூவர் பாடிய
திருவா ரூரையும் திரும்பப் பார்ப்பவர்

கலைஞரைத் தம்மிரு கண்ணாய் மதிப்பவர்
பாவேந்தர் பாடலை நெஞ்சில் பதிப்பவர்
இரும்பு தூங்கும் இடத்தில் பிறந்தும்
கரும்பு தூங்கும் கவிதைகள் வடிப்பவர்

கல்வியிற் சிறந்த கவிமணி அவர்களோ
தொட்டில் கவிஞர், தோழர் இவரோ
கட்டில் கவிஞர் கவிதை இலக்கணக்
கட்டுப் பாட்டுக் கடங்கும் கவிஞர்

மூன்று பக்கமும் முட்களைக் கொண்ட
நெருஞ்சிப் பூவோ நெருங்கினால் குத்தும்
இரவில் குமரியின் இளநீரும் குத்தும்

நெருஞ்சிமுள் பரத்தையும் நெம்புகோல் கம்பனும்
குத்தகை முத்தம் கொடுத்துக் கொண் டிருக்கையில்
நெருஞ்சி முட்களே நினைவுக்கு வந்ததாம்!

நல்ல குடும்பம் பல்கலைக் கழகம்
என்று பாடினாம் எங்கள்பா வேந்தர்
இரண்டே குழந்தைகள் இருக்கும் குடும்பமே
கொட்டாவி விடாத குடும்பமாம்! என்பதை
ஏற்றுக் கொள்வதே எல்லோர்க்கும் நல்லதாம்!

மெருகுக் கவிஞராம் முருகு சுந்தரம்
குழந்தை நலத்தையும் குடும்ப நலத்தையும்
இப்போது பாட இங்கே வருகிறார்.

## கவிஞர் நாமக்கல் நாதன் - முல்லை

வில்வில் வில்வில் சிறந்தவில் சேரன்வில்
நெல்நெல் நெல்நெல் சிறந்தநெல் செந்நெல்
சொல்சொல் சொல்சொல் சிறந்தசொல் தமிழ்ச்சொல்
கல்கல் கல்கல் சிறந்தகல் நடுகல்
தேன்மழைக் கவிஞன்நான் பிறந்தஊர் சிக்கல்
நண்பர் நாதன் பிறந்தஊர் நாமக்கல்.

நட்புக் கினிய நாமக்கல் நாதன்
கோப்பைக் குள்என் குடியிருப் பென்று
கூறாத கவிஞர்! கொள்கையை விட்டு
மாறாத கவிஞர் மறந்தும் இதுவரை
பஜகோ விந்தம் பாடாத கவிஞர்

தேரோட்டத் தெரிந்தவன் சேரன்; இவரோ
காரோட்டத் தெரிந்த கவிஞர் அடிக்கடி
ஈரோட்டார் கருத்தை எழுத்தில் நுழைப்பவர்
நடிக்கவும் பகைவரை நசுக்கவும் மேடையில்
வெடிக்கவும் செய்யுள் வடிக்கவும் தெரிந்தவர்

எனக்கிப் போது திருமணம் எதற்கென
கிசுகிசு நடிகையர் கூறுதல் போலவே
இவரும் கூறி வருகிறார் எனினும்,
கல்யாண மாகாத இந்தக் கவிஞர்
இரவில் மட்டும் எங்கோ போகிறார்

முத்தமிழ்க் கவிஞர் முல்லைப் பூவினைப்
பாதிராத் திரியில் பறிக்கத்தான் போகிறார்

முல்லைப் பூவது வெள்ளைப் பூவாம்
காட்டுப் பூனை பல் காட்டுதல் போலே
அப்பூ மலர்ந்துதன் அழகைக் காட்டுமாம்!

பொன்னந்தி மாலையில் பூக்குமப் பூவினைக்
கோதை மாதர்தம் குழுவில் சூடுவர்
இரண்டே போதும் என்பதை மறந்து
ஐந்தாறு பெற்றால் அவர்கள் வாடுவர்

குழந்தை குட்டிகள் கூடுத லானால்
அந்தக் குடும்பமும் அவர்கள் வாழ்க்கையும்
பாறையில் மோதிய படகுபோ லாகும்.
கெண்டை மீனைக் காட்டும் கண்களே!
சிறுமுல்லை போன்று சிரிக்கும் பெண்களே!

உங்கள் குடும்பம் ஒழுங்காய் நடைபெற
இணைமோனை போன்று இரண்டே போதும்
என்று பாடிட இதோ வருகிறார்
நமது கவிஞர் நாமக்கல் நாதன்

## கவிஞர் ஸ்ரீவிஸ்வப் பிரியா - குறிஞ்சி

வெள்ளக்கால் என்னும் ஊரிலே பிறந்த
மூதறிஞர் சுப்பிரமணிய முதலியார்
நமது ராவணனை நல்லவன் என்று
அணுஅணு வாக ஆராய்ந்து சொன்னவர்
அவரொரு கால்நடை ஆராய்ச்சி யாளர்
வெற்றி கவிஞராய் விளங்கிய முதலியார்
அப்போது பாடிய அகலிகை வெண்பாவை
இப்போது படித்தாலும் இன்பம் சுரக்கும்
அவர்போல் கால்நடை ஆய்வாள ராக
விளங்கும் கவிஞர்ஸ்ரீ விஸ்வப் பிரியா

காவியம் படைப்பவர் இவரின் மனைவியோ
வண்ண ஓவியம் வரைவதில் வல்லவர்
கட்டிய மனைவியாம் கைவிரல் தன்னிலே
ஓவியம் பிறக்கும்! ஒவ்வொரு நாளும்
ஒட்டிஉற வாடி உறங்குக் கவிஞரின்
கண்களில் காதற் கவிதைகள் பிறக்கும்
இங்கமர்ந் திருக்கும் இந்தக் கவிஞர்
குறிஞ்சி மரத்தைக் கூர்ந்து பார்ப்பவர்
வெளிப்படும் அழகினை விழிகளில் சேர்ப்பவர்

குறிஞ்சி அடிக்கடி இலைகளைச் சேர்க்குமாம்
பன்னிரண் டாண்டுக் கொருமுறை பூக்குமாம்
ஆறிரண் டாண்டுகள் ஆனபின் ஒருத்தி
ஒற்றைக் குழந்தையைப் பெற்று வளர்த்திடின்
மேனி மங்குமா? மேல்மேடு தொங்குமா?
குடும்ப நலத்தில் குறைவந்து சேருமா?
துன்பம் தொடுமா? துயரம் சுடுமா?
சுடாது சுடவே சுடாதென் றிங்கே
பாடுதற்கு விசுவப் பிரியா வருகிறார்.

## கவிஞர் டாக்டர் கோ. சமரசம் - மனோரஞ்சிதம்

கண்ணப்ப நாயனார் எவ்வளவு கறுப்போ
அவ்வளவு கறுப்பா யிருப்பவ ராகிய
காவேரிப் பட்டினக் கவிஞராம் சமரசம்
அண்ணா யிசத்தை ஆராய்ந் துரைத்த
புரட்சித் தலைவர்க்கோர் புதிய தளபதி
பரிட்சை எழுதிப் பட்டம் பெற்ற
டாக்டர் இவரோர் அரசியல் ஆக்டர்

நண்பர்க் கிருத்தல்போல் நமக்கும் கைகாலெனும்
உறுப்புகள் இருப்பினும் உலகத்தில் நாமெலாம்
சாமான்ய உறுப்பினர். சமரசம் அவர்களே
சாதனை புரியும் சட்டசபை உறுப்பினர்.
சிந்திக்க வைக்கும் சிறந்தபேச் சாளர்
ஒப்பற்ற முத்தமி ழோசைமூச் சாளர்

கட்டில் கவிதையும் தொட்டில் கவிதையும்
இரவுநே ரத்தில் எழுதும் கவிஞர்
வெள்ளுடை உடுத்தநம் வள்ளலார் அவர்கள்
அருளிய பாடல்கள் அனைத்தும் சமரசம்
இவரது பேச்சும் எழுத்தும் சமரசம்
இரண்டாயிரம் நூல்கள் இருக்குதென் கைவசம்
என்கிறார் இந்த எம்.எல்.ஏ சமரசம்

மனோ ரஞ்சித மானஇக் கவிஞர்
மனோ ரஞ்சித மலரையும், மங்கையர்
நல்ல குடும்ப நலத்தையும் பற்றி
இந்த மேடையில் இப்போது பாடுவார்.

## கவிஞர் தியாக சீலன் - ரோஜா

இவரியார் என்குணவ யாயின், இவரே
ஊருடன் இரவலர்க் கருளித் தேருடன்
முல்லைக் கீந்த பறம்பிற் கோமான்
நெடுமாப் பாரி மகளிர் என்று
பருவப் பெண்களாம் பாரி மகளிரை
ஈடற்ற மன்னவன் இருங்கோ வேளிடம்
அன்றுநம் கபிலர் அறிமுகப் படுத்தினார்
அதுபோல்
தமிழா சிறியராம் தியாக சீலனை
அறிமுகப் படுத்தநான் ஆசைப் படுகிறேன்.

என்னரும் தோழர்களே! இனிய நண்பர்காள்!
இவரியார் என்பீ ராயின் இவரே
புரட்சித் தலைவர்க்குப் பொன்மனச் செம்மல்
எனும்பட் டத்தை ஈந்தவ ராகிய
வாரியா ரவர்களின் மாணவர்; பொங்கும்
மங்கலத் திருமண மானவர்; முத்தமிழ்ச்
சங்கநூல் பயின்றவர்; தமிழ்ப்பற்று மிக்கவர்
சான்றோர் பலரால் பாராட்டத் தக்கவர்.

சிவநேசச் செல்வர்யார்? திருநீல கண்டர்
இவரோ
வாரியா ரவர்களின் அணுக்கத் தொண்டர்
பார சீகத்துப் பாவலன் ரூமிபோல்
ரோஜாவை விரும்பும் ரோஜாப்பூக் கவிஞர்

பல்லொடு பிறப்பது நாகப் பாம்பு
முள்ளொடு பிறப்பது முழுரோ ஜாப்பூ

வண்டொடு தூங்கும் மலராம் அதற்குப்
புதுப்பச் சிலைகளே புடவையாம் மற்றதன்
அடியி லிருக்கும் முட்களே ஆணியாம்

நடிகையர் வீட்டில் கூஜாக்கள் உண்டு
நல்ல தோட்டத்தில் ரோஜாக்கள் உண்டு
சித்திரப் பெண்கள் சிவந்த ரோஜாவை
ஒத்தவர் எனினும், ஒன்பது பிள்ளைகள்
அவர்கள் பெறுவரேல் அவர்கள் உடல்நலம்
குன்றும் குடும்ப வண்டிகுடை சாயும்.

ருதுவாகி மலரும் ரோஜாப் பூவின்
கூரிய முட்கள் குத்துதல் போலே
வறுமையும் துன்பமும் வாழ்வினைக் குத்தும்!

எனவே பெண்கள் எச்சரிக்கையாய்
இருத்தல் வேண்டும் என்று பாடிட
இந்தக் கவிஞர் இப்போது வருகிறார்.

*செல்வி மீனா - அனிச்சம்*

எங்கள் மீனாவும் சிறியவள்
என்ன வயதுனக்கு என்றுநான் கேட்டேன்
இப்போது பத்து வயதெனக்கென்றாள்
அவ்வை பிறந்தநாள் அன்றே பாடினாள்
என்று சொல்வதை ஏற்பதற் கில்லை
ஆயினும்,
பத்துவய தானவள் நிச்சயம் பாடலாம்
பத்தாம் வயதிலென் பையன்கல் லாடன்
மூன்றே அடிகளில் முதற்கவி எழுதினான்.
இந்தச் சிறுமியோ இருநூ றடிகளைக்
கொண்ட பாட்டெழுதிக் கொண்டாடப் படுகிறாள்.

அனிச்சத்தைப் பற்றி அரங்கில் பாடிட
இந்தப் பெண்ணை இப்போது அழைக்கிறேன்.

**கவிஞர் பே.சு. கோவிந்தராசன் - தாமரை**

பேரா சிரியராம் பேசு. கோ. அவர்கள்
தரும புரியிலோர் தமிழ்ச்சங்கம் நிறுவிய
பெரியார் ஆதலின் பெருமைக் குரியவர்
நல்லவர் ஆதலின் நட்புக் குரியவர்
தமிழறிஞர் ஆதலின் தலைமைக் குரியவர்
இவரோ,
பாவிற் சிறந்தவெண் பாவைப் போன்றவர்
பூவிற் சிறந்தசெந் தாமரை போன்றவர்

தாமரைப் பூவைத் தவளை தொடாது
வெறிகொண்ட வண்டு அதனை விடாது.
தண்ணீர் மிகுந்தால் தாமரை சிரிக்கும்
அந்நீர் குறைந்தால் அம்மலர் அழுதிடும்

வண்ணத் தாமரை மலர்போன்ற மங்கையர்
காலிடுக்கு வழியாய்க் கணக்கின்றிப் பெற்றால்
குடும்ப நலமே குன்றிடும் என்பதை
சுட்டிக் காட்டிச் சுவையுடன் பாடிட
செந்தமி ழறிஞர்கோ விந்த ராசனார்
இந்த மேடைக் கிப்போது வருகிறார்.

**கவிஞர் தமிழ் நாடன் - கனகாம்பரம்**

கன்னத்தில் முத்தம் கொடுப்பது பழமை
முக்கோண சின்னத்தில் முத்தம் கொடுப்பது புதுமை
எதுகை மோனையோ டெழுதுதல் பழமை
இரண்டுமே இன்றி எழுதுதல் புதுமை

புதுப்புது எண்ணம் புதுப்புது முறையில்
தடுமாறி வளரினும் தவறல்ல ஆதலால்
புதுக்கவிதை வளர்ச்சியை போற்றும் கவிஞன்நான்.

கவிஞர் தமிழ்நாடன் எழுதும் கவிதைகள்
புகழுக் குரிய புதுமுறைக் கவிதைகள்
இவரது பேச்சும் இவரது எழுத்தும்
தாழ்ந்ததமி ழகத்தைத் தட்டி எழுப்பும்
ஆற்றல் மிக்கது. ஆக்கம் தருவது!

ஆணியில் மணமாம்! அடுத்த மாதமே
கட்டில் மனைவிக்குக் கனத்ததமாம் வயிறு
மாதம்பத் தானதும் மகவையின் றாளாம்
இதுதான் நாட்டின் இன்றைய நிலைமை!

கட்டில் இயக்கமே கர்ப்பமாம் மற்றதன்
தொட்டில் இயக்கமே சொந்தக் குழந்தையாம்
என்பது சரியே எனினும் இதனால்
பிரச்சினை அல்லவா பெருகு கின்றது.

மாலையிட்ட மங்கை ஒருத்தி
ஆண்டுமூன் றாகுமுன் அன்னை யாகித்
தொட்டிலை ஆட்டுதல் தொல்லைக்கு வித்தாம்
கால மறிந்து கருப்பாதை அடைத்தால்
நிலவுல கத்தின் நெருக்கடி தீரும்

என்னரும் தோழரே இதனைக் கேளீர்
அதிவீர ராமனின் அண்ண னாகிய
வரதுங்க ராமனின் மங்கல மனைவி
நெடுங்கால மாக நிலாமுளை போலொரு
குழந்தை இன்றிக் குமுறிக் கொண்டிருந்தாள்.

குமுறியென் செய்வது? கோதையின் ஆசை
பத்தாண்டு கட்குப் பின்னரே பலித்ததாம்

ஈரைந் தாண்டுகள் இடைவெளி விட்டுக்
குழந்தை பெறுபவள் குடும்ப நலத்தைக்
காப்பவள்! அவளே கனகாம் பரத்தைப்
போன்றவள் என்று புதுக்கவிதை முறையில்
பாவலர் தமிழ்நாடன் பாட வருகிறார்.

### குடியரசு - கணிப்பொறி

தாயுமா னாரின் தந்தையும் பூண்டி
அரங்க நாத முதலியார் அவர்களும்
ஆல்பர்ட் ஈன்ஸ்டினும் ஆர்.கே. சண்முகம்
செட்டியார் அவர்களும் சிறப்பாகக் கணக்கிலே
கெட்டிக் காரர்கள்! கீர்த்திக் கிழவர்கள்!

அன்னவர்க் கிருந்த அத்தகு திறமை
கம்பூட்டர் என்னும் கணிப்பொறிக் கிருப்பதை
இன்றுநான் பார்க்கிறோம்! இந்திய நாட்டிலா?
இல்லை இல்லை! இங்கி லாந்திலே!
அதிசயம் புரியும் இங்கி லாந்திலே
அதிசயம் புரியும் அமெரிக் காவிலே!
குருதிக்கொடி பறக்கும் குருஷேவ் நாட்டிலே
கோடையிடிக் கவிஞராம் குடியர சவர்கள்
ஆராய்ச்சி யாளர் அறிவியல் வாதி!

பதட்டம் அவரது பயிற்சி பிறரை
அதட்டும் கவிதைகள் அவரது கவிதைகள்
தங்குதடை இன்றிப் பாடும் தமிழ்க்கவி
இங்கு வரட்டும் எண்ணங்கள் தரட்டுமே!

### மணிமொழி - பசுமைப்புரட்சி

இரத்தப் புரட்சியை இலெனினெனும் வீரன்
நாட்டிலே காட்டினான் நமதுபா வேந்தர்
பாட்டிலோர் புரட்சியைப் பண்ணிக் காட்டினார்

முரசொலி ஏட்டின் முத்திரைக் கவிஞராம்
மணிமொழி என்பவர் வயல்வயிற்றில் நடைபெறும்
பசுமைப் புரட்சியைக் காட்டுவார் பாட்டிலே!

### வெற்றிச் செல்வன் - நிலாக்கல்

அம்மியும் குழவியும் கல்லே - சிலர்
அடிக்க எடுப்பதும் கல்லே
செம்மணி என்பதும் கல்லே - கோயில்
சிலைகள் அனைத்துமே கல்லே!
நிம்மதி யாக உறங்கும் - அந்த
நீண்ட மலைகளும் கல்லே!
கம்பரின் தோற்றம் இதுதான் - என்று
காட்டும் வடிவமும் கல்லே!

தங்கம் என்பது விலைக்கல் - சாதி
சாத்திரம் வைதீக விக்கல்
எங்கும் எதிலும் பதுக்கல் - வானில்
எடுத்து வந்ததே நிலாக்கல்
செங்கனிச் சாறெனப் பாடும் - வெற்றிச்
செல்வனின் தமிழ்க்கவிச் சொற்கள்
மங்கல அரும்பெனும் பறகள்! அவர்
வழங்கட்டும் பாட்டுப் பழங்கள்

## செந்தாமரை - கறைபடா எஃகு

நீருக்கு நுரையும் நெருப்புக்குப் புகையும்
நெல்லுக்குப் பதரும் நினைவுக்கு மறதியும்
வட்ட நிலவுக்கு வயிற்றில் களங்கமும்
தாமரை மலருக்குத் தண்டில் முட்களும்
என்ன தெரியுமா? இவையெலாம் அவற்றின்
கூடப் பிறந்த குற்றங்க ளாகும்!

பல்லின் அழுக்கே அதற்குப் பாசியாம்
சொல்லின் இழுக்கே அதற்குச் சோரமாம்
கட்டி இரும்புக்குத் துருவே களங்கமாம்

மாசு படாத மணியோ அடிக்கடி
தூசு படாத துணியோ இல்லை!

தூசு படாத துணியில்லை எனினும்
மாசுபடாத மங்கையர் உண்டு!
மாசு படாத மங்கையைப் போன்றதே
எவர்சில்வர் என்னும் கறைபடா எஃகு

கறைபடா எஃகோ வாங்குவோர் கைபடும்
வாங்குமுன் மங்கையர் வாள்விழி அதில்படும்

தடாகத்தில் பிறப்பது தாமரை யாகும்
அன்பர்செந் தாமரை அவர்களோ குளிர்ந்த
தடாகத்தில் பிறவாத் தாமரை யாவார்!

அன்னவர் நன்கு ஆங்கிலம் கற்றவர்
வழக்காடு துறையில் வல்லவர் தேமாம்
பழக்கொத்துக் கவிஞர் பகுத்தறிவு வாதி!
பாடி நடித்த பாகவதர் போலிவர்
பல்லில் இடுக்கைப் பார்க்கலாம் மற்றவர்
சொல்லில் இடுக்கோ துளியும் இராது!

காளைக் கவிஞரிப் போது, கறைபடா
எஃகைப் பற்றி இங்கே பாடுவார்!
வெய்யில் சுடினும் இவர்தரும்
செய்யுள் சுடாது தெரியுமா தோழரே!

### *கவிஞர் வாணன் - கவிதைகள்*

ஏகம்ப வாணன் என்பவன் யாரெனில்
கம்ப ரிடத்தில் கல்வி கற்றவன்
ஏகம்ப வாணன் எனும்தம் பெயரை
வாணன் என்று வைத்துக் கொண்டுள
நண்பராகிய நமது வாணனோ
மேதாவி யாகிய மே.வீ. வேணு
கோபாலர் வீட்டில் குந்திக் கற்றவர்

தமிழ்த்தேன் என்னும் தனிக்கவி இதழினை
நடைமுறைத் தமிழில் நடத்தி வருபவர்
கற்றார் மதிக்கும் கவிதைகள் தருபவர்

கண்ட வுடனே காதல் வரலாம்
காதல் வருதல்போல் கவிதை வராது
கவிதை எழுதுதல் கடினமா என்றால்
கடின மன்று எழுதும் கவிதையில்
சிறந்த புதுமைகள் சேர்ப்பதே கடினம்
படிப்பும் நல்ல பயிற்சியும் இருந்தால்
பாவேந்தர் போன்றுநாம் பாடல் எழுதலாம்
இளங்கோவைப் போலவும் எழுதிக் காட்டலாம்

எதுகை போன்றோரே! மோனைபோன் றோரே
எனக்குத் தெரிந்ததை இதுவரை சொன்னேன்
கவிதையைப் பற்றிநம் கவிஞர் வாணன்
என்ன சொல்கிறார் என்பதைக் கேட்போம்

### *கவிஞர் தே.ப. பெருமாள் - நாடகங்கள்*

தே.ப. பெருமாள் சிறந்தகவி ஆதலின்
பாப்பாப் பெருமாள் பதமாய் இதமாய்ப்

பழகத் தெரிந்தவர் பண்பா டறிந்தவர்
அதட்டிப் பேசிய ஆறுமுக நாவலர்
வள்ள லாரைக் காட்டினும் மூத்தவர்
என்னைக் காட்டினும் இக்கவி மூத்தவர்

சிவமணி யாகிய கவிமணி அவர்களின்
மாணவர்; தங்க மானவர்; திருமண
மானவர்; பிறரை மதிப்பவர் பழைய
பாட்டு நூல்களை நன்கு பயின்றவர்

ஷாஜஹான் சாந்தி, தமிழ்ச்சுனை முதலிய
நல்ல நூல்களை நாட்டுக்குத் தந்தவர்

விடுதலைக் காகப் போரிட்ட வீரனாம்
தளவாய் வேலுத் தம்பியைப் பற்றிய
வரலாற்று நூலையும் வடித்துக் கொடுத்தவர்
ஆடவர் பெண்டிர் அடிக்கடி பார்க்கும்
நாடகம் எழுதவும் நன்கு தெரிந்வர்

அவ்வை டி.கே. சண்முகம் அவர்களின்
நண்ப ராகிய நமது பெருமாள்
இப்போ திங்கே இந்த மேடையில்
நாடகச் சிறப்பினை நமக்கு விளக்குவார்.

***கவிஞர். நாரா. நாச்சியப்பன்*** **- சிறுகதை**

பாரதி தாசன் பரம்பரை பெரியது
காலஞ் சென்ற கம்ப தாசனும்
மறைந்துபோய் விட்ட வாணி தாசனும்
மூத்த கவிஞர் முடியரசன் அவர்களும்
நானும் நாரா. நாச்சி யப்பனும்
பாரதி தாசன் பரம்பரைக் கவிஞர்கள்

புகழ்பெற்ற நானோ புடவைக் கவிஞன்
நண்பர் நாரா. நாச்சி யப்பனோ
வெண்ணிலவு போன்ற வேட்டிக் கவிஞர்

இச்சகம் இவரிடம் இல்லை எனினும்
அச்சக முண்டு! அடக்கமும் உண்டு
மெச்சத் தக்க விவேகமும் உண்டு

புகழொடு விளங்கிய பொன்னி இதழில்
கலைஞர் எழுதிய காலத்தி லிருந்தே
இந்தக் கவிஞரும் எழுதத் தொடங்கினார்.
கவிதைகள் எழுதினார் கதைகளும் எழுதினார்

பெருங்கதை சுருங்கினால் சிறுகதை யாகும்
சிறுகதை இன்றைய தேவை யாகும்

தெய்வ புராணம் இன்று தேவையா?
சின்னச் சின்ன சிறுகதை தேவையா?
சிறுகதை யன்றோ நமக்குத் தேவை
தேவையுள்ள சிறுகதை பற்றி
நல்ல கவிஞர் நாச்சி யப்பன்
இந்த மேடையில் இப்போது பாடுவார்.

### *கவிஞர் காவிரிநாடன் - புதினங்கள்*

தேர்வேந்தன் கிருட்டிண தேவ ராயன்
கனிபோல் இனிக்கும் கவிதை எழுதினான்
அன்னவன் பெற்ற அருமைப் புதல்வியாம்
இலக்குமி தேவியும் கவிதை எழுதினாள்
தேர்வேந்தன் கிருட்டிண தேவனைப் போன்று
கரிகால் வளவன் கவியெழுதி னானா?
அன்னவன் புதல்வி ஆதி மந்திதான்

இலக்குமி தேவிபோல் கவிதை எழுதினாள்
காவிரி நாடன் கவியெழுத வில்லை.

அந்தக் காவிரி நாடன் அப்படி
இந்தக் காவிரி நாடன் எப்படி?
இவரோ கவிதை எழுதத் தெரிந்தவர்
மேலும்,
மொட்டுக் கதைகளும் முழுநீள நாவலும்
எழுதக் கூடிய இயற்கைக் கவிஞர்

மிதுனம் கடகம் மேஷம் ரிஷபமா
புதினம்? இல்லை புதினம் என்பது
புத்தக உலகில் புகுந்த புதுத்துறை
தவிட்டுப் பாளையத் தமிழ்க்கவிஞ ராகிய
இந்தக் கவிஞர் இப்போ திங்கே
புதினங்கள் என்னும் பொருள்பற்றிப் பாடுவார்.

### கவிஞர் ஆலந்தூர் கோ. மோகனரங்கம் - முடங்கல்கள்

அன்று வாழ்ந்த ஆனந்த ராங்கரோ
பெரம்பூரில் வாழ்ந்த பெரிய மனிதர்
இன்று வாழும் இந்த ரங்கரோ
ஆலந் தூரில் அசைந்து நடப்பவர்
யாருக்குப் பொங்கல்? என்று கேட்பவர்
சிந்தனைச் செல்வம் தினமும் சேர்ப்பவர்

மற்ற மூக்குத்தி மனைவி கேட்பினும்
வைர மூக்குத்தி வாங்கித் தருகிறேன்
என்று சொல்லிக் கொண்டே யிருப்பவர்
ஆலந்தூர் மோகன ரங்கன் அவர்கள்
யாப்புமுறை அறிந்து பாப்புனைந்து வருபவர்
அடிக்கடி இவரை வானொலி அழைக்கும்
ஆலந்தூர்க் கவிதைகள் அங்கே பழுக்கும்.

புலவர் பலர்க்குப் பொன்னாடை போர்த்திய
ஆலந்தூர் மோகன ரங்கன் அவர்கள்
முடங்கல்கள் பற்றி முழக்கம் செய்திட
வருகவென் றழைத்ததால் இங்கே வந்துளார்.
அடங்கல் என்பது சிங்கத்தைக் குறிக்கும்
முடங்கல் என்பது கடிதத்தைக் குறிக்கும்

அலக்சாண்ட ருக்கு அடிக்கடி அவள்தாய்
கார சாரமாய்க் கடித மெழுதினாள்
மன்னர் ஹுமாயூன் மகனுக் கடிக்கடி
மடங்கும் ஓலையில் முடங்கல் எழுதினார்
வள்ளலார் எழுதினார் வ.உ.சி எழுதினார்
பண்டித நேருதம் பசலை மகளுக்கு
வரலாற்றுக் கடிதம் வரைந்துகொண் டிருந்தார்
அண்ணாவும் தம்பிக் கடிக்கடி எழுதினார்

அங்கும் இங்கும் அமர்ந்திருப் போரே
முடங்கல் குறித்து மோகன ரங்கன்
தப்பில் லாமல் இப்போது பாடுவார்.

### கவிஞர் வா. மு. சேதுராமன் - பொழிவுகள்

தக்கார் பலரிடம் தமிழ்மொழி பயின்று
பெருங்கவிக் கோ வெனப் பிறர்மெச்ச வாழும்
சாது ராமனாம் சேது ராமன்
புகழ்மிகு ஆண்ட நாயக புரத்தில்
பிறந்தவர், நண்பர்கள் நெஞ்சில் நிறைந்தவர்.
வீட்டிலும் தமிழ்ப்பணி வெளியிலும் தமிழ்ப்பணி
ஏட்டிலும் தமிழ்ப்பணி இவற்றைத் தவிர
நம்மவர்கள் குண்டோ வேறு நற்பணி?
என்று கேட்கும் இனிய பாவலர்.

எண்ணச் சுடரெனும் இவரது கவிதைநூல்
பெரிய முயற்சியில் பிறந்த பிரசவம்
இலக்கியத் துறையில் ஏற்பட்ட அனுபவம்

வல்லினம் போன்றவன் நானெனில் இவரோ
இடையினம் மெல்லினம் இரண்டையும் போன்றவர்
நட்புக்கு நல்லவர். நடைமுறை தெரிந்தவர்.
பொழிவுகள் என்னும் பொருளைக் குறித்திவர்
பாட்டரங் கத்தில் பாட வந்துள்ளார்

பொழிவுகள் இல்லையேல் புவிநல மில்லை
ஆதலால் பொழிவுகள் அவசியம் தேவை
அதனா லன்றோ அந்த நாளில்
வீழ்க தண்புனல் என்றானோர் வேதியன்

தோற்றப் பொலிவும் தொங்காத மீசையும்
உளத்தில் தூய்மையும் உடையநம் புலவர்
இப்பொருள் பற்றி இப்போது பாடுவார்.

## *கவிஞர் குருவிக்கரம்பை சண்முகம் - கட்டுரைகள்*

நானும் நமது நாவலர் அவர்களும்
கலைஞர் முதல்வர் கருணா நிதியும்
அமைச்சர் மன்னையும் அரங்கண்ணல் அவர்களும்
தஞ்சைமா வட்டத் தமிழ்ச்சோலை மலர்கள்!
கவிஞர் குருவிக் கரம்பைசண் முகமும்
எங்கள்மா வட்ட எழிற்சோலை மலர்தான்!
பட்டிமன் றத்தில் பாங்குறப் பேசவும்
கட்டுரை எழுதவும் கவிதை தொடுக்கவும்
வல்லவர். குருவிக் கரம்பை நல்லவர்
எம்.ஏ படித்தவர் எம்.லிட் முடித்தவர்
அந்தக் கம்பனை ஆராய்ந்து வருபவர்

காசைத் தேடும் காலத்தில் இவரோ
கைகளைத் தேடு கின்றேன் என்பவர்
இந்தக் கவிஞர் இப்போ திங்கே
கட்டுரை பற்றிக கவிபா வந்துளார்.
கட்டப் படுவது கட்டில் அதுபோல்
கட்டிக் கட்டி வரைவதே கட்டுரை

குருசாமி கட்டுரை குத்தும் பெரியார்
எழுதிய கட்டுரை எதிரியைத் தாக்கும்
அண்ணாவின் கட்டுரை அமுதும் தேனும்
எப்படி இனிக்குமோ அப்படி இனிக்கும்.

மாண்புமிகு நாவலர் வரைந்த கட்டுரை
அறிவகத் திற்கு அழைத்துச் செல்லும்
எச்சில் இரவெனும் எனது கட்டுரை
அச்சில் இருப்பதால் அதைப்பற்றி இங்குநான்
சொல்வதற் கில்லை. தோழர் சண்முகம்
பாடத் துடிக்கிறார் பாட வரட்டும்.

## கவிஞர் மனசை ப. கீரன் - பாராட்டு நூல்கள்

தியாகேசன் என்னும் செந்தமிழ் வள்ளல்
மாமண் டூரெனும் பதியிற் பிறந்தவன்
மதிப்பிற் குரிய மனசை ப. கீரனோ
மன்சுரா பாத்தெனும் பதியிற் பிறந்தவர்
முத்தமிழ்த் தேர்வில் முதன்மை பெற்றதால்
சேதுபதி மன்னரின் செம்பொற் பதக்கம்
பெற்றவர் செய்யுள் இலக்கணம் கற்றவர்

சிறந்த மலேசியா நாட்டுக்குச் சென்ற
சீசாவைத் தொடாமல் திரும்பி வந்தவர்
காலம் இடியுமா? பாலந்தான் இடியுமா?

எந்தப் பாலமும் இடியும் என்பதால்
சந்தச் செய்யுளால் சமதர்மப் பாலம்
கட்டிக் காட்டிய கவிஞர் திலகம்
இந்தக் கவிஞர் எதற்கிங்கு வந்துளார்?
பாராட்டு நூல்களைப் பற்றி இங்கே
பாடுதற் காகப் பாவலர் வந்துளார்.

## மாமன்னர் - கல்லூரி புதுக்கோட்டை

### *முத்தமிழ் விழா - 17.12.1977*

கல்லார்க்கும் கற்றவர்க்கும் வணக்கம். நல்ல
கவிஞர்க்கும் அறிஞர்க்கும் வணக்கம். மீண்டும்
எல்லார்க்கும் என் வணக்கம் நமது நாடு
எழுச்சியுறப் படைவீரம் வேண்டும் நாட்டில்
கல்லாமை ஒழிந்தாக வேண்டும் நல்ல
காவியங்கள் புதிதாகத் தோன்ற வேண்டும்
எல்லார்க்கும் சமஉரிமை வேண்டும். நாட்டில்
இல்லாமை இல்லாமல் ஒழிய வேண்டும்.

தளங்காக்கும் கல்லூரி பிறகல் லூரி
தமிழ்காக்கும் கல்லூரி இக்கல் லூரி
மனங்காத்து மானத்தைக் காத்து வீர
மறமென்னும் போர்வீரம் தன்னைக் காத்து
இனங்காத்து வருகின்ற கோட்டை யென்னும்
இக்கோட்டை புதுக்கோட்டை. இவ்வூ ருக்குச்
சினங்காக்க வும் தெரியும். சிறப்பு மிக்க
செந்தமிழைக் காப்பதற்கும் தெரியு மென்பேன்.

புதல்வர்க்கு விழாவெடுத்தல் சிறப்பா? இல்லை
புலவர்க்கு விழாவெடுத்தல் சிறப்பாம் நாட்டின்
முதல்வர்க்கு விழாவெடுத்தல் சிறப்பா? இல்லை,
முத்தமிழ்க்கு விழாவெடுத்தல் சிறப்பாம்! வீணில்
கதைவளர்க்க விரும்பாத இக்கல் லூரி
கவியரங்க விழாநடத்தக் கண்டு, நாங்கள்
புதுவளர்ச்சி அடைகின்றோம். கவிஞ ரெல்லாம்
புதுவளர்ச்சி அடைகின்றார் விழாவின் மூலம்!

இயற்கைத்தா லாட்டென்னும் தலைப்பில் பாட
இங்குபலர் வந்துள்ளார். இவர்க ளெல்லாம்
செயற்கரிய செய்தவர்கள் இலையென் றாலும்
சிந்திக்க வல்லவர்கள் இவர்கள் பாடல்
மயக்கத்தை நிச்சயமாய் மாற்றும்! நல்ல
மருந்தைப் போல் அறியாமை நோயை நீக்கும்.
பயிற்சிமிக்க கவிஞர்களில் சிறந்த பாடல்
பசிதீர்க்கும் மேன்மேலும் அறிவுண் டாக்கும்.

புயல் வெள்ளம் பூகம்பம் மின்னல் மீறிப்
பொங்கிஎழும் எரிமலைகள் தொடர்ந்து பெய்து
துயர்செய்யும் வானமழை இவற்றைப் பற்றித்
தூயதமிழ்க் கவிஞர்சிலர் இப்போ திங்கே
அயராமல் பாடுதற்கு வந்துள் ளார்கள்
அவர்பாட நாம்கேட்டு மகிழ்வோம். பாட்டு
வயலுழவர் பாடுதற்கு வருகின் றார்கள்
வருமுன்னர் நான்சிறிது பாடு கின்றேன்.

மாற்றறியாப் பசும் பொன்னைப் போற்சி றந்த
மங்கையரின் கோபத்தை ஊட லென்பர்
ஊற்றினது கோபத்தை அருவி என்பர்
உயர்ந்தோரின் கோபத்தைச் சாப மென்பர்
ஆற்றினது கோபத்தை வெள்ள மென்பர்
அரசனது கோபத்தை வீர மென்பர்
காற்றினது கோபத்தைப் புயலென் பார்கள்
கடலினது கோபத்தை ஊழி என்பர்.

செயற்கையெனும் கல்வித்தாய் நெடுநா ளாகச்
செய்யுளெனும் கவிதைத்தா லாட்டு கின்றாள்
இயற்கையெனும் ஆதிமுதல் மூலத் தாயோ
இடிமழையை புயல்வெள்ளம் பூகம் பத்தை
மயக்கமுறும் போதில்தா லாட்டு கின்றாள்
மாந்தர்க்கு மரணத்தை விளைவிக் கின்றாள்
பயிற்சிபெறும் இவ்வுலகில் வாழும் மக்கள்
பல்வேறு துன்பத்திற் காளா கின்றார்.

நமதுமலை கொல்லிமலை, ஆங்கே முன்பு
நல்லியக்கோ டன்என்னும் வள்ளல் வாழ்ந்தான்
நமதுமலை பொதியமலை, ஆங்கி ருந்து
நாள்தோறும் இளந்தென்றல் எழுந்தி ருக்கும்
இமயமலை ஆனைமலை இங்கே உண்டு
ஏழுமலை குடகுமலை இங்கே உண்டு
சமயமலை சாமிமலை இங்குண் டன்றிச்
சதிசெய்யும் எரிமலைகள் இங்கே இல்லை.

தூயமனம் படைத்தோரே இவ்வ ரங்கில்
சூழ்ந்துள்ள பெரியோரே! இதனைக் கேளீர்
ஆயிரத்துத் தொளாயிரத்து ஓராம் ஆண்டில்
அசைந்ததுவாம் இப்பூமி. அசைந்த தாலே
தேயத்து மாந்தரெலாம் குவட்டா தன்னில்
செத்தொழிந்தார். இக்கொடிய நிகழ்ச்சி தன்னைப்
பாயிரத்தைப் போற்சிறந்து விளங்கி வந்த
பாவேந்தர் மனம்நொந்து பாடி யுள்ளார்.

மயில்வந்தால் அந்தமயில் ஆடி வந்தால்
மழைவந்தால் அந்தமழை அளவாய்ப் பெய்தால்
வெயில்வந்தால் இளந்தென்றல் விழித்தெ ழுந்தால்
வெயில் வந்தால் நம்முளத்தில் மகிழ்ச்சி பொங்கும்
புயல்வந்தால் பூகம்பம் வந்தால் ஆற்றில்
புதுவெள்ளம் அளவுக்கு மீறி வந்தால்
உயிர்பிழைக்க யாராலே முடியும்? காற்றின்
ஓட்டத்தை யார்தடுத்து நிறுத்தக் கூடும்.

கள்ளத்தால் சீரழிவார் ஏழை மக்கள்
கண்ணீரால் சிலரழிவர், பொறுமை என்னும்
உள்ளத்தால் சிலரழிவர் கோப மென்னும்
உணர்ச்சியினால் சிலரழிவர், யோனி என்னும்
பள்ளத்தால் சிலரழிவர் வஞ்ச நெஞ்சப்
பரத்தையரால் சிலரழிவர் அந்த நாளில்
வெள்ளத்தால் ஊர்கள்பல அழிந்த தென்பர்
வேடசந்தூர் இந்நாளில் அழியக் கண்டோம்.

படைவீழ்ந்து மாண்டானாம் கலிங்க மன்னன்
படகுகவிழ்ந் திட்டதனால் ஷெல்லி மாண்டான்
அடிவீழ்ந்து மாண்டானாம் ஷெர்ஷா என்பான்
அருவிதனில் வ.வே.சு ஐயர் மாண்டார்
நடைவீழ்ந்து மாளாமல் சேர நாட்டில்
நாய்கடித்து மாண்டானாம் குஞ்சன் நம்பி
இடிவீழ்ந்து சிவாக்கிரக யோகி மாண்டார்
எண்ணற்றோர் மின்னல்தாக் குற்று மாண்டார்

தித்தனென்னும் சோழமன்னன் ஆண்ட நாளில்
திடீரென்று காவிரியின் வெள்ளம் வீங்க
உத்தரவுக் கடங்காத அந்த வெள்ளம்
உறையூரை அழித்ததுவாம். நமது நாட்டை
எத்தனையோ முறைவெள்ளம் அழித்த துண்டாம்
எழுந்தபுயல் காற்றதனால் வீழ்ந்த துண்டாம்
அத்தனைக்கும் மேலாகச் சென்ற மாதம்
அடித்த புயலால்மக்கள் அநேகர் மாண்டார்.

*கவிஞர். அரசன் - எரிமலை*

இந்நாட்டில் இப்போது அரசர்கள் இல்லை
எனினும் இங்கோர் அரசர் அமர்ந்துளார்
இவ்வரசர் கவிதை எழுதும் அரசர்
இவரிப் போது எரிமலை என்னும்
பொருள்பற்றிப் பாடுவார் புகழ்பெற்ற தமிழிலே!

## கவிஞர் வரவேற்றான் - வெள்ளம்

கவிஞர் மன்றத்துக் காவல ராகிய
வரவேற்றான் என்னும் வான்புகழ்க் கவிஞர்
தாய்மொழிப் பற்றும் தனித்தமிழ்ப் பற்றும்
மிக்கவர், அறிஞரால் மதிக்கத் தக்கவர்

இரும்பு போன்றவர் உறுதியில், இலையின்
நரம்பு போன்றவர் தமிழைக் காப்பதில்
கரும்பு போன்றயிக் கவிஞர் இப்போது
வெள்ளத்தைப் பற்றி விளக்கமாய்ப் பாடுவார்.

## கவிஞர் சோமஇ சிவப்பிரகாசம் - மழை

சிறந்த புலவராம் சிவப்பிர காசம்
நல்லவர் பேச்சில் மிகவும் வல்லவர்
கவிதை இலக்கணம் கற்றவர் கவிஞரின்
சிறப்பிடம் நாச்சியார் புரமாம்! இவரின்
இருப்பிடம் இப்போ திவ்வூர் தானாம்
மழையெனும் தலைப்பில் இக்கவி
பிழையில் லாமல் பாடுவார் இங்கே.

## கவிஞர் சுந்தர பாரதி - புயல்

ஆத்தி சூடி வெண்பாவை நமக்கு
யாத்துக் கொடுத்தவர் இராம பாரதி

யானைமே லழகர் நொண்டிச் சிந்தெனும்
புதுநூல் பாடிய புலவர் அவர்தாம்
அரிசமய பக்தர் அனந்த பாரதி

பல்பொருட் சூடா மணிநிகண் டென்னும்
தொல்பொருட் பயன்தரும் சுவடி தந்தவர்
மீசை வளர்க்காத ஈசுர பாரதி

பசைப்பாக்க ளாகிய இசைப்பாக்கள் தந்தவர்
குடுமிப் புலவராம் சுந்தர பாரதி

தெருவிளை யாடல் தெரிந்து, செந்தமிழ்த்
திருவிளை யாடல் நாடகம் செய்து
கீர்த்தி சேர்த்தவர் கிருட்டிண பாரதி

திருத்தொண்டர் மாலை செய்து சிறந்தவர்
குடுகுடு கிழவராம் குமார பாரதி

ஊடற் பதிகமோ உதட்டுப் பதிகம்
உதட்டுப் பதிகமோ உறவுப் பதிகம்
என்பதால் இறைவன் பதிக மாகிய
கூடற் பதிகம் பாடிக் கொடுத்தவர்
குணங்குடி கொண்ட கோவிந்த பாரதி
நித்திரைக் கவிஞர்க்கு மத்தியில் தோன்றிய
முத்திரைக் கவிஞன் முண்டாசு பாரதி

இங்கமர் திருக்கும் இந்தக் கவிஞரோ
சுறுசுறுப் பான சுந்தர பாரதி
புயல்குறித் திந்தப் புதிய பாரதி
இந்த மேடையில் இப்போது பாடுவார்.

### கவிஞர் கரு. செல்லமுத்து - இடி - மின்னல்0

கரு.செல்ல முத்தெனும் சிறந்த கவிஞர்
பட்டிமன் றத்துப் பாங்கினை அறிந்தவர்
ஒட்டிஉற வாடும் உலகியல் புரிந்தவர்
பற்பல கவிதைநூல் படைத்துள்ள கவிஞர்
இடிமின்னல் பற்றி இப்போது பாடுவார்.

## முஸ்லீம் உயர்நிலைப்பள்ளி திருவல்லிக்கேணி இக்பால் நூற்றாண்டு விழா - 4.3.1978

அன்புள்ளம் கொண்டோரே! ஆராய்ச்சி வல்லுநரே!
கன்னித் தமிழில் கவிபாடும் பாவலரே!

ஆசிரியச் சான்றோரே ஆணிப்பொன் மாணவரே
மாசில்லா நல்ல மாணிக்கம் போன்றோரே

வீட்டு விளக்கின் வெளிச்சத்தைப் போன்றோரே
சீட்டுக் கவிபோல் சிறப்புமிகு நண்பர்களே

எல்லார்க்கும் என்வணக்கம் இறவாப் புகழ்பெற்ற
அல்லாமா இக்பால் அவர்கட்கும் என் வணக்கம்

இங்குநாம் கூடி இருக்கின்றோம். ஏனென்றால்
இங்கோர் புதிய நிகழ்ச்சி இருப்பதனால்
சொன்னால் அமுதம் சுரக்கும் சுவைநிகழ்ச்சி
என்ன நிகழ்ச்சி என்பதனை நீரறிவீர்

படம்பார்க்கச் செல்லாமல் பாட்டரங்கின் பக்கத்தில்
இடம்பார்த் தமர்ந்திருக்கும் என்னருமைத் தோழர்களே!

பார சீகத்துப் பாவலர்க் களாகிய
அன்வரி அவர்களும் அமீர்குஸ் ரூவும்

ஜாமியும் பெரியவர் மௌலான ரூமியும்
வான்புகழ் பெற்ற மாககவிக ளாவர்

எல்லார்க்கும் எல்லாம் என்று பாடிய
அல்லாமா முகம்மது இக்பால் அவர்களும்
மண்டலம் புகழும் மகாகவி யாவார்

பிறையைத் தொழுத பெருங்கவி இக்பால்
பஞ்சாப் உருது பார்சி ஆங்கிலம்
ஆகிய மொழிகள் நான்கும்நன் கறிந்தவர்

ஏழாம் எட்வர்ட் இளவரசர் அவர்களும்
புகழ்மிகு ஜகதீச சந்திர போசும்
பிறந்தநன் னாளில் இக்பால் பிறந்தவர்

ஓங்கும் அறிவினால் உயர்ந்து நின்றவர்
படைப்பிலக் கியத்தால் பலரை வென்றவர்

நேருவும் இவரும் நெருங்கிய நண்பர்கள்
ஜின்னா வுக்கிவர் அண்ணா போன்றவர்

இங்கிலாந்து நாட்டில் இக்கவி இருக்கையில்
ஓர்நாள் இரவில் ஒருகவிதை எழுதினார்
அந்தக் கவிதை அடியில் வருமாறு.

மதீர் மஹ்ஸான் ஸே கோயி இக்பால் ஜாகே
மேரே பயாம் கஹ்தே
ஜோ காம் குச் கர்ரஹி ஹேன் கௌம்
உன் ஹேன் மஸாக் ஸஹுஉம் நஹீன்ஹே.
அதாவது,

இக்பாலே, மஹ்ஸான் ஆசிரியரிடம் யாராவது
இதைச் சொல்ல வேண்டுமென்று நான் விரும்புகிறேன்
செயலாற்றும் திறமையுள்ள இனம்
கவிதைக்கு மதிப்புத் தருவதில்லை
என்பதே இப்பாடலின் கருத்தாகும்

மாமேதை அவர்களின் மற்றொரு கவிதையை
உரைநடைத் தமிழில் உரித்து வைக்கிறேன்

உன்னிடம் கவிதை என்னும் பொன் இருந்தால்
வாழ்க்கை என்னும் உரைகல்லில்
அதைத் தேய்த்துப்பார்

நெடுநாள்நீ பஞ்சணையில் புரண்டாய்
இப்போது கட்டாந்தரையில் படுத்துப்பார்

கொதிக்கும் மணலில் உருளவும்
குளிர்ந்த நீரில் மூழ்கவும் கற்றுக்கொள்

எத்தனைநாள் புல்புலைப்போல் கூவி அலைவாய்?
எத்தனைநாள் குளிர்சோலையில் வாழ்வாய்?

மலையின் உச்சியில் ஓர் கூடுகட்டு
வாழ்க்கைப் போராட்டத்திற்கு
உன்னைப் பழக்கு

வாழ்க்கை நெருப்பில்
உன் உடலையும் ஆத்மாவையும்
போட்டெடுக்கப் பழகிக்கொள்

நீ இந்தியாவைக் கண்டதில்லையா?
இதயமுள்ள யாரும் போற்றும்

நாடல்லவா அது!
அதன் ஒவ்வொரு அணுவும்
உலகின்மேல் ஒளி வீசினாலும்
அந்தோ!

அது புழுதியிலும் குருதியிலும்
கிடந்து தத்தளிக்கிறது.

அதன் பூமியில் அடிமைத் தனத்தின்
விதையை ஊன்றியது யார்?
இவர்களை யொத்த
பாபாத்மாக்களன்றோ?

இவ்வாறு பாடிய இவரது பெருமை
எட்டுத் திசையிலும் ஒட்டிக் கொண் டிருப்பதால்
இவரை மகாகவி என்றுநாம் அழைக்கிறோம்.

இங்கமர்ந் திருக்கும் இனிய கவிஞர்கள்
பொன்மாலை அந்திப் பொழுதினில் இங்கே
அல்லாமா இக்பால் அவர்களைப் பற்றிப்
பழகுசெந் தமிழில் பாடுவீ ராக!

*கவிஞர் அரசு மணிமேகலை*
*பாரதிதாசன் கவிநயம்*

அன்று,
ஆதி மந்தியும் அவ்வைமூ தாட்டியும்
பாரி மகளிரும் பாக்கள் பாடினர்.

கம்பன் பாடிய காப்பியத் திற்குச்
சாற்றுக்கவி யளித்த தையலாம் தஞ்சை
அஞ்ச னாட்சியும் அஞ்சா நெஞ்சனாம்

வரதுங்க ராம பாண்டியன் மனைவியும்
எல்லப்ப நாவலர் இல்லக் கிழத்தியும்
தமிழ்வண்ணச் சரபமாம் தண்ட பாணி
சுவாமியின் மனைவி சுந்த ரம்மையும்
பழுது படாத பாக்கள் பாடினர்

வாந்தி புராணம் பாடாது மகாத்மா
காந்தி புராணம் பாடிய பண்டிதை
அசலாம் பகையும் ஆவிடை யம்மையும்
சேஷம் மாளும், திருவ ழுந்தூர்
விஜய வல்லியும் வேம்பம் மாளும்
காலத்திற் கேற்ற கவிதைகள் எழுதினர்.

அவர்களைப் போலவே அரசுமணி மேகலை
என்னும் இந்தப் பெண்பாற் கவிஞரும்
புதுமைக் கவிதைகள் புனைந்து வருபவர்
பகுத்தறிவுக் கருத்தைப் பாக்களில் தருபவர்

கோரிக்கை அற்றுக் கிடக்குதண்ணே- இங்கு
வேரிற் பழுத்த பலா - மிகக்
கொடியதென் நெஞ்ணிடப் பட்டதண்ணே - குளிர்
வடிகின்ற வட்ட நிலா.

என்று பாடிய எமதா சானாம்
கவியரசர் பாரதி தாசனின் கவிநயம்
எப்படிப் பட்ட தென்பதைப் பற்றி
இம்மணி மேகலை இப்போது பாடுவார்.

*கவிஞர் நிர்மலா சுரேஷ்– பாரதிதாசன் கவிநயம்*

நீல வானுக் கொருநிலா, அதுபோல்
நிர்மலா சூரேஷும் கவிவானுக் கொருநிலா

அர–9

இன்றைய பெண்பாற் கவிஞரின் இவரொரு
பூமாலைக் கவிஞர் புகழ்மாலைக் குரியவர்
சூடிக் கொடுத்த சுடர்க்கொடி யாகிய
ஆண்டாள் பாடிய அந்தப் பாடல்கள்
துளசிச் செடியைச் சுற்றும் பாடல்கள்
இந்தப் பெண்மணி இயற்றும் பாடல்கள்
துண்டு நிலவைச் சுற்றிச் சுற்றி
வருகின்ற பாடல்கள்! விஞ்ஞான வண்டுகள்!

ஆடவரின் காதலுக்கும் பெண்கள் கூட்டும்
அடைகின்ற காதலுக்கும் மாற்ற முண்டோ?
பேடகன்ற அன்றிலைப்போல் மனைவி செத்தால்
பெருங்கிழவன் காதல்செயப் பெண்கேட் கின்றான்
வாடாத பூப்போன்ற மங்கை நல்லாள்
மணவாளன் இறந்தால்பின் மணத்தல் தீதோ?
பாடாத தேனீக்கள் உலவாத் தென்றல்
பசியாத நல்வயிறு பார்த்த துண்டோ?

என்று பாடிய எமதா சானாம்
கவியரசர் பாரதி தாசனின் கவிநயம்
எப்படிப் பட்ட தென்பதைப் பற்றி
இந்தப் பெண்மணி இப்போது பாடுவார்.

## கவிச்சுடர் கவிதைப் பித்தன்

*- காலத்தை வழி நடத்தும் இணையற்ற தலைவர்*

புல்லின் நுனியில் பனித்துளி தூங்கும்
புகழெலாம் திசைகளில் தூங்கும்
நெல்லின் முதுகில் கோடுகள் தூங்கும்
நீரினில் சிறுநரை தூங்கும்
சொல்லும் பொருளும் கவிதைப் பித்தன்
தொடுக்கின்ற பாடலில் தூங்கும்
நல்ல கவிஞரே பாடிட வாரீர்
நற்றுந்தேன் கவிதைகள் தாரீர்.

மூங்கில் வணங்குதல்போல் முற்றியபின் நெற்கதிர்கள்
தூங்கும் வரப்பதனைத் தொட்டு வணங்குதல்போல்
அத்தனை பேரையும் அடியேன் வணங்குகின்றேன்
மெத்தப் படித்தோரே மீண்டும் வணங்குகின்றேன்.

செய்யும் எழுதிச் சிறப்பாகத் தொண்டுசெய்வோர்
வெய்யில் கொடுக்கும் விண்கதிரைப் போன்றவராம்
முத்தமிழ் கற்று மொழித்தொண்டு செய்திடுவோர்
சித்திரைக் கோடைக்குச் சிறந்தநுங்கு போன்றவராய்

பகைவிளங்க நன்கு பயின்றோர் கவிதையினால்
திசைவிளங்கும நாடும் திருத்தமுறும் என்பார்கள்.

மாலைப் பொழுது வாராமுன் இன்றிங்கே
ஓதும் புலவர்பலர் ஒன்றாகக் கூடியுள்ளார்
இனிவரும் சமுதாயம் என்னும் தலைப்பினிலே
கனியக் கனியக் கவிபாட வந்திருக்கும்
கவிக்கொண்டல் மா.செ. கதிரவனைப் போன்றவராம்
மலையமான் என்பவரோ மருதநிலம் போன்றவராம்
மற்றிங் கமர்ந்திருக்கும் மாணவர்கள் நால்வரிலே
முற்றாத வெள்ளைநிலா முத்திரையைப் போன்றவராம்
ஆகமொத்த மாகஇங்கே ஆறுபேர் பாடவுள்ளார்.
பூவெடுத்து மாலைகட்டிப் போடுவார் முன்னிலையில்
பாவெடுத்து மாலைகட்டிப் பாடுதற்கு வந்திருக்கும்
நல்ல கவிஞர்களை நானிங்கு அழைக்கின்றேன்
வெல்லச் சுவை வழங்க வே.

தண்ணீரில் இலைபோட்டு விருந்து வைக்கும்
தாமரைப்பூ போன்றேரே! இதனைக் கேளீர்
வெண்ணிலவுப் பாவர்கள் இவர்கள்! செய்யுள்
வித்தகர்கள் கற்பனைக் களஞ்சி யங்கள்.

ஏடறிந்த கவிதைகளைப் பயின்று முன்னோர்
இலக்கணத்தின் வழக்கத்தை நன்கு ணர்ந்து
பாடவந்த புலவர்களே பாட வாரீர்
பார்புகழ் வீராங்கனையைப் பாட வாரீர்

*கவிஞர் மணிமொழி - இரட்டையர்*

முதுசூ ரியரெனும் புலவர் மூத்தவர்
இளஞ்சூ ரியரெனும் புலவர் இளையவர்
மூத்தவர் மூடவராம் இளையவர் குருடராம்
அவரும் இவரும் அண்ணன் தம்பியாம்

கணவனும் மனைவியும் காதல் இரட்டையர்
இவர்களோ இலக்கியம் படைத்த இரட்டையர்

முத்தமிழ் வளர்ந்த முடவரைப் பற்றியும்
வழியற்ற நம்நாட்டு மில்டனைப் பற்றியும்
அரசியல் கவிஞராம் அன்பர் மணிமொழி
தப்பேது மின்றி இப்போது பாடுவார்.

***கவிஞர் கல்லாடன்***

கல்லாடம் எனும்நூல் கற்றவ ரோடு
சொல்லாட முடியா தென்று சொல்லுவர்
இக்கவி யரங்கில் இடம்பெற் றிருக்கும்
கல்லாடன் என்னும் கவிஞ ரோடுநாம்
எல்லோரும் சொல்லாட முடியும். ஏனெனில்
இக்கவி மிகவும் இளங்கவி ஆதலால்

இனிய தோழரே! இப்போ திங்கே
மாம்பிஞ்சுக் கவிஞர் வந்து பாடுவார்.

### வலம்புரி ஜான் பி.ஏ. பிஎல், எம்.பி - தலைவி

எனக்கும் உங்கட்கும் எட்டுச்சான் உடல்தான்
எறும்புக்கும் கூட எட்டுசான் உடல்தான்
நீதிமன் றத்திலும் வீதிமன் றத்திலும்
வாதாடி வெல்லக் கூடிய வலம்புரி
ஜானுக்கு மட்டும் ஒருசான் உடலா?
இல்லை! அவர்க்கும் எண்சான் உடல்தான்
ஆயினும் அவரை ஜானென் றழைக்கிறோம்
எண்சான் அளவில் ஏழுசாண் போக
ஒருசாண் பெயரை உடையவர் கவிஞர்
கர்ம வீரராம் கலைஞரைப் பற்றிப்
பத்துச்சாண் கவிதை பாட வருகிறார்.

### தலைமைக் கவிதை

அன்புள்ளம் கொண்டோரே ஆய்ந்தறிந்த வல்லுநரே!
கன்னித் தமிழில் கவிபாட வந்தோரே!
கல்லூரிக் காவலரே! கற்கண்டு மாணவரே
நல்ல தமிழை நாளும் வளர்ப்போரே!
பேராசிரியரெனும் பெருமையினைப் பெற்றோரே
ஆராய்ந்து பாராட்டும் அறிஞர்களே! நண்பர்களே
மேல்விசா ரத்தில் விளங்குமிந்தக் கல்லூரி
இன்று நடத்தும் இந்தக் கவியரங்கில்
கலந்துகொள்ள வாய்ப்பளித்த கல்வி கஞ்சியங்கள்
அத்தனை பேர்க்குமென் அன்பு வணக்கங்கள்
புத்திசொலும் மேலோர்க்குப் புதிய வணக்கங்கள்
முத்தமிழ் விழாவின் முதல்நாள் நிகழ்ச்சியதனில்
அறிஞர் பலரின் அறிவுரையைக் கேட்டிருப்பீர்
தங்கும் பலபுதிய தத்துவங்கள் உங்களது
காதில் விழுந்திருக்கும். காற்றினிலும் சென்றிருக்கும்.
நேற்று நடந்த நிகழ்ச்சிக்கும் பின் இதற்கோர்
மாற்றாகப் பாட்டு மதுரத்தை வார்தெடுத்து

வழங்குதற் கிங்கு வந்திருக்கும் பாவர்கள்
பழங்காலப் போக்கில் பாடாத தேனீக்கள்
ஏரியென்றும் ஆறென்றும் இருண்ட கடலென்றும்
குளங்குட்டை என்னும் கூறும் இவரையாவும்
ஐந்து வகைப்பபட்ட அழகான நீர்க்குடும்பம்!
நாமும் குடும்பம் நடத்தி வருகின்றோம்
நம்மைப்போல் இவையும் நடத்திவரக் காண்கிறோம்
சீட்டரங்கம் எனிவதுவோ தீயோர்கள் கூடுமிடம்
பாட்டரங்கம் எனிவதுவோ பாவலர்கள் சேருமிடம்
வீட்டில் உருவாகும் வேதனையால் துன்புறுவோர்
பாட்டரங்கம் வந்தால் படுந்துயரம் தீர்ந்துவிடும்.

ஆதலினால் செய்யுள் அரங்கமோர் மாமருந்து
மாதர்தரும் முத்தம்போல் மகிமையுள்ள தேன்விருந்து
ஆறுகுளம் குட்டை ஆர்பாட்டம் செய்யாத
ஏரி, குளிர்ந்தகடல் என்னும் பொருள்பற்றிய
பாவலராம் ஐவரிங்கே பாடுதற்கு வந்துள்ளார்
ஆவலொடு நீங்கள்கேட் டனுபவிக்க வந்துள்ளீர்

கலப்புமணம் செய்துகொண்ட கவிஞராம் வைரமுத்து
அலுப்பகற்றும் புதுக்கவிதை அழகாகப் பாடுபவர்
மாற்றார் திறனை மதிக்கும் அறிவுமதி
சாற்றும் கவிதைகளில் சாரம் மிகுந்திருக்கும்
எழுத்துலம் மெச்சும் எழில்மணியின் பாடல்களோ
பழுத்துக் கொழுத்து பழங்களைப்போல் நன்கினிக்கும்
தூயதமிழ்க் கனவு காணும் துரையரங்கன்
தாயத்துப் பண்டிதரின் தலைக்கனத்தை இறக்குபவர்.

சிறந்த கவிஞரெனத் திகழ்சீனி வாசனென்பார்
அறுந்து போகாத அறிவுரைகள் கூறுபவர்
பொன்போற் சிறந்த புலவர்களோ டொப்பிட்டால்
என்னைத் தவிர்த்திவ் வெல்லோரும் வாலிபர்கள்

வாலிபர்கள் அன்றோ வரிப்புலியைப் போன்றவர்கள்
காலநிலைக் கேற்ற கவிதைதர வல்லவர்கள்
அரங்கில் அமர்ந்திருக்கும் ஐவர்களின் முன்னாலே
நெம்புகோல் கம்பன் நேர்நின்று பாடிடினும்
அம்புக் கவிதைகளால் அவனை விரட்டிடுவர்
அன்பர்களே நண்பர்களே! ஆன்றவிந்த சான்றோரே
அரங்கத் தலைவன்நான் ஆதலினால் நான் எனது
பரங்கிப்பூ கவிதைகளைப் பாடுகின்றேன் கேளுங்கள்.

## புலவர் பொன்னிவளவன்

களாப்பழம் போன்று கறுத்திருந்தாலும்
புகழால் வெளுக்கும் புலவ ராகிய
பொன்னி வளவனைப் புதிதாய் அறிமுகம்
செய்வதென்பது தேவையே இல்லை
ஆயினும் இவரைநான் அறிமுகப் படுத்துதல்
அவசியம் ஏனெனில் தலைவன் ஆதலால்

வாலிபம் தொடாத வயதி லிருந்தே
இனிய கவிதைகள் எழுதி வருபவர்
பொன்னி வளவன் இப்பொன்னி வளவனோ
அஞ்சா நெஞ்சன் அழகிரி சாமிபோல்
அஞ்சா நெஞ்சன் அரசியல் குரலோன்
புகழேந்திப் புலவர்போல் பொன்னி வளவனும்
செந்தமிழ் காத்திடச் சிறைக்குச் சென்றவர்
பெருமைப் படாத புலவர் கவிதையே
இதுநாள் வரையில் இவர்பெற்ற புதல்வர்
அண்ணாவே இவரின் அரசியல் தலைவர்
இயற்கைக் காட்சியே இவரது காயிதம்
எழுத்தும் பேச்சுமே இவரின் ஆயுதம்
சந்தம் இவரது கவிதைக்குத் தந்தம்.

## கவிமணி புலவர் சிதம்பரம் சாமிநாதன்

சக்கரச் செல்வமும் தனிநிலாக் குடையும்
மாமுனி கைக்கு மாறிய பின்னர்ப்
பெண்டொடு பிள்ளையைப் பிரிந்தும், பிரிந்தபின்
தொகைபடு விறகினில் தூங்கும் பிணங்களைப்
புகைபடு கூரெரி சுட்டுப் பொசுக்கும்
மயானம் காத்தும் வந்தோ னாகிய
அருத்தமும் சந்தப் பொருத்தமும் பொருந்த
விருத்தமாய் வடித்த வீரகவி ராயரும்
மாந்தப்பன் பாடிய மதுரகவி ராயரும்

தூதூ எனச்சிலர் தூற்றவும் இதுபோல்
தூதே தெனப்பலர் சொல்லவு மிடந்தரும்
விறலிவிடு தூதெனும் மெத்தைப் புத்தகம்
இப்புவிக் களித்த சுப்பிர தீபனும்

மேம்படுதமிழை மேலும் மேலும்
மேம்படச் செய்த மாம்பழக் கவிஞரும்
புகழ்பெற்று விளங்கிய புலவர் களாவர்.

அவர்களைப் போன்றே அன்பர் சிதம்பரம்
சாமி நாதனும் தமிழ்நாட்டில் இன்று
புகழ்பெற்று விளங்கும் புலவருள் ஒருவர்

புகழ்பெற்று விளங்கும் புலவ ராமிவர்
தனிமையில் இருக்கும் போதில் தவமணி
சொற்பொழி வாற்றும் போதில் சிவமணி
அரங்க மேறினால் அப்போது கவிமணி!
எழுத்தும் பேச்சுமே இவரது பெரும்பணி!

திருமுறை கண்ட சோழனைப் பற்றிச்
சாமியைக் கும்பிடும் சாமி நாதன்
இந்த மேடையில் இப்போது பாடுவார்.

## புலவர் இளஞ்செழியன்

மெச்சும் படியாய் மேடையிற் பேசவும்
கச்சித மாகக் கவிதை எழுதவும்
ஏடு நடத்தவும் இனிக்க இனிக்கக்
கட்டுரை வடித்துக் காட்டவும் வல்லவர்
இற்றமிழ்ப் புலவர் இளஞ்செழியன் ஆவார்.

தேமா இவருக்குத் தி.மு. கழகம்
புளிமா இவர்க்குப் பொய்சொலும் புராணம்
கருவிளம் இவர்க்குக் கவிதைக் காதலி
கூவிளம் இவர்க்குப் பகைவர் கூச்சல்

பெருவளப் பூவே இவரது பிறப்பிடம்
இப்போது சென்னையில் இவரின் இருப்பிடம்
நான்தந்த தலைப்பில் நான்என் பிறந்தேன்
என்பதைப் பற்றி இப்போது பாடுவார்.

## முத்துலிங்கம்

புத்துலிங்கம் இந்நாட்டில் அதிக முண்டு
புகழ்பெற்ற ராமலிங்கம் போலே, கல்விச்
சத்துலிங்கத் துறவிகட்கே பஞ்சம் இங்கே
சாதிலிங்க சாமிநிறைந் துள்ள நாட்டில்
முத்துலிங்கம் என்னலிங்க மென்றால் கொத்து
முத்தமிழில் கவியெழுதும் லிங்கம், அந்த
வித்தைலிங்கம் சிவகங்கைத் தங்கம், பாடல்
விருந்துதர விரைந்துவர வேண்டு கின்றேன்.

## புலவர் நடேசன்

தில்லைக் கோயிலில் குடியிருக்கும்
தெய்வ நடேசன் கால்நொண்டி
நல்ல செந்தமிழ் கற்றவராம்
நண்பர் நடேசன் நூல்வண்டி
சொல்லும் பொருளும் ஒன்றாகத்
தொடையும் அடியும் பாட்டாக
நல்ல காவியம் தந்துவரும்
நண்பர் நடேசன் பாடட்டும்!

## கவிஞர் என்.எஸ். சிதம்பரம்

கீர்த்தி மிகுந்த கிழக்குத் தஞ்சையில்
காரணத் தோடு கத்தும், கருங்கடல்
ஓரத்தில் உள்ள ஊர்களில் ஒன்றுதான்
சிக்கல், அந்தச் சிக்கலில் வாழ்ந்த
அழகி ஒருத்தியை அடைந்திட வேண்டி
முடியுடை வேந்தர் மூவர்க்கும் அவ்விடம்
சங்க காலத்தில் சண்டை நடந்ததாம்

அந்தச் சிக்கலின் அருகே உள்ள
பொருள்வைத்த சேரியில் பூத்த கவிஞரே
இங்கமர்ந் திருக்கும் என்.எஸ். சிதம்பரம்
என்.எஸ். சிதம்பரம் என்னொடு பயின்றவர்
என்னைக் காட்டிலும் வயதில் இளையவர்
முத்தமிழ் அறிவில் எனைவிட மூத்தவர்

தமிழுக் காகவும் தமிழிசைக் காகவும்
தொண்டு செய்யும் தோழர் சிதம்பரம்
பிறைக்கவிஞர் அல்லர், பெரிய கவிஞர்

நானோ, கவிதையில் நாத்திகம் வளர்ப்பவன்
இவரோ, ஆத்திக எண்ணம் வளர்ப்பவர்
எனினும் நாங்கள் இருவரும், திரு.வி.க
பெரியாரைப் போன்று பிரியாத நண்பர்கள்.

ஆடையா டம்பரம் அழகின் விளம்பரம்
அஃதெலாம் நீடித்துச் சுற்றாத பம்பரம்
என்பதை அறிந்த சரக்குச் சிதம்பரம்
இனிய குரலில் இப்போது பாடுவார்.

## *கவிஞர் எழில் முதல்வன் எம்.ஏ*

செழித்த நடையில் சிறந்தஉரை எழுதிப்
பெரும்புகழ் பெற்ற பெருமழைப் புலவரால்
இராம லிங்கம் எழில்முதல்வ னார்

இராம லிங்கம் எழில் முதல்வ னானபின்
தொடுக்கும் பாட்டுத் தொழில்முதல்வ னார்

இனிக்கும் நினைவுகள் என்னும் கவிதைநூல்
தொகுப்பை வழங்கிய தோழர்எழில் முதல்வன்
எம்.ஏ இனியிவர் எம்.லிட் ஆகலாம்

எம்.ஏ பட்டம் பெற்றஇக் கவிஞர்
சும்மா எதையும் சொல்லவே மாட்டார்
சொன்னால் எதற்கும் நுணுக்கங்கள் சொல்லுவார்.

நானும் நீங்களும் நம்மில் சிலரும்
மூன்றெழுத் தல்லவா முத்துக் கென்போம்
இவரோ,
மூன்றுதா சேர்ந்ததே முத்தென்று சொல்லுவார்.
அப்படிப் பட்டவர் அமுதும் தேனும்
என்னும் தலைப்பில் இப்போது பாடுவார்.

## திருமதி நிர்மலா சுரேஷ்

எண்ணெய் ஊற்றாமலே எரியும் சூரியன்
தனித்துநின் றியங்கும் தகுதி உடையது
இந்த உலகில் இத்தமிழ் நாடும்
தனித்துநின் றியங்கும் தகுதி யுடையது.
ஆதலால்,
செந்தமிழ் நாடு சிறந்த நாடு
நெருஞ்சிப்பூப் போன்ற நிர்மலா சுரேஷ்
படைத்துக் காட்டும் பாடல்தேன் கூடு
தேன்கூடு கட்டும் திருமதி நிர்மலா
இந்த மேடையில் இப்போது பாடுவார்.

## *கல்லாடன்*

கல்லாடன் நான்பெற்ற பிள்ளை இந்தக்
காகிதம் போலே அவனுள்ளம் வெள்ளை
எல்லோரும் பாடுகின் றார்கள் நானும்
ஏறி இறங்கி வருகிறேன் என்றான்
நல்லது! பாடுக என்றேன். பதி
னாறு வயதுளோன் பாடவந் துள்ளான்
பல்லவி அல்லவா தொடக்கம் பிஞ்சுப்
பல்லவிக் கவிஞனின் பாடலைக் கேட்பீர்

## *புலவர் பாக்கியசாமி - சீர்திருத்தவாதி அண்ணா*

குறட்டை சாமிகள் அரட்டை சாமிகள்
இருட்டிலே முத்தம் இடுகின்ற சாமிகள்
ஆதாயம் தேடும் அரசியல் சாமிகள்
முத்தமிழ் என்றால் முக்காதம் ஓடுவர்
பாடல்கள் இயற்றும் பாக்கி சாமியோ
சிறந்த நூல்களைத் தேடி ஓடுவார்!

கருங்கடல் மீது கலத்தைச் செலுத்துவோர்
கலவர்! இவரோ கவிச்சுவை வழங்கும்
புலவர்! அறிஞரின் புத்தகப் பிரியர்
பாமாலைப் புலவர் பாடுவார்
பூமாலை மணக்கும் அந்திப் பொழுதிலே!

தலையில் சூடப் படுவது கண்ணியாம்
மார்பில் சூடப் படுவது மாலையாம்.
புள்ளி வண்டுகள் பூவியியல் அறியும்
புற்றில்வாழ் எறும்பு பொரியியல் அறியும்
கரும்புக் கவிஞராம் கருப்பு சாமியோ
நூதனப் பொறியியல் நுட்பத்தை அறிவார்

ஊறறிந்த கதிரோன் உதயத்தைப் போன்ற
பேரறிஞர் அண்ணா - பேச்சுமழை வானம்
ஆதலால், அந்த அறிஞரைப் பற்றி
இட்ட பாடமாய்ப் பொறியியல் எடுத்துப்
பட்டம் பெற்றவர் பாடப் போகிறார்

பாடட்டும் இங்கே! படித்தவர் எழுப்பும்
காற்று வார்த்தைக் கவிதைகள் சந்தனச்
சேற்றிலே நமைத்தள்ளிச் செல்லட்டும் இங்கே!
நெற்றிக் கண்ணன் நெருப்பு சாமியாம்
காக்கும் திருமால் கருப்பு சாமியாம்

தூங்கா துழைத்துச் சுடுப்பட் டிறந்த
காங்கோ லுமும்பா கருப்பு சாமிதான்
காம ராசரும் கருப்பு சாமிதான்

உழுது பயிரிடும் உழவர்க ளெல்லாம்
வகுத்த வயலின் வரப்பு சாமிகள்
தொழுதுண்டு வாழும் தொழும்பர்க ளெல்லாம்
கூம்பிய தாமரைச் சோம்பல் சாமிகள்

சினிமா நடிகர்பொய்ச் சிரிப்பு சாமிகள்
சித்திரப் பெண்களைத் தேடி ஓடுவோர்
அத்தனை பேரும் அரிப்பு சாமிகள்

சு. கருப்புசாமி பி.ஈ - பேரறிஞர் அண்ணா

செந்தமிழ் வளர்த்த சேதுபதி மன்னரின்
நீட்டோலைச் சுவடிப் பாட்டரங் கத்தில்
பாடுதற் கரிய யமகப் பாடல்கள்
பாட வல்லவோர் பண்டிதர் இருந்தார்
அன்னவர் பெயரோ பொன்னுச் சாமியாம்

சான்றோரைக் கொண்டு தமிழ்ச்சங்கம் நிறுவிய
பாலவ நத்தம் பாண்டித்துரைத் தேவரின்
தந்தையார் பெயரும் பொன்னுச் சாமியாம்

பழகுதமிழ் மதுரையில் பாஸ்கர தாசெனும்
ஓங்குபுகழ்க் கவிஞர் ஒருவர் இருந்தார்
அன்னவர் இயற்பெயர் என்ன தெரியுமா?
வெள்ளைச் சாமியாம்! வின்ஸ்டன் சர்ச்சிலும்
மேனாட்டில் வாழ்ந்த வெள்ளைச் சாமிதான்

இங்குப் பாடவந் திருக்கும் சாமியோ
கருப்பு சாமி கற்பனைச் செய்யுள்
விரிப்பு சாமி! மேலுமிச் சாமி
கல்வி நலத்தால் கனிந்த சாமி!

தறியியல் ஆடைகள் தந்திடும் இலக்கணத்
துறையியல் செய்யுளைத் தூக்கி வளர்த்திடும்
பொறியியல் கட்டடப் புதுமை வளர்த்திடும்

## மின்னூர் சீனிவாசன்

மன்னனைப் பாடலாம். மன்னவன் நாட்டின்
இன்னலைத் தீர்த்து வைப்பவன் என்பதால்

வள்ளலை பாடலாம் வள்ளல் பிறர்க்கு
வாரி வாரி வழங்குவான் என்பதால்

நடிகையைப் பாடலாம் நடிகையின் அழகினில்
எச்சிலோ நாற்றமோ இல்லை என்பதால்

மனிதனைப் பாடலாம் ஒவ்வொரு மனிதனும்
அடங்காப் புகழ்வெறி கொண்டவன் ஆதலால்

மின்னாத ஊரெலாம் இருட்டும்! ஒளியினால்
மின்னும் ஊரே விளக்காகூ ராகும்

விளக்கூ ராகிய மின்னூரிர் பிறந்த
சிறந்த கவிஞர் சீனு வாசன்
மனிதனைப் பாட லாமா என்னும்
கேள்விக் கவிதையைக் கேட்போம் இங்கே!

## கவிஞர் முத்துலிங்கம்

சிக்கலிலே வெண்ணெய்லிங்கம்; பாடல் பெற்ற
தேவூரில் நாகலிங்கம்; அந்த லிங்கம்
மக்களைப் போல் பேசாத லிங்கம்; காங்கிரஸ்
மாகலிங்கம் நமைஎதிர்க்கும் கட்சி லிங்கம்
பக்கத்தில் அமர்ந்திருக்கும் முத்து லிங்கம்
படித்தலிங்கம் முரசொலியை எழுப்பும் லிங்கம்
முக்கனிபோல் சுவைசொட்டும் கவிதை தீட்டும்
முத்துலிங்கம் இப்போது பாடல் பெய்வார்.

## மு.வை. அரவிந்தன்

பொறுப்புள்ள தந்தைதான் பெற்ற புதல்வனை
சபையினர் மெச்சும் சான்றோ னாக்குவான்
பொறுப்புள்ள தலைவன் போராட்டம் வந்தால்
பயந்து கொண்டு பதுங்கவே மாட்டான்
பொறுப்புள்ள குடிமகன் பொய்யனாய்ப் புரட்டாய்
மோசக் காரனாய் மாறவே மாட்டான்
வேலூர் அரசினர் கலைக்கல் லூரியில்
அரும்பணி புரியும் அரவிந்தன் அவர்கள்
எழுதும் கவிதையோ இனிக்கும் மாங்கனி
அவரின் உரைநடை அதுவும் பலாக்கனி
பொறுப்புள்ள கவிஞர் பொறுப்புள்ள குடிமகன்



என்மொழி தமிழே ! அந்த
எழில்மொழி அறிவின் ஆக்கம் !
என்மொழி தமிழே! அந்த
எழில்மொழி தேனின் தேக்கம் !
என்மொழி தமிழே! அந்த
எழில்மொழி எனக்குத் தாய்ப்பால் !
என்மொழி தமிழே! அந்த
எழில்மொழி புகழின் போர்வை !

